



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI Volume- 3 Issue:252 28-03-2026 சனிக்கிழமை Free E- Paper ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

28.03.2026 பங்குனி 15
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.15

**திதி:**
இன்று காலை 11.13 வரை தசமி பின்பு ஏகாதசி.

**நட்சத்திரம்:**
இன்று மாலை 4.46 வரை பூசம் பின்பு ஆயில்யம்.

**யோகம் :**
இன்று அதிகாலை 12.13 வரை அதிகண்டம் பின்பு இரவு 9.45 வரை சுகர்மம் பின்பு திருதி.

**கரணம்**
இன்று அதிகாலை 12.02 வரை தைதுலம் பின்பு காலை 11.12 வரை கரசை பின்பு இரவு 10.22 வரை வணிசை பின்பு பத்திரை

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 6.14 வரை யோகம் சரியில்லை பின்பு மாலை 4.46 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

**சந்திராஷ்டமம் :**
இன்று மாலை 4.46 வரை மூலம் பின்பு பூராடம்.

**நல்ல நேரம்**
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30

**இராகு காலம்**
காலை 9.00 – 10.30

**எமகண்டம்**
பிற்பகல் 1.30 – 3.00.

**குளிகை**
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# அதிமுக இரண்டாம் கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியீடு!

**சென்னை, மார்ச் 28:**

அதிமுகவின் இரண்டாம் கட்ட வேட்பாளர் பட்டியலை கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி இன்று (மார்ச் 27) வெளியிட்டுள்ளார்.

ஏற்கெனவே, கடந்த புதன்கிழமை 23 பேர் அடங்கிய முதல்கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்ட நிலையில், தற்போது 127 பேர் கொண்ட இரண்டாம் கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது. மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் முனைப்பில் தேர்தல் களத்தில் பணியைத் தீவிரப்படுத்தியுள்ள அதிமுக, தொகுதிப் பங்கீட்டை முடித்து, வேட்பாளர்களை அறிவித்து வருகின்றது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக 27 தொகுதிகளில், பாமக 18 தொகுதிகளில், அமமுக 11 தொகுதிகளில், தமாகா 5 தொகுதிகள் மற்றும் சிறிய கட்சிகளுக்கு ஓரிரு தொகுதிகளை அதிமுக ஒதுக்கியது. அதிமுக 169 தொகுதிகளில் போட்டியிடுகிறது.



முதல்கட்ட பட்டியலில் முன்னாள் முதல்வரும் கட்சியின் பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி உள்பட 23 முன்னாள் அமைச்சர்கள் போட்டியிடும் தொகுதிகள் அறிவிக்கப்பட்டன.

இந்த நிலையில், 127 தொகுதிகளின் வேட்பாளர்களை கொண்ட இரண்டாம் கட்டப் பட்டியலை கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இருந்து நீக்கப்பட்டவர்களான முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தின் போடி நாயக்கனூர் தொகுதியில் வி.டி. நாராயணசாமியும், முன்னாள் அமைச்சர்செங்கோட்டையனின் கோபிசெட்டிபாளையம் தொகுதியில் வி.பி. பிரபுவும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர்கள் தளவாய்சுந்தரம் கன்னியாகுமரி, எம்.எஸ்.எம். ஆனந்தன் திருப்பூர் வடக்கு, இசக்கி சுப்பையா அம்பாசமுத்திரம், சண்முகநாதன் ஸ்ரீவைகுண்டம், எம்.சி. சம்பத் கடலூர், தாமோதரன் கிணத்துக்கடவு, முக்கூர் என். சுப்பிரமணியன் செய்யார், பாலகிருஷ்ணன் ரெட்டி ஓசூர், மாதவரம் மூர்த்தி மாதவரம், ரமணா திருவள்ளூர் தொகுதிகளில் போட்டியிடுகின்றனர்.

## அதிமுகவில் 127 வேட்பாளர்கள் அறிவிப்பு

அதிமுகவின் சார்பில் ஏற்கெனவே 23 பேர் கொண்ட முதற்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், தற்போது 127 தொகுதிகள் அடங்கிய 2-ம் கட்ட வேட்பாளர்களின் பட்டியலை அக்கட்சியில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். அதன் விவரம்:

1. கும்மிடிபூண்டி (1) - V. சுதாகர்
2. பொன்னேரி (தனி) (2) - சிறுணியம் P. பலராமன்
3. திருத்தணி (3) - திருத்தணி கோ. அரி
4. திருவள்ளூர் (4) - B.V. ரமணா
5. மாதவரம் (9) - மாதவரம் V. மூர்த்தி
6. திருவொற்றியூர் (10) - K. குப்பன்
7. ஸ்ரீபெரும்புதூர் (தனி) (29) - K. பழனி
8. தாம்பரம் (31) - சிட்லபாக்கம் ச. இராசேந்திரன்
9. செங்கல்பட்டு (32) - M. கஜா (எ) கஜேந்திரன்
10. செய்யூர் (தனி) (34) - E. ராஜசேகர்
11. மதுராந்தகம் (தனி) (35) - மரகதம் குமரவேல்
12. காஞ்சிபுரம் (37) - V. சோமசுந்தரம்
13. அரக்கோணம் (தனி) (38) - சு. ரவி
14. காட்பாடி (40) - V. ராமு
15. ஆற்காடு (42) - S.M சுகுமார்
16. வேலூர் (43) - S.R.K அப்பு
17. அணைக்கட்டு (44) - த. வேலழகன்
18. குடியாத்தம் (தனி) (46) - G. பரிதா புருஷோத்தமன்
19. வாணியம்பாடி (47) - G. செந்தில்குமார்
20. ஆம்பூர் (48) - R. வெங்கடேசன்
21. ஊத்தங்கரை (தனி) (51) - T.M. தமிழ்செல்வம்
22. பர்கூர் (52) - E.C. கோவிந்தராசன்
23. கிருஷ்ணகிரி (53) - K. அசோக்குமார்
24. ஓசூர் (55) - P. பாலகிருஷ்ண ரெட்டி
25. பாப்பிரெட்டிபட்டி (60) - மரகதம் வெற்றிவேல்
26. அரூர் (தனி) (61) - V. சம்பத்குமார்
27. செங்கம் (தனி) (62) - T.S. வேலு
28. கீழ்பென்னாத்தூர் (64) - எஸ். இராமச்சந்திரன்
29. ஆரணி (67) - L. ஜெயசுதா
30. செய்யார் (68) - முக்கூர் N. சுப்பிரமணியன்
31. வந்தவாசி (தனி) (69) - P. ராணி
32. திண்டிவனம் (தனி) (72) - P. அர்ஜூனன்
33. வானூர் (தனி) (73) - P. முருகன்
34. விழுப்புரம் (74) - K. விஜயா
35. திருக்கோயிலூர் (76) - S. பழனிசாமி
36. உளுந்தூர்பேட்டை (77) - இரா. குமரகுரு
37. சங்கராபுரம் (79) - R. ராகேஷ்
38. கள்ளக்குறிச்சி (தனி) (80) - ராஜீவ்காந்தி
39. கங்கவல்லி (தனி) (81) - A. நல்லதம்பி
40. ஆத்தூர் (தனி) (82) - A.P. ஜெயசங்கரன்
41. ஏற்காடு (எஸ்டி) (83) - P. உஷாராணி
42. ஓமலூர் (84) - R. மணி
43. மேட்டூர் (85) - G. வெங்கடாஜலம்
44. சங்ககிரி (87) - S. வெற்றிவேல்
45. சேலம் (தெற்கு) (90) - J. வினோத்
46. வீரபாண்டி (91) - டாக்டர் ஸ்ரீ பாலாஜி சுகுமார்
47. சேந்தமங்கலம் (எஸ்டி) (93) - C. சந்திரசேகரன்
48. நாமக்கல் (94) - ஸ்ரீதேவி P.S. மோகன்
49. பரமத்தி வேலூர் (95) - S.சேகர்
50. திருச்செங்கோடு (96) - R. சந்திரசேகர்
51. ஈரோடு (கிழக்கு) (98) - R. மனோகரன்
52. தாராபுரம் (தனி) (101) - P. சத்தியபாமா
53. காங்கயம் (102) - N.S.N. நடராஜ்
54. பெருந்துறை (103) - J.K (எ) S. ஜெயக்குமார்
55. அந்தியூர் (105) - P. ஹரிபாஸ்கர்
56. கோபிச்செட்டிப்பாளையம் (106) - V.B. பிரபு
57. பவானிசாகர் (தனி) (107) - A. பண்ணாரி
58. கூடலூர் (தனி) (109) - பொன். ஜெயசீலன்
59. குன்னூர் (110) -A. ராமு
60. மேட்டுப்பாளையம் (111) - O.K. சின்னராஜ்
61. திருப்பூர் (வடக்கு) (113) - M.S.M. ஆனந்தன்
62. பல்லடம் (115) - பல்லடம் K.P. பரமசிவம்
63. சூலூர் (116) - V.P. கந்தசாமி
64. கவுண்டம்பாளையம் (117) - P.R.S. அருண்குமார்
65. கோயம்புத்தூர் தெற்கு (120) - அம்மன் K. அர்ச்சுணன்
66. சிங்காநல்லூர் (121) - K.R. ஜெயராம்
67. கிணத்துக்கடவு (122) - செ. தாமோதரன்
68. பொள்ளாச்சி (123) - V. பொள்ளாச்சி ஜெயராமன்
69. வால்பாறை (தனி) (124) - D. லட்சுமண சிங்
70. உடுமலைப்பேட்டை (125) - உடுமலை K. ராதாகிருஷ்ணன்
71. பழனி (127) - K. ரவி மனோகரன்
72. ஆத்தூர் (129) - A. விஸ்வநாதன்
73. நிலக்கோட்டை (தனி) (130) - S. தேன்மொழி
74. வேடசந்தூர் (133) - V.P.B. பரமசிவம்
75. அரவக்குறிச்சி (134) - K. செல்வக்குமார்
76. கிருஷ்ணராயபுரம் (தனி) (136) - S. திவ்யா
77. குளித்தலை (137) - S. கருணாகரன்
78. மணப்பாறை (138) - P.L. விஜயகுமார்
79. ஸ்ரீரங்கம் (139) - R. மனோகரன்
80. திருச்சிராப்பள்ளி (கிழக்கு) (141) - க. ராஜசேகரன்
81. திருவெறும்பூர் (142) - ப. குமார்
82. லால்குடி (143) -M. லீமா ரோஸ்
83. முசிறி (145) - N. யோகநாதன்
84. துறையூர் (தனி) (146) - இ. சுரோஜா
85. பெரம்பலூர் (தனி) (147) - இளம்பை இரா. தமிழ்ச்செல்வன்
86. நெய்வேலி (153) - சொரத்தூர் இரா. ராஜேந்திரன்
87. பண்ருட்டி (154) - K. மோகன்
88. கடலூர் (155) - M.C. சம்பத்
89. குறிஞ்சிப்பாடி (156) - A. புவனேந்திரன்
90. புவனகிரி (157) - ஆ. அருண்மொழிதேவன்
91. சிதம்பரம் (158) - K.A. பாண்டியன்
92.சீர்காழி (தனி) (160) - ம. சக்தி
93. பூம்புகார் (162) - S. பவுன்ராஜ்
94. நாகப்பட்டினம் (163) - தங்க. கதிரவன்
95. திருத்துறைப்பூண்டி (தனி) (166) - உ. பாலதண்டாயுதம்
96. திருவிடைமருதூர் (தனி) (170) - இளமதி சுப்ரமணியன்
97. பாபநாசம் (172) - D. சண்முகபிரபு
98. ஒரத்தநாடு (175) - M. சேகர்
99. பட்டுக்கோட்டை (176) - C.V. சேகர்
100. பேராவூரணி (177) - கோவி. இளங்கோ
101. திருமயம் (181) - P.K. வைரமுத்து
102. சிவகங்கை (186) - P.R. செந்தில்நாதன்
103. மேலூர் (188) - P. பெரியபுள்ளான் (எ) செல்வம்
104. மதுரை கிழக்கு (189) - மாங்குளம் K. மகேந்திரன்
105. சோழவந்தான் (தனி) (190) - கி. மாணிக்கம்
106. மதுரை வடக்கு (191) - P. சரவணன்
107. உசிலம்பட்டி (197) - I. மகேந்திரன்
108. ஆண்டிபட்டி (198) - A. லோகிராஜன்
109. போடிநாயக்கனூர் (200) - V.T. நாராயணசாமி
110. கம்பம் (201) - S.T.K. ஜக்கையன்
111. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி) (203) - M. சந்திரபிரபா
112. விருதுநகர் (206) - V.G. கணேசன்
113. அருப்புக்கோட்டை (207) -S. சேதுபதி
114. பரமக்குடி (தனி) (209) - S. முத்தையா
115. திருவாடானை (210) - கீர்த்திகா முனியசாமி
116. முதுகுளத்தூர் (212) - மலேசியா S. பாண்டி
117. விளாத்திகுளம் (213) - R.சத்யா
118. தூத்துக்குடி (214) - சி.த. செல்லப்பாண்டியன்
119. ஸ்ரீவைகுண்டம் (216) - S.P. சண்முகநாதன்
120. சங்கரன்கோவில் (தனி) (219) - திலிபன் ஜெய்சங்கர்
121. கடையநல்லூர் (221) - C. கிருஷ்ணமுரளி
122. தென்காசி (222) - S. செல்வமோகன்தாஸ்
123. ஆலங்குளம் (223) - K.R.P. பிரபாகரன்
124. திருநெல்வேலி (224) - தச்சை N. கணேசராஜா
125. அம்பாசமுத்திரம் (225) - இசக்கி சுப்பையா (எ) இ. சுப்பையா
126. பாளையங்கோட்டை (226) - S. சையது சுல்தான் சம்சுதீன்
127. கன்னியாகுமரி (229) - என். தளவாய்சுந்தரம்

# சோனியா காந்தியின் உடல்நிலையில் முன்னேற்றம்

**புதுடெல்லி, மார்ச் 28:**



காங்கிரஸ் மூத்த தலைவரும், அக்கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவருமான சோனியா காந்தி, உடல்நிலை பாதிப்பு காரணமாக கடந்த 24-ந்தேதி இரவு 10 மணியளவில் புதுடெல்லியில் உள்ள சர் கங்காராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு டாக்டர்கள் குழுவினர் அவருக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நோய்த்தொற்று பாதிப்புகள் காரணமாக சோனியா காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அவருக்கு ஆன்டிபயாட்டிக் மருந்துகள் கொடுக்கப்பட்டு வருவதாகவும் அவருக்கு சிகிச்சை அளித்து வரும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

சோனியா காந்தியின் உடலில் தீவிர பாதிப்புகள் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அவரது உடல்நிலையில் தற்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும், அடுத்த ஓரிரு நாட்களில் சோனியா காந்தி மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீடு திரும்புவார் என்றும் டாக்டர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அயோத்தி ராமர் சிலை நெற்றியில் சூரிய திலகம்: காணொலி வாயிலாக பிரதமர் மோடி வழிபாடு



**புதுடெல்லி, மார்ச் 28:**

அயோத்தியில் உள்ள குழந்தை ராமர் சிலை நெற்றியில், ராமநவமியான இன்று சூரிய திலகம் ஏற்பட்டது. இந்நிகழ்வை பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக தரிசனம் செய்தார்.

ராமநவமியான இன்று, ராமஜென்மபூமியில் உள்ள குழந்தை ராமர் சிலையின் நெற்றியில் சூரிய ஒளி திலகம் (நெற்றிப்பொட்டு) போல் படும் நிகழ்வு இன்று நிகழ்ந்தது. சரியாக நண்பகலில் இந்த சூரிய திலகம், ராமரின் நெற்றியை ஒளிரச் செய்தது. அப்போது, கோயில் அர்ச்சகர்கள், ராமருக்கு சிறப்பு பிரார்த்தனைகளைச் சமர்ப்பித்தனர். இதன் நேரடி ஒளிபரப்பை பிரதமர் மோடி, காணொலி வழியாக தரிசித்தார்.

ராம நவராத்திரி என்று அழைக்கப்படும் ஒன்பது நாள் திருவிழா, ராமரின் பிறந்த நாளான இன்று நிறைவடைகிறது. இந்த ஒன்பது நாட்களும் பராசக்தியின் ஒன்பது அவதாரங்களைச் சிறப்பிப்பதற்கு அர்ப்பணிக்கப்படுகின்றன. இந்த திருவிழா இந்தியாவில் குறிப்பாக வட இந்தியாவில் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படுகிறது.

பக்தர்கள் இந்த ஒன்பது நாளும் விரதம் இருந்து, தங்கள் விரதத்தை இன்று முடிக்கின்றனர். இந்த விரத நாட்களில், மது மற்றும் புகைப்பிடித்தலைத் தவிர்த்து சாத்வீக சைவ உணவுகளை மட்டுமே உட்கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

சைத்ர நவராத்திரி என்று அழைக்கப்படும் இந்த நவராத்திரியின் ஒன்பதாவது நாளான இன்று, ராமர் கோயிலுக்குச் சென்று பக்தர்கள் வழிபடுவது வழக்கம். அந்த வகையில், குழந்தை ராமரை தரிசிக்க ஏராளமான பக்தர்கள் அயோத்தி வந்துள்ளனர். பக்தர்களின் வருகை அதிகரித்துள்ளதை அடுத்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.






# பேஸ்புக், இன்ஸ்டாவில் இனி பேக் ஐடி ஓபன் பண்ண முடியாது.. செக் வைக்க மத்திய அரசு பரிசீலனை

**புதுடெல்லி, மார்ச் 28:**

பேஸ்புக், இன்ஸ்டகிராம், எக்ஸ், ஸ்னாப்சாட் போன்ற சமூக வலைத்தளங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. பயனர்கள், தங்கள் மின்னஞ்சல், மொபைல் எண் கொடுத்து இந்த சமூக வலைத்தளங்களில் கணக்கு தொடங்க முடியும். சமூக வலைத்தளங்களில் போலியாக கணக்கு தொடங்கி மோசடி செயல்களில் ஈடுபடும் நிகழ்வுகளும் சமீப காலமாக அதிகரித்து வரும் நிலையில், இதனை கட்டுப்படுத்த மத்திய அரசு அதிரடி நடவடிக்கை ஒன்றை எடுக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன்படி, இனி பேஸ்புக், இன்ஸ்டாகிராம், எக்ஸ் (X) மற்றும் ஸ்னாப்சாட் போன்ற சமூக வலைதளக் கணக்குகளைத் தொடங்க 'கேஒய்சி' (KYC - Know Your Customer) சரிபார்ப்பு கட்டாயமாக்கப்படலாம் என்று சொல்லப்படுகிறது. இந்தத் திட்டம் அமலுக்கு வந்தால், வங்கி கணக்கு தொடங்குவது அல்லது சிம் கார்டு வாங்குவது போலவே, உங்கள் அடையாளச் சான்றுகளைச் சமர்ப்பித்த பின்னரே சமூக வலைதளக் கணக்குகளைப் தொடங்க முடியும். இது குறித்து மத்திய அரசு இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகவும் தெரிகிறது. அதேவேளையில் பயனர்களின் தனிப்பட்ட உரிமையை மீறும் விதமாக இந்த நடவடிக்கை அமையும் என்று எதிர்ப்புகளும் கிளம்பியுள்ளன.




## திருக்குறள் குறள்-572

கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை



கண்ணோட்டத்தினால் உலகியல் நடைபெறுகின்றது, கண்ணோட்டம் இல்லாதவர் உயிரோடு இருத்தல் நிலத்திற்குச் சுமையே தவிர வேறு பயனில்லை.

## சிந்திக்க ஒரு நொடி



சிரித்துப் பாருங்கள்
உங்கள் முகம்
உங்களுக்கே
பிடிக்கும்...
மற்றவரை சிரிக்க
வைத்து பாருங்கள்
மற்ற அனைவருக்கும்
உங்கள் முகம் பிடிக்கும் .

உஷா முத்துராமன்

## கேசவர் கோவில் ராமர் புரப்பாடு



மயிலை கேசவர் கோவில் நேற்று மாலையில் ராமர் புரப்பாடு நிகழ்வு நடந்தது.



## ஸ்ரீ ராம நவமி உற்சவம் கருட சேவை

அயோத்தி அம்மாஜி மந்திர் ஸ்ரீ ராம நவமி உற்சவம் கருட சேவை புறப்பாடு.

## அனுமந்த வாகன சேவை



பூவிருந்தவல்லி அடுத்த தாசரதி பேட்டை ஸ்ரீ ஹரித வாரண பெருமாள் முதலிரண்டான் சுவாமி திருக்கோயில் பிரம்மோற்சவம் 3ஆம் நாள் திருவிழா இரவு அனுமந்த வாகன சேவை 26.03.26. வியாழன்

## ராமநவமி அபிஷேகம் ஆராதனை



அருள்மிகு ஸ்ரீ ராமபத்திர பெருமாள் கோயில் பொரவச்சேரி ராமநவமி அபிஷேகம் ஆராதனை

# பழனி கணக்கன்பட்டியில் ஓம் ஸ்ரீசத்குரு பழனி சுவாமிகளின் புனர் பூசம் பூஜை : பக்தர்கள் திரண்டனர்

**பழனி மார்ச் 28:** திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள கணக்கன்பட்டி சற்குரு பீடத்தில் பக்தர்களால் பெரிதும் போற்றப்படும் ஓம் ஸ்ரீசத்குரு பழனி சுவாமிகளின் 12-ஆம் ஆண்டு மஹா குருபூஜை பெருவிழா கடந்த பிப்ரவரி மாதம் வெள்ளிக்கிழமை தொடங்கி 28 ந்தேதி சனிக்கிழமை வரை விமரிசையாக நடைபெற்றது.

இங்கு அமாவாசை பௌர்ணமி மற்றும் சுவாமியின் புனர் பூசம் நட்சத்திரம் தினத்தில் சிறப்பு பூஜைகள் நடைபெறும். இந்த விஷேச நாட்களில் தமிழகம் முழுவதும் பக்தர்கள் கணக்கன்பட்டி சற்குரு பீடத்தில்



சுவாமி வழிபாடு செய்வார்கள். அதன் படி பங்குனி மாதம் புனர் பூசம் நட்சத்திரம் குருபூஜை திருவாசகம் முற்றோதல் வழிபாடு நிகழ்ச்சியோடு தொடங்கி பகல் 12 மணி பூஜையில் சுவாமி ஜீவசமாதியில் மலர் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. அதிகாலையில் கோபூஜை நடைபெற்றது.

காலைமுதல் இரவுவரை சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. வரும் ஏப்ரல் 1 ந்தேதி புதன் கிழமை பௌர்ணமி பூஜை நடைபெறுகிறது. பக்தர்களுக்கு தேவையான வசதிகளை பழனி கணக்கன்பட்டி மோகன் தோட்டம் ஓம் ஸ்ரீசற்குரு பழனி சாமி அறக்கட்டளை சார்பில் செய்யப்பட்டு உள்ளது.

# பிரமிக்க வைக்கும் பூந்துறை ஈஸ்வரன் கோவில் ராஜகோபுரம்

**ஈரோடு, மார்ச் 28:** ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் பூந்துறையில் பூந்துறை காடை குல மக்களின் குலதெய்வம் ஸ்ரீஅங்காளம்மன் கோவில், ஸ்ரீஅலமேலு மங்கை லட்சுமி சமேத ஸ்ரீதாமோதர பெருமாள் கோவில், ஸ்ரீபாகம்பிரியாள் உடனமர் ஸ்ரீபுஷ்பவனேஸ்வரர் கோவில் என மூன்று கோவில்களின் கும்பாபிஷேகம் 25.03.2026 புதன்கிழமை காலை முறையே 5.30-6.15, 6.40-7.15, 9.05-9.30 என்ற மணிக்கணக்கில் விமரிசையாக நடைபெற்றது.

சுமார் 50 ஆயிரம் மக்கள்



குமாபாபிஷேக நிகழ்வின் போது திரண்டு வந்தனர். புதிதாக கட்டப்பட்ட ஈஸ்வரன் கோவில் ராஜகோபுரம் பார்ப்பவர்களை பிரமிக்க வைத்தது.

அனைத்து ஏற்பாடுகளையும் கோவில் நற்பணிக் குழுவினர் மிகச்சிறந்த முறையில் செய்து இருந்தார்கள். மூன்று நாட்களாக நடைபெற்ற அன்னதானத்தில் சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இரவு 9.00 மணி வரை ஈஸ்வரன் மற்றும் பெருமாள் கோவில்களில் திருக்கல்யாண உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. கோலாகலமாக நடைபெற்ற கும்பாபிஷேகம் காவல்துறை அதிகாரிகள் கடாடுக்கோப்பாக வழி நடத்தினர். சிறப்பித்த அனைத்து பொதுமக்களுக்கும் நன்றி! நன்றி!

# செய்யாறு இந்தோ அமெரிக்கன் பள்ளியில் ஜூனியர் ரெட் கிராஸ் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா!

**செய்யாறு, மார்ச் 28:** செய்யாறு இந்தோ அமெரிக்கன் பள்ளியில் ஜூனியர் ரெட் கிராஸ் மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான சான்றிதழ் வழங்கும் விழா வெகு விமரிசையாக நடந்தது. இந்தோ அமெரிக்கன் பள்ளியின் ஜூனியர் ரெட் கிராஸ் சங்க மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான சான்றிதழ்கள் வழங்கும் விழா மற்றும் ஆலோசகர்களுக்கு பரிசளிப்பு விழா நேற்று நடந்தது.

இந்நிகழ்ச்சிக்கு இந்தோ அமெரிக்கன் பள்ளி முதல்வர் அ.ப.சையத் அப்துல் இலியாஸ் தலைமை தாங்கினார். சங்க ஆலோசகர் மு.அஞ்சுகம் வரவேற்புரை நிகழ்த்தினார். சிறப்பு விருந்தினராக செய்யாறு



மாவட்டக் கல்வி அலுவலர் செந்தில்முருகன் கலந்து கொண்டு, பள்ளி அளவிலும், மாவட்ட அளவிலும், ஜூனியர் ரெட் கிராஸ் சங்க மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இதைத் தொடர்ந்து மாணவ-மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடந்தது. இதற்கான ஏற்பாடுகளை பள்ளியின் துணை முதல்வர் க.கோவேந்திரன் செய்திருந்தார். ஆலோசகர் ஜெயந்தி நன்றி கூறினார்.

# பங்குனி உத்திர திருவிழா அழைப்பிதழ்

**தஞ்சாவூர், மார்ச் 28:** தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் வருகிற (01.04.2026) புதன்கிழமை அன்று பங்குனிஉத்திரத்தை முன்னிட்டு காலை 9 மணிக்கு அலமேலு மங்கை தாயாருக்கு சிறப்பு திருமஞ்சனம், மதியம் 12 மணிக்கு



தீப ஆராதனை, அதனைத் தொடர்ந்து ததி ஆராதனம் மற்றும் மாலை 7 மணிக்கு அலமேலு மங்கை தாயாருக்கு சிறப்பு சந்தனக்காப்பு அலங்காரம், தாயார் உள்புறப்பாடு, இரவு 8 மணிக்கு தீப ஆராதனை ஆகிய நிகழ்வு சிறப்பாக நடைபெற்ற உள்ளது. அனைவரும் வருக!

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், தர்ம பரிபாலன கமிட்டி, அலமேலு மங்கை தாயார் மாதர் சங்கம் மற்றும் உபயதார்கள் செய்து வருகின்றனர். செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

## ராமர், சீதை, லக்ஷ்மணருக்கும், சிறப்பு அபிஷேகங்கள்

**திருவண்ணாமலை மார்ச் 28:** ஸ்ரீ ராமநவமியை முன்னிட்டு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீராமருக்கு கணேஷ் ஐயர் அவர்களால் ஆதி அம்மனுக்கும், மூலவருக்கும், ராமர், சீதை, லக்ஷ்மணருக்கும், சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலை



களால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பக்தி பாடல்கள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு ஸ்ரீ ராமரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## இரட்டை கருட சேவை



நேற்று இரட்டை கருட சேவை திருப்புல்லாணி.

## ஸ்ரீ ராம நவமி சிறப்பு வழிபாடு



**ஈரோடு,மார்ச் 28:** ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரித்து, வண்ணப் பூக்களால் அர்ச்சனைகள் செய்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு ராமர், சீதா தேவி, லக்ஷ்மணர், ஆஞ்சநேயரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வசந்த நவராத்திரி 8-ஆம் நாள் உற்சவம் சிறப்பு அலங்காரத்தில்

**திருவண்ணாமலை .மார்ச் 28:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் மார்ச் 28:



ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் வசந்த நவராத்திரி உற்சவம் 8-ஆம் நாள்( பயம் நீக்கம் ) & சத்ரு வெற்றி ஸ்ரீ மீனாட்சி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, சிறப்பு பூஜைகள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வசந்த நவராத்திரி உற்சவத்தில் கலந்துகொண்டு மீனாட்சி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ராம நவமி உத்சவ்



ராம நவமி உத்சவ்

## வாக்கு எண்ணுகை மையத்தில் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு



**திருவண்ணாமலை மார்ச் 28:** தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாநகராட்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள வாக்கு எண்ணுகை மையத்தில் தேர்தல் முன்னேற்பாடு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் வாக்கு எண்ணுகை மையத்தில் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திருப்புல்லாணி



நான்காம் நாள் காலை திருப்புல்லாணி



# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### அதிமுக கூட்டணியில் போட்டியிடும் ஐஜேகே வேட்பாளர்கள் பட்டியல் வெளியீடு

தமிழ்நாட்டை அடுத்து ஆளப்போவது யார்? என்பதை தீர்மானிக்கும் சட்டமன்ற தேர்தல் ஏப்ரல் 23-ந்தேதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் வருகிற 30-ந்தேதி தொடங்குகிறது. ஆளும் தி.மு.க. இந்த தேர்தலில் 'மெகா' கூட்டணி அமைத்து களம் காண்கிறது. அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் பலமிக்கதாகவே உள்ளது.

அ.தி.மு.க. கூட்டணியில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நிறைவடைந்துவிட்டது. பா.ஜ.க. - 27, பா.ம.க. - 18, அ.ம.மு.க. - 11, த.மா.கா. - 5, இந்திய ஜனநாயக கட்சி - 2, தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், புரட்சி பாரதம், சிங்க தமிழர் முன்னேற்றக் கழகம் தலா ஒரு இடத்திலும் களம் காண்கிறது. கூட்டணி கட்சிகளுக்கு 66 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது போக, 168 தொகுதிகளில் அ.தி.மு.க. களம் காண்கிறது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் பல்லாவரம், குன்னம் ஆகிய தொகுதிகள் இந்திய ஜனநாயக கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்திய ஜனநாயக கட்சியின் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அதன்படி பல்லாவரம் தொகுதியில் வெங்கடேசன், குன்னம் தொகுதியில் சரண்யா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

### தொடரும் இழுபறி... தவெக வேட்பாளர் அறிமுகம் கூட்டம் 29-ந்தேதிக்கு மாற்றம்

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் 23-ந்தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 30-ந்தேதி தொடங்க உள்ளது. இதையொட்டி அரசியல் கட்சிகள் வேட்பாளர் அறிவிப்புகளை வெளியிட தீவிரம் காட்டி வருகிறது. பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. முதல் கட்டமாக 23 தொகுதிக ளுக்கு வேட்பாளர்களை அறிவித்துள்ளது. ஆளும் கட்சியான தி.மு.க. வேட்பாளர் பட்டியலை இன்று வெளியிட உள்ளது.

இந்தநிலையில், சட்டசபை தேர்தலில் 234 தொகுதிகளிலும் தனித்து களம் காணும் த.வெ.க., வேட்பாளர் பட்டியலை இறுதி செய்துள்ளது. 234 தொகுதிகளுக்கும் த.வெ.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தவெகவில் சில தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. இதனால் இன்று வேட்பாளர் பட்டியல் வெளியாகும் என கூறப்பட்ட நிலையில், இன்னும் பட்டியல் இறுதியாகவில்லை.

இதனால் வேட்பாளர் அறிமுக நிகழ்ச்சியை இன்றைக்கு பதிலாக (29-ம் தேதி)க்கு தவெக ஒத்திவைத்துள்ளது. வேட்பாளர் அறிமுக நிகழ்ச்சிக்காக வந்த தவெகவினர் மீண்டும் சொந்த ஊர்களுக்கே புறப்பட்டு சென்றனர்.

### கமல்ஹாசன் செய்தது தியாகம் அல்ல துரோகம்: வானதி சீனிவாசன்

பா.ஜனதா கட்சி தேசிய மகளிரணி தலைவி வானதி சீனிவாசன் புதுவையில் நிருபர்களிடம் கூறியதாவது:-

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு எதிராக, இந்தியா கூட்டணி பெயர் மட்டும் தான் இருக்கிறது. ஆனால் அவர்களுக்குள் கூட்டணி கிடையாது. எந்த அளவுக்கு காங்கிரஸ்-தி.மு.க., கம்யூனிஸ்டுகள் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதற்கு புதுச்சேரி சிறந்த உதாரணம். ஒரே தொகுதியில் இரு கட்சிகளின் வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

சிறிய மாநிலத்தில் கூட அவர்களால் ஒற்றுமையாக செயல்பட முடியவில்லை. இவர்களால் மாநிலத்தை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்ல முடியாது. தேர்தலில் இது நட்பு ரீதியான போட்டி என்று சொல்கிறார்கள். தி.மு.க.-காங்கிரஸ் பிரிந்திருப்பது எங்களுக்கு சாதகமல்ல. தேர்தலே எங்களுக்கு தான் சாதகம். கோவை வடக்கு தொகுதியில் நான் போட்டியிடுவது குறித்து கட்சி தலைமை தகுந்த நேரத்தில் அறிவிக்கும். மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசனுக்கு தி.மு.க. ஒரு அசைன் மெண்ட் கொடுத்தது. அதை அவர் முடித்துவிட்டார். அவருக்கு பின்னால் நின்றவர்கள் தெருவில் நிற்கின்றனர். கமல்ஹாசன் செய்தது தியாகம் அல்ல. தொண்டர்களுக்கு அவர் செய்த துரோகம். இவ்வாறு அவர் கூறினார்.

### "தேர்தலில் போட்டியில்லை என்பதில் உறுதி" - சரத்குமார் மீண்டும் அறிவிப்பு

தேர்தலில் போட்டியிடவில்லை என்ற முடிவில் உறுதியாக இருப்பதாக நடிகர் சரத்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று கமலாலயத்தில் நடிகர் சரத்குமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கட்சியில் பொறுப்பு வழங்க வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை கட்சி பார்த்துக் கொள்ளும். நான் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்ற முடிவை மறு பரிசீலனை செய்யப் போவதில்லை. ஒருமுறை அந்த முடிவை எடுத்துவிட்டால் எடுத்தது தான். என்னை போட்டியிடுங்கள் என்று சொன்னால் கூட, தேர்தலில் பணி செய்யாமல் என்னால் போட்டியிட முடியாது. அதனால், என்னுடன் இருப்பவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று தான் இன்று வரை அவர்களிடம் கூறி வருகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## விதிகளில் மாற்றம்: 8 லட்சம் தபால் வாக்குகள் பாதிக்கப்படும் அபாயம்

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தபால் வாக்கு அளிப்பதில் கொண்டு வரப்பட்டுள்ள புதிய விதிகளால், தேர்தல் பணிகளில் ஈடுபடவுள்ள 8 லட்சம் பேரின் வாக்குகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களின்போது, லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அரசுத் துறைகளைச் சேர்ந்தோர் வாக்குச்சாவடி உள்ளிட்ட தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இதனால், தேர்தல் பணிகளில் ஈடுபடுவோர், அத்தியாவசியப் பணிகளில் ஈடுபடுவோர் பிரிவின்கீழ் கொண்டுவரப்பட்டு, தபால் வாக்கு அளிக்கும் சிறப்பு அனுமதியை தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது. இதன்படி, தேர்தல் பணிகளில் ஈடுபடுவோர் தாங்கள் பணிபுரியும் மாவட்டத்திலேயே



தபால் வாக்குகளை செலுத்த முடியும்.

தபால் வாக்குகள் அளிப்பதற்காக, ஆட்சியர் அலுவலகங்களிலும் வாக்குப் பதிவுக்கு சில நாள்கள் முன்பே தபால் வாக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்படும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், காவல் துறையினர், ஊடகத் துறையினர் எனப் பிரிக்கப்பட்டு, குறிப்பிட்ட நாள்களில் அவர்கள் தபால் வாக்குகள் அளிக்கும் நடைமுறை இருந்து வந்தது.

மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெறப்படும் தபால் வாக்குகள், அவரவர் தொகுதிக்கு அனுப்பப்பட்டு, வாக்கு எண்ணிக்கை நாளன்று தபால் வாக்குகளுடன் எண்ணப்படும். கடந்த தேர்தல்வரை இந்த நடைமுறையே இருந்து வந்தது.

இந்நிலையில், தற்போது புதிய நடைமுறையை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி, வெளி மாவட்டங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், காவலர்கள், ஊடகத் துறையினர் உள்ளிட்டோர், அந்தமாவட்டங்களில் உள்ள துறைசார் அலுவலர்களிடம் தபால் வாக்குக்கான 12டி படிவத்தை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவத்தை தங்கள் சொந்த மாவட்டங்களில், தங்களுக்கு வாக்கு உள்ள தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும். பின்னர், தேர்தல் நடத்தும் அலுவலர் தெரிவிக்கும் நாளன்று அங்கு சென்று தபால் வாக்குகளை செலுத்த வேண்டும் என்று மாற்றப்பட்டுள்ளது.

இதனால் வெளி மாவட்டங்கள் மற்றும் தொலைதூரத்தில் பணிபுரிபவர்களுக்கு தேவையற்ற அலைச்சலும், அலைக்கழிப்பும் ஏற்படும்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு நாளில் 75,000 வாக்குச்சாவடிகளில் வாக்குப் பதிவு பணிகள் உள்ளிட்ட பணிகளில் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் காவல் துறையினர், ஊடகத் துறையினர், துணை ராணுவத்தினர், முன்னாள் ராணுவத்தினர் உள்பட 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் என 8 லட்சம் பேர் பணியில் ஈடுபடவுள்ளனர்.

புதிய நடைமுறையின்படி இவர்களுக்கு தபால் வாக்குக்காக இரண்டு நாள்கள் விடுமுறை கிடைப்பதில் பிரச்னை உள்ளது. மேலும் தபால் வாக்குக்கு புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டதால், எத்தனை பேர் இருமுறை அலைந்து தபால் வாக்கு செலுத்துவார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

நூறு சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு

## மதிமுகவின் உத்தேச வேட்பாளர் பட்டியல் வெளியானது

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் 23-ந் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு, தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், தே.மு.தி.க., ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டு உள்பட பல்வேறு கட்சிகள் இடம்பெற்றுள்ளன. கூட்டணியில் உள்ள பெரும்பாலான கட்சிகளுக்கு தொகுதி பங்கீடு நிறைவடைந்துள்ளது.

அதன்படி திமுக - 164, காங்கிரஸ் - 28, தே.மு.தி.க. - 10, விடுதலை சிறுத்தைகள் கட்சி -8, இந்திய கம்யூனிஸ்டு கட்சி - 5, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி - 5, ம.தி.மு.க. - 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - 2, மனிதநேய மக்கள் கட்சி 2, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி - 2, மனிதநேய ஜனநாயக கட்சி - 1, எஸ்.டி.பி.ஐ. -1, முக்குலத்தோர் புலிப்படை - 1, தமிழர் தேசம் கட்சி - 1 என தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திமுக கூட்டணி கட்சிகள் போட்டியிடும் தொகுதிகள் பட்டியலை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாரப்பூர்வ அறிவிக்க உள்ளார்.

அதே போன்று ம.தி.மு.க. வேட்பாளர்கள் பட்டியல் இன்று மாலை வெளியிடப்படும் என்று வைகோவும் அறிவித்து இருந்தார்.

அதன்படி, மதிமுகவின் உத்தேச வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளது. அதில் மதிமுகவுக்கு மதுரை மேற்கு தொகுதி ஒதுக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உத்தேச வேட்பாளர் பட்டியல்:-

மதுரை தெற்கு - பூமிநாதன்

மொடக்குறிச்சி - செந்தில்நாதன்

சீர்காழி - செந்தில் செல்வன்

கடையநல்லூர் - தி.மு. ராஜேந்திரன்

## அ.தி.மு.க.வின் கோட்டையான அவினாசி தொகுதியில் மத்திய மந்திரி எல்.முருகன் போட்டி



தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் 23-ந் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு, அதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 30-ந் தேதி தொடங்க இருக்கிறது. சட்டசபை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற்று, அதே நாளில் தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட உள்ளது. இந்த நிலையில் தி.மு.க., அ.தி.மு.க., நா.த.க. த.வெ.க. உள்பட அனைத்து கட்சிகளும் தங்களுடைய தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதி பங்கீடு விவகாரம், தேர்தல் பிரச்சாரம், தேர்தல் வாக்குறுதிகள் உள்ளிட்டவற்றில் அனைத்து கட்சிகளும் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன.

இந்த சூழலில் சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள பா.ஜனதாவுக்கு 27 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த 27 இடங்களில் அவினாசி தொகுதியும் அடங்கும். கொங்கு மண்டலத்தில் முக்கிய தொகுதியான அவினாசி தனி தொகுதியாகும். இந்த தொகுதி அ.தி.மு.க. கோட்டையாக இருக்கிறது.

1984 முதல் 2021 வரையிலான 9 தேர்தல்களில் அ.தி.மு.க. 8 முறை வெற்றி பெற்றுள்ளது.

எனவே இந்த தொகுதியை அ.தி.மு.க. எப்போதும் விட்டுக்கொடுத்ததில்லை. முதல் முறையாக இந்த தொகுதியை பா.ஜனதாவுக்கு அ.தி.மு.க. விட்டுக்கொடுத்துள்ளது.

இந்த தொகுதியில் பா.ஜனதா முன்னாள் மாநிலத் தலைவரும், மத்திய மந்திரியுமான எல்.முருகன் போட்டியிட உள்ளார்.

இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ளது. இதற்கிடையே, அவினாசி தொகுதியில் இப்போதே மத்திய மந்திரி எல்.முருகன் பிரசாரத்தை தொடங்கி விட்டார். அங்குள்ள காசி விநாயகர் கோவிலில் தரிசனம் செய்து அவர் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார். அவருடன் கூட்டணி கட்சியைச் சேர்ந்தவர்களும் பிரசாரத்தை தொடங்கி விட்டனர்.

## பட்டியல் வெளியாகும் முன்பே தொகுதியை அறிவித்தார் நயினார் நாகேந்திரன்

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் 23-ந் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு, அதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 30-ந் தேதி தொடங்க இருக்கிறது. சட்டசபை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற்று, அதே நாளில் தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட உள்ளது. இந்த நிலையில் தி.மு.க., அ.தி.மு.க., நா.த.க. த.வெ.க. உள்பட அனைத்து கட்சிகளும் தங்களுடைய தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக கூட்டணி பேச்சுவார்த்தை, தொகுதி பங்கீடு விவகாரம், தேர்தல் பிரச்சாரம், தேர்தல் வாக்குறுதிகள் உள்ளிட்டவற்றில் அனைத்து கட்சிகளும் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. இந்த சூழலில் சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றுள்ள பா.ஜனதாவுக்கு 27 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில் பா.ஜ.க. மாநில



தலைவர் நயினார் நாகேந்திரன் இந்த முறை நெல்லையை விட்டு சாத்தூரில் போட்டியிட உள்ளதாக ஆரம்பம் முதலே செய்திகள் அடிபட்டு வந்த நிலையில், தற்போது அது உறுதியாகி உள்ளது. இதுதொடர்பாக இன்று செய்தியாளர்கள் சந்திப்பில் பேசியபோது, "அனைத்து தொகுதிகளிலும் தேசிய ஜனநாயக கூட்டணி நிச்சயமாக வெல்லும் என்றும் தான் சாத்தூர் தொகுதியில் போட்டியிட உள்ளதாகவும்" அவர் தெரிவித்தார்.

முன்னதாக பா.ஜ.க. போட்டியிடும் தொகுதிகள் பட்டியலில் நெல்லைக்கு பதிலாக சாத்தூர் தொகுதி இடம்பிடித்திருந்தது. பா.ஜ.க.வின் வேட்பாளர்கள் பட்டியல் இன்னும் வெளியாகாத நிலையில் தனது தொகுதியை நயினார் நாகேந்திரன் உறுதி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மாம்பழ சின்னத்தை முடக்க முடியாது: ராமதாஸ் மனு நிராகரிப்பு

பாமக பெயர், சின்னம், கட்சிக் கொடி ஆகியவற்றை அன்புமணி உள்ளிட்டோர் பயன்படுத்த தடை விதிக்க வேண்டும்; கட்சியின் தலைவராக தன்னை அறிவிக்க வேண்டும் எனக் கோரி, பாமக நிறுவனர் ராமதாஸ் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கில் தன்னையும் இணைக்கக் கோரி கட்சியின் பொதுச் செயலர் வடிவேல் ராவணன் தாக்கல் செய்த மனுவை உரிமையியல் நீதிமன்றம் ஏற்கவில்லை.

இதையடுத்து அவர் தொடர்ந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்ற விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்தது. இதை எதிர்த்து ராமதாஸ் தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை விரைவாக விசாரிக்கக் கோரி ராமதாஸ் மனு தாக்கல் செய்ய வேண்டும். அந்த மனுவை உரிமையியல் நீதிமன்றம் மூன்று நாள்களுக்குள் விசாரித்து இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டது.

அதன்படி உரிமையியல் நீதிமன்றத்தில் ராமதாஸ் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவுக்கு அன்புமணி தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு உரிமையியல்





நீதிமன்ற நீதிபதி எம்.தாமபிரபு முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது ராமதாஸ் தரப்பில், அன்புமணியின் பதவிக் காலம் கடந்த ஆண்டே முடிந்துவிட்டது. சிறப்பு நிர்வாகக் குழு ராமதாஸை தலைவராகத் தேர்வு செய்துள்ளது. ஆனால், ராமதாஸின் ஒப்புதல் இல்லாமல் கட்சியின் பொதுக் குழுக்கூட்டத்தை சட்டவிரோதமாக அன்புமணி கூட்டியுள்ளார்.

இதன் அடிப்படையில் மோசடியான முகவரியை தேர்தல் ஆணையத்தில் கொடுத்து மாம்பழ சின்னம் ஒதுக்கீடு உத்தரவு தொடர்பான கடிதங்களைப் பெற்றுள்ளார். இதுதொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் அனுப்பியும் எந்தப் பலனும் இல்லை என்று வாதிடப்பட்டது.

அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் தேர்தல் நடவடிக்கைகள் தொடங்கிவிட்டதால், அதற்கு தடை விதிக்கும் விதமாக நீதிமன்றங்கள் எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது.

எனவே, மாம்பழ சின்னத்தை அன்புமணி தரப்புக்கு வழங்கக் கூடாது என்ற கோரிக்கையை ஏற்று இந்த நீதிமன்றம் உத்தரவிட்டால், அது தேர்தல் நடைமுறைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் அது வாக்காளர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும்.

எனவே, ராமதாஸ் தரப்பு கோரிக்கையை தற்போது ஏற்க முடியாது.

தேர்தலுக்குப் பின்னர் மாம்பழ சின்னம் , கட்சியின் தலைவர் உள்ளிட்ட விவகாரம் குறித்து விசாரித்து முடிவு செய்யப்படும். எனவே, மாம்பழ சின்னத்தை முடக்க வேண்டும் என்ற ராமதாஸ் தரப்பின் இடைக்கால கோரிக்கையை ஏற்க முடியாது. எனவே, ராமதாஸ் தாக்கல் செய்த இடைக்கால மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. சட்டம் அனுமதித்தால் ராமதாஸ் தேர்தல் ஆணையத்தை அணுகி நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம். இந்த வழக்கில் வடிவேல் ராவணனின் மனு விசாரணைக்கு ஏற்கப்படுகிறது என நீதிபதி உத்தரவிட்டார்.

# தமிழகத்தைச் சேர்ந்த 10 போலீஸ் அதிகாரிகளுக்கு ஐபிஎஸ் அந்தஸ்து

**சென்னை, மார்ச் 28:**

தமிழகத்தைச் சேர்ந்த 10 போலீஸ் அதிகாரிகள் ஐபிஎஸ் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. தமிழக காவல் துறையில் 3 கட்டங்களாக பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக 2-ம் நிலை காவலர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலமும், உதவி ஆணையர்கள் (டிஎஸ்பி) தமிழக அரசால் நடத்தப்படும் குரூப்-1 தேர்வு மூலமும், அடுத்த கட்டமாக மத்திய அரசு (யுபிஎஸ்சி தேர்வு) மூலமும் ஐபிஎஸ் அதிகாரிகளும் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் குரூப்-1 தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படும் போலீஸாருக்கு பணிக் காலத்தின் அடிப்படையில் ஐபிஎஸ் அந்தஸ்து வழங்கப்படும். அந்த வகையில், துணை ஆணையர் மற்றும் எஸ்பி அந்தஸ்தில் தற்போது தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றி வரும் எஸ்.அரவிந்த், என்.ஸ்டீபன் ஜேசுபாதம், பி.தங்கதுரை, எஸ்.எஸ்.மகேஷ்வரன், வி.ஆர்.ஸ்ரீநிவாசன், டாக்டர் கே.பிரபாகர், சி.சியாமளா தேவி, எம்.கிங்ஸ்லின், வி.சியாமளா தேவி, டாக்டர் எல்.பாலாஜி சரவணன் ஆகிய 10 போலீஸ் அதிகாரிகளுக்கு ஐபிஎஸ் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மத்திய உள்துறை அமைச்சகம் பிறப்பித்துள்ளது.

# 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்த தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சி




**சென்னை, மார்ச் 28:**

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சென்னையில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த தேர்தல் விழிப் புணர்வு கண்காட்சி பேருந்து சேவையை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் தொடங்கி வைத்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" எனும் தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சிப் பேருந்து மற்றும் வாகனங்கள் சேவை தொடக்க விழா ரிப்பன் மாளிகை வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் பங்கேற்று விழிப்புணர்வு வாகன சேவையை கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இந்த பேருந்து சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 தொகுதிகளிலும் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் நிறுத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

# திருப்பதி கோதண்டராமர் கோவிலில் ராமநவமி உற்சவம்



**திருப்பதி, மார்ச் 28:**

திருப்பதி தேவஸ்தானம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூயிருப்பதாவது:-

திருப்பதி கோதண்டராமர் கோவிலில் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் 29-ந்தேதி வரை 3 நாட்கள் ராமநவமி உற்சவங்கள் நடக்கிறது. அதன் ஒரு பகுதியாக இன்று காலை மூலவர்களான சீதா, ராமர், லட்சுமணர், ஆஞ்சநேயருக்கும். உற்சவர்களுக்கும் அபிஷேகம் செய்யப்படுகிறது. மாலை 3 மணியளவில் ராமநவமி ஆஸ்தானம் நடக்கிறது. இரவு 7 மணிக்கு உற்சவர் கோதண்டராமர் அனுமன் வாகனத்தில் எழுந்தருளி கோவிலின் நான்கு மாடவீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார்.

நாளை (சனிக்கிழமை) காலை சீதா, லட்சுமணர் சமேத கோதண்டராமருக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. காலை 9 மணியில் இருந்து 10 மணி வரை முத்துமாலையை யானை மீது வைத்து ஊர்வலம் நடத்தப்படுகிறது. மாலை 6 மணியில் இருந்து இரவு 9 மணிவரை சீதா-ராமர் திருக்கல்யாண உற்சவம் நடக்கிறது.

29-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணிக்கு திருப்பதியில் அமைந்துள்ள நரசிம்ம தீர்த்தத்தில் இருந்து புனித நீர் எடுக்கப்பட்டு, ஊர்வலமாக கோவிலுக்குக் கொண்டு வரப்படுகிறது. அந்தப் புனித நீரால் மூலவர், உற் சவர்களுக்கு சதுர்தச கலச ஸ்நாபன திருமஞ்சனம் செய்யப்படுகிறது. இரவு 7 மணியில் இருந்து 8.30 மணி வரை ராமர் பட்டாபிஷேக வைபவம் நடக் கிறது. அதன்பிறகு உற்சவர்கள் தங்கத் திருச்சி வாகனத்தில் உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

# நன்மங்கலம் ஆஞ்சநேயர் கோவிலில் ராம நவமி விழா



**சென்னை, மார்ச் 28:**

மகாவிஷ்ணுவின் அவதாரங்களிலேயே மிகவும் உயர்வானதாக போற்றப்படும் அவதாரம் ராம அவதாரமாகும். தெய்வம் மனிதராக அவதரித்து, மனிதர்கள் தர்மத்தின் வழியை பின்பற்றி வாழ வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டிய அவதாரம் என்பதால் இது மிகவும் சிறப்புக்குரியதாக கருதப்படுகிறது. ராமர் அவதரித்த தினத்தை ராம நவமி திருநாளாக கொண்டாடுகிறோம். இந்த ஆண்டு ராம நவமி நாளை (27ம் தேதி) நாடு முழுவதும் கொண்டாடப்பட உள்ளது.

இந்தநிலையில், ஸ்ரீமன் நாராயணன் நின்றான், கிடந்தான், அமர்ந்தான், இருந்தான் என்று நான்கு நிலையாக திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்த திருத்தலம் திருநீர்மலை ஆகும். திரேதாயுகத்தில் இருந்து எம்பெருமான் ஸ்ரீராம சந்திரமூர்த்தி சீதா பிராட்டியுடன் அனேக புண்ணிய தலங்களில் அர்ச்சாவதாரமூர்த்தியாக எழுந்தருளி பக்தர்களை காத்து வருகிறார்.

திருநீர்மலையின் அபிமான தலமாகிய சென்னை கோவிலம்பாக்கம் அருகே நலம் தரும் நன்மங்கலத்தில் உள்ள ஸ்ரீத்ரிநேத்ர தசபுஜ வீர மங்கள ஆஞ்சநேயர் கோவில் உள்ளது. இங்கு ராம நவமி விழா ஆண்டு தோறும் வெகுவிமரிசையாக நடைபெற்று வருவது வழக்கம்.

அந்தவகையில், இந்த ஆண்டு ராமநவமி விழா கடந்த 21-ம் தேதி தொடங்கியது. தினமும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

ஸ்ரீராமர், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீஹயக்கீர்வர், தன்வந்திரி, ஸ்ரீ சுதர்சனர், ஸ்ரீநரசிம்மர் ஆகியோருக்கு இன்று திருமஞ்சனமும், லட்சார்ச்சனை சங்கல்பமும் நடந்தது.

அதனைதொடர்ந்து மூலவர் ராமர், ஸ்ரீஆஞ்சநேயர் உற்சவருக்கு தங்க கவசம் சாற்றப்பட்டது.

நேற்று சீதா கல்யாண வைபவம் நடத்தப்பட்டு, வீதியுலா நடந்தது.

விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீராமபாத சேவா டிரஸ்ட் நிர்வாகிகள் செய்துள்ளனர்.

# அயோத்தி ராமர் கோவிலில் ராம நவமி விழா தொடங்கியது

**புதுடெல்லி, மார்ச் 28:**

அயோத்தி ராமஜென்ம பூமியில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள ராமர் கோவிலில் தினமும் ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர்.

இக்கோவிலில் இந்த ஆண்டு ராம நவமி விழாவை விமரிசையாக நடத்த முடிவு செய்யப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி விழாவின் தொடக்கமாக, இன்று ராமர் கோவிலில், அனைத்து வேத சடங்குகளையும் பின்பற்றி கொடியேற்றம் (துவஜாரோஹணம்) நடைபெற்றது. காவி நிறத்திலான இக்கொடியில் 'ஓம்' சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

19 அடி 7 அங்குல உயரமுள்ள கொடிமரத்தில் இக்கொடி ஏற்றப்பட்டுள்ளது; இக்கொடியானது 9 அடி 3 அங்குல நீளமும், 4 அடி 7 அங்குல அகலமும் கொண்டது.

ராம நவமி தினமான நாளை காலை முதல் ஸ்ரீராமருக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடைபெறுகிறது.

விழாவை முன்னிட்டு பெருந்திரளான பக்தர்கள் பால ராமரை தரிசனம் செய்ய குவிந்து வருகின்றனர்.

ராம நவமியை முன்னிட்டு சூரியனின் கதிர்களை மூலவர் பால ராமரின் நெற்றியில் ஒளிரச் செய்யும் காட்சி நடைபெறும். இது சூரிய திலகம் வழிபாடு எனப்படுகிறது.

தேர் செல்லும்போது அதை எளிதாக நிறுத்தும் வகையில் ஹைட்ராலிக் பிரேக் வசதி அமைக்கப்பட்டுள்ளது. தேரின் முன்பகுதியில் 4 குதிரைகள், யாழி, பிரம்மா உள்ளிட்ட பொம்மைகள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்படும்.

இதன்படி தேரின் மொத்த எடை 350 டன் ஆகும்.




# நலம் தரும் மருத்துவம்



## உடல் ஆரோக்கிய குறிப்புகள்

*நன்னாரி வேர் கஷாயம் சாப்பிட்டால் நன்றாகப் பசிக்கும்.

*நீரிழிவு நோயாளிகள் வெந்தயக்கீரை சாப்பிடுவது நல்லது.

*முட்டைக் கொசு அடிக்கடி சாப்பிட்டு வந்தால் குடற்புண்கள் ஆறிவிடும்.

*சிறிது பனங்கற்கண்டை இளநீரில் கரைத்துக் குடிப்பதால் சிறுநீர் எரிச்சல் குணமடையும்.

*நிழலில் உலர்த்திய மாம்பூவைக் கஷாயம் வைத்துக் குடிக்க சீதபேதி நிற்கும்.

*ஆடாதொடை, துளசி, தூதுவளை, தும்பை ஆகிய மூலிகை இலைகளை கசாயம் வைத்து குடிக்க கபத்தைப் போக்கும்.

*முருங்கைப் பூ, முட்டை இரண்டும் சேர்ந்து பொரியல் செய்து சாப்பிட உடல் உறுதி பெறும்.

*நீரிழிவு நோயாளிகள் வாழைக்காயை அடிக்கடி சாப்பிடலாம்.

*மணத்தாக்காளிப் பழத்தை பச்சையாக சாப்பிட்டு வந்தால் உடலில் இளமையும் வசீகரமும் போகாது.

*மந்தாரைப் பூவைக் கஷாயம் தயாரித்துப் பருகி வந்தால் மூக்கிலிருந்து ரத்தம் வடிவது நிற்கும்.

*துளசி விதையை அரைத்து உட்கொள்ள பிள்ளைப் பேற்றிற்கு பின் ஏற்படும் அடிவயிற்றுவலி போய்விடும்.

*மணத்தக்காளிக் கீரையை சூப் தயாரித்து குடித்தால் உணவுப்பாதையில் ஏற்படும் குடல் புண்கள், வாய்ப்புண்கள் எல்லாம் சரியாகும்.

*எருக்கம்பூவின் பாலை முள் குத்திய இடத்தில் தடவ, முள் இருந்தால் வெளியே வந்துவிடும் வலியும் போய்விடும்.

*அரளிப் பூவைத் தலையில் வைத்துக் கொண்டால் தலையில் பேன்கள் போய்விடும்.

*நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும் திப்பிலியை வாங்கிப் பொடி செய்து, சிறிது பொடியை தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் தொண்டையில் ஏற்படும் வலி குணமாகும்.

*பக்கவாத நோய் வராதிருக்க வாழைப்பழத்தை தொடர்ந்து உண்ண வேண்டும்.

*கால் சுளுக்குக்கு செம்மண், உப்பு, புளி மூன்றையும் நீரில் கரைத்துக் காய்ச்சி காலில் பற்றுப்போட சுளுக்கு போய்விடும்.

*அன்னாசிப் பழத்தை தொடர்ந்து உண்டு வர வயிற்றுப் பூச்சிகள் அழிந்துவிடும்.

*பவளமல்லிகையின் இலைகளை கசக்கிச் சாறெடுத்து சமபங்கு தேன் கலந்து ஒரு அவுன்ஸ் அளவு தினமும் இருவேளை பருகினால் காய்ச்சல் குணமடையும்.

*மிளகு, சீரகம் சம அளவு எடுத்து தூளாக்கி தினமும் கால் ஸ்பூன் சாப்பிட செரிமானக் கோளாறுகள் குணமடையும்.

# 'செயற்கை எரிபொருள்' - எரிசக்தி துறையில் ஒரு புதிய சகாப்தம்! இறக்குமதிக்கு விடை கொடுக்கும் சீனா!



சீனா தனது கச்சா எண்ணெய் தேவையில் 70%க்கும் மேலாக இறக்குமதியை நம்பியுள்ளது. ஈரானுக்கு எதிரான போர் மற்றும் பாரசீக வளைகுடாவில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழல் காரணமாக தனது எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக புதிய மாற்று வழிகளைக் கண்டறிந்துள்ளது.

ஷாங்காயைத் தளமாகக் கொண்ட கார்பனாலேஜி (CARBONOLOGY ) நிறுவனம் காற்று, நீர் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி செயற்கை எரிபொருளை மலிவு விலையில் தயாரிக்கும் புரட்சிகரமான தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது. 2024 இல் முன்னாள் டெஸ்லா நிர்வாகியால் தொடங்கப்பட்ட இந்த ஸ்டார்ட்-அப், கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைக்கும் நோக்கில் உற்பத்தியை அதிகரிக்கத் தயாராகி வருகிறது.

காற்று மற்றும் நீரிலிருந்து கார்பன் டை ஆக்சைடை பிரித்தெடுத்து அதை பெட்ரோல், டீசல், ஜெட் எரிபொருள் மற்றும் பிற பொருட்களாக மாற்றும் ஒரு முறையை உருவாக்கியுள்ளது. எரிபொருளாக மாற்றும் இந்த தொழில்நுட்பம் வழக்கமான பெட்ரோல், டீசல் தயாரிப்பிற்கு மாற்றாக கார்பன் சமநிலை எரிபொருளை உருவாக்குகிறது. கச்சா எண்ணைய் இறக்குமதியை நம்பி இருக்கும் நிலையை மாற்றி, சுற்றுச்சூழல் பாதிப்பை குறைக்க உதவும்.

இந்த நிறுவனம் தற்பொழுது பெரிய அளவில் உற்பத்தியைத் தொடங்கி, எரிபொருள் சந்தையில் கச்சா எண்ணெய்க்கு போட்டியாக மலிவு விலையில் எரிபொருளை வழங்கத் திட்டமிட்டுள்ளது. சந்தையில் விற்கப்படும் சாதாரண பெட்ரோல் விலைக்கு இணையாக செயற்கை எரிபொருளை தயாரிக்கும் செலவைக் குறைத்துள்ளதாக உரிமை கோரியுள்ளது. ஆனாலும் விரிவான தொழில்நுட்ப தகவல்களைப் பற்றி அவை இன்னும் பகிரவில்லை.

தொழில்நுட்பம் எப்படி செயல்படுகிறது தெரியுமா?

வெறும் காற்றையும் நீரையும் பயன்படுத்தி பெட்ரோல் மற்றும் டீசலை உருவாக்கும் புதிய தொழில்நுட்பத்தை சீனாவைச் சேர்ந்த கார்பனாலஜி என்ற நிறுவனம் கண்டறிந்துள்ளது. காற்றிலுள்ள கார்பன் டை ஆக்சைடை ($CO_2$) அதிநவீன இயந்திரங்கள் மூலம் பிரித்தெடுத்து, அதனுடன் நீரில் இருந்து பிரிக்கப்படும் ஹைட்ரஜனை இணைப்பதன் மூலம் இந்த திரவ எரிபொருள் தயாரிக்கப்படுகிறது. இதற்கு சூரியஒளி மற்றும் காற்றாலை போன்ற இயற்கை எரிசக்தி ஆதாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த எரிபொருளை பயன்படுத்த வாகனத்தின் இஞ்சினில் எந்த மாற்றமும் செய்ய தேவையில்லை என்றும் கூறப்படுகிறது.

இருப்பினும் செயற்கை எரிபொருட்களை உற்பத்தி செய்வது இன்னும் விலை உயர்ந்ததாகவும், அவற்றுக்கு அதிக அளவு ஆற்றல் தேவைப்படுவதாகும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறைந்த செயல்திறன், அதிக செலவுகள் மற்றும் உள்கட்டமைப்பு பற்றாக்குறை போன்ற சவால்கள் இருப்பினும் கார்பனாலஜி நிறுவனம் தனது தொழில்நுட்பத்தை வணிகப் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் நோக்கத்தில் ஷாங்காயில் பெருமளவில் முதலீடு செய்துள்ளது.

# "குழுமம்" ஒரு டிஜிட்டல் உலகம்

ரகுநாதன் அந்த 'அன்பு நண்பர்கள்' வாட்ஸ்அப் குழுவின் அட்மின் (ADMIN). ஓய்வுபெற்ற பிறகு, அவருக்கு உலகம் என்பதே அந்தத் திரையில்தான் சுருங்கியிருந்தது. குழுவின் அமைதியைக் காப்பதே தன் வாழ்நாள் லட்சியமாகக் கொண்டிருந்தார்.

அன்று காலை ரகுநாதன் கண்விழித்தபோது, குழுவில் 200 செய்திகள் குவிந்திருந்தன. எட்டிப் பார்த்தால், எல்லாம் 'குட் மார்னிங்' பிக்சர் மெசேஜ்கள் மற்றும் தேவையற்ற பார்வேர்ட் மெசேஜ்கள். "தயவுசெய்து வதந்திகளைப் பகிராதீர்கள்" என்று ரகுநாதன் எச்சரித்தும், யாரோ ஒரு உறுப்பினர் ஒரு வினோதமான மருத்துவக் குறிப்பை அனுப்பியிருந்தார்.

ரகுநாதன் உடனடியாகச் செயல்பட்டு அந்த மெசேஜைத் தூக்கினார் (DELETE FOR EVERYONE).

திடீரென குழுவில் ஒரு சலசலப்பு. ரமேஷ் என்பவர் ஆவேசமாக ஒரு வாய்ஸ் சேட் (VOICE CHAT) பதிவிட்டார். அதில் மற்ற உறுப்பினர்களைக் குறை சொல்லியிருந்தார்.

நிலைமை கையை மீறிப் போவதைக் கண்ட ரகுநாதன், தனது பிரைவசி செட்டிங்ஸ் (PRIVACY SETTINGS) மூலம் குழுவை 'ஒன்லி அட்மின்ஸ்' (ONLY ADMINS) நிலைக்கு மாற்றினார். அதாவது, இப்போது அவரும் மற்ற கோ-அட்மின்ஸும் (CO-ADMINS) மட்டுமே மெசேஜ் அனுப்ப முடியும்.

"ஏன் என் மெசேஜை டெலிட் செய்தீர்கள்?" என்று ரமேஷ் தனிப்பட்ட முறையில் கேட்க, ரகுநாதன் பொறுமையாகப் பதிலளித்தார். ஆனால், ரமேஷ் கேட்காமல் மீண்டும் குழுவில் வந்து வாதம் செய்யத் தொடங்கினார்.

வேறு வழியின்றி ரகுநாதன் அவரை ரிமூவ் (REMOVE MEMBER) செய்தார்.

அடுத்த சில நிமிடங்களில், ரமேஷுக்கு ஆதரவாக மேலும் இருவர் தானாகவே எக்ஸிட் (MEMBER EXIT) ஆனார்கள்.

மாலையில் ஒரு அமைதி நிலவியது. ரகுநாதன் மற்ற அட்மின்களுடன் கலந்தாலோசித்தார். "தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்க இரவு நேரங்களில் குழுவை குளோஸ் (CLOSE GROUP) செய்து வைப்போம்" என்று முடிவு செய்யப்பட்டது.


குழுவின் அனைத்து பழைய குப்பைகளையும் டெலிட் ஆல் (DELETE ALL) செய்துவிட்டு, ரகுநாதன் பெருமூச்சு விட்டார். ஒரு குழுவை நடத்துவது என்பது ஒரு நாட்டின் எல்லையைக் காப்பதைக் காட்டிலும் சவாலானது என்று அவருக்குப் புரிந்தது.

ஆனாலும், பிரிந்து சென்ற நண்பர்களை மீண்டும் சேர்க்கத் தன் ஈகோவை விட்டுக்கொடுத்து 'ஆட் மெம்பர்' கொடுக்கத் தொடங்கினார்.

அதுதான் உண்மையான நட்பு!



-லால்குடி வெ.நாராயணன்



# தாயம்மா



கிர்ர்ர்ர்.. ரென அலாரம் அடித்தது. சட்டென எழுந்து அலாரத்தை அமர்த்திய மரகதம் நேராக எழுந்து பூஜை அறைக்குச் சென்று சுவாமியை கும்பிட்டு அன்றைய நாள், நல்ல பொழுதாக அமைய வேண்டுமென வேண்டிக் கொண்டு வெளியே வந்து மளமளவென வேலைகளை ஆரம்பித்தாள்..

காலை காபி போட்டு குடித்த பின்.. மடமடவென சமையல் வேலைகளை ஆரம்பித்தாள். முந்திய நாளே தாயம்மா காய்கறிகளை வெட்டிக் கொடுத்திருந்ததால், சமையல் எளிதாக இருந்தது. தாயம்மாவை நினைக்கும் போதே அவள் மனதில் ஒரு நெகிழ்ச்சி உண்டானது.

தாயம்மா அவள் வீட்டில் பதினைந்து வருடங்களுக்கு மேலாக வேலை பார்க்கிறாள். அவள் வேலைக்கு வந்த போது அவளுடைய இரண்டு மகள்களும் சின்ன வயசு.. பள்ளிக்கூடம் போய்க்கொண்டிருந்த சிறுமிகள்.. புருஷன் குடிகாரன்.. அவனால் தாயம்மாவிற்கு எந்த பயனும் கிடையாது. அவளே உழைத்து, சம்பாதித்து, அந்த ரெண்டு பிள்ளைகளையும் நன்றாக படிக்க வைத்து, இப்போது பெரியவளை கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட்டாள்.

"அம்மா "என்ற குரல் கேட்க.. இதோ தாயம்மா வந்துவிட்டாள். தாயம்மா வந்தால் மரகதத்தை ஒரு வேலையும் செய்ய விடமாட்டாள். இழுத்து போட்டுக் கொண்டு எல்லாவற்றையும் தானே செய்ய வேண்டுமென்று நிற்பாள். அன்று உள்ளே நுழைந்த தாயம்மா மௌனமாக வேலை பார்க்க ஆரம்பித்தாள்.

"என்ன தாயம்மா.. இன்னைக்கு சத்தத்தையே காணும். ஏதோ யோசனையிலேயே இருக்கிற மாதிரி தெரியுது. ஏதாவது பிரச்சனையா?" என்றாள் மரகதம்.

"பெரியவ செல்வி உண்டாயிருக்கா.. உங்களுக்கு தெரியும்ல்லம்மா.. அவ மாப்பிள வீட்ல அஞ்சா மாசம் அரிபழம் போடனும்னுசொன்னாங்க.. செஞ்சுட்டேன். இப்ப வளைகாப்பு பண்ணனும்னு நிலையா நிக்கிறாங்க.. என் தகுதிக்கு ஆம்பள சரியில்லாம நான் எத்தனை விசேஷம் செய்ய.. இன்னும் பேறு காலம் வேறு பார்க்கனும்"

"அதுக்கு ஏண்டி மலையற.. நல்ல காரியம் தானே.. செல்வி முதமுதலா உண்டாயிருக்கா.. உனக்கும் இது முதல் பேரக்குழந்தை"

"செய்ய ஆசைதான்.. ஆனால் வசதி வேண்டாமாம்மா? செய்ற கட்ட செஞ்சுதான் ஆகனும். பலகாரம் பண்ணனும்.. கலந்த சாதங்கள் தயார் பண்ணனும்.. சூல் காப்பு வாங்கனும்.. அப்ப்ப்பா சொல்லும் போதே எனக்கு மூச்சு முட்டுது.. இவ்வளவுக்கும் நான் தகுதியா?" என்று வருத்தத்தோடு மரகதத்தைப் பார்த்தாள்.

"ஏண்டி.. நாங்கல்லாம் இல்லையா? இத்தனை வருஷமா இங்க வேலை பாக்குற.. உன்னோட மகளுக்கு ஒரு விசேஷம்ன்னா நான் விட்டுடுவேனா.. நீ தேதியை குறி.. செலவு பூரா நான் பார்த்துக்கிறேன். செய்றகட்டுகளை நல்ல சிறப்பா செஞ்சுடுவோம். ஆட்களை மட்டும் ரொம்ப கூப்பிடாத.. இந்த நோய் தொற்று நேரத்துல சூலியையும் பாதுகாப்பா பாத்துக்கனும். அதனால அவ மாமியார் நாத்தனார் வீட்டார்.. உன் கூட பிறந்த அக்கா.. கொஞ்ச பேரோட நிறுத்திக்கோ."

சொன்னதோடு நிற்கவில்லை மரகதம். பார்த்து,பார்த்து அவளுக்கு வேண்டியதை, சூல் காப்பு, பட்டுப் புடவை எல்லாம் வாங்கியதோடு, பதினொரு வகை கிளறு சாதங்களை ஒரு பிரபலமான ஓட்டலில் ஆர்டர் கொடுத்தாள். ஐந்து வகை பலகாரங்களையும் அவர்களிடமே ஆர்டர் கொடுத்தாள்.

பூமாலை ,வளையல்கள், தாம்பூல சாமான்கள் என ஒரு செலவையும் தாயம்மாவுக்கு வைக்கவில்லை.. பார்த்து பார்த்து எல்லாவற்றையும் சிறப்பாக ஏற்பாடு பண்ணினாள். அவள் செஞ்ச சீர்களை பார்த்து செல்வியின் மாப்பிள்ளை வீட்டுக்காரங்களே குளிர்ந்து போனார்கள்.

மரகதத்தின் வீட்டுக்காரர் சுந்தரமும் எதுவும் சொல்லவில்லை. அவள் ஆசைக்கு செய்யட்டும் என்று விட்டு விட்டார். சுந்தரமும் மரகதமும் போய் செல்வியை ஆசீர்வாதம் பண்ணிவிட்டு வந்தனர்.

"எப்படி மரகதம் திடீர்னு உனக்கு இப்படியோரு யோசனை வந்துச்சு... தாயம்மா மகளுக்கு ஜாம் ஜாம்னு வளைகாப்பு நடத்திட்டியே." என்றார் மனைவியைப் பார்த்து.

மரகதம்,"ஏங்க.. யு.எஸ். ல இருக்கிற நம்ம பொண்ணு அபிக்கு இது ஆறாவது மாசம். எட்டு வருஷத்துக்கு அப்புறம் கடவுள் கொடுத்த வரமாக குழந்தை உண்டாயிருக்கா.. எல்லா வசதியும் இருந்தும், நம்மாலயும், சம்பந்தியாலயும் இந்த கொரோனா நோய் தொற்றால உடனே போக முடியாத சூழ்நிலை..

என் மகளை பார்க்க, அவளுக்கு எல்லாத்தையும் நல்லபடியா செய்ய மனசு துடிக்குது. ஆனால் சூழ்நிலை என் நம்ம கைய கட்டி போட்டுடுச்சு.. பிரசவத்துக்குப் போய் உதவ முடிஞ்சாலே பெருசு. வளைகாப்பு செய்யல்லாம் ஆசைப்படக்கூடாது. நமக்கு விதிச்சது அதுதான்.. என்ன குழந்தையை கடவுள் கொடுத்தாரேன்னு சந்தோஷப்பட்டுக்க வேண்டியதுதான்.

தாயம்மா கதை அப்படி இல்லைங்க.. அவ மக அவகிட்டக்கயே இருக்கா.. அவளும் அஞ்சு வருஷத்துக்கு அப்புறம் உண்டாயிருக்கா.. நம்மகிட்ட காசு இருக்கு ஆனா செய்யக்கூடிய சந்தர்ப்பம் இல்லை.. அவகிட்ட செய்ய கூடிய சந்தர்ப்பம் இருக்கு ஆனா காசு இல்ல.. அதனாலதான் நம்ம மகளா நினைச்சு செல்விக்கு எல்லாத்தையும் செஞ்சு அதுல ஒரு மனநிறைவு தேடிக்கிட்டேன். தாயம்மா மனசார வாழ்த்துவா.. அந்த வாழ்த்து என் மகளை நல்லபடியா பெத்துபிழைக்க வைக்கும்." மரகதம் கண்கலங்க கணவனை ஏறிட்டாள்.

சுந்தரம் கண்களும் கலங்க.. அவளுடைய கூற்றில் உள்ள எதார்த்தமான உண்மை மனதில் பட 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' ன்னு அம்மா அடிக்கடி கூறுவாளே.. என்று நினைத்தவாறே தலையசைத்து ஆமோதித்தார்.



-தி.வள்ளி
திருநெல்வேலி.

# ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்

அதிகாரம் 2



▪Banumathi Nachiyar



## குறள் 8

உயிருக்குறுதி யெல்லா முடம்பின் பயனே
அயிர்ப்பின்றி யாதியை நாடு

**விளக்கம்**

ஆன்மாவிற்கு உறுதியைத் தருவது உடம்பின் பயனே. ஆகையால் அயர்ப்பின்றி அதாவது சந்தேகம் இல்லாமல் ஆதியை விரும்பு என்கிறார் இக்குறளில். இந்த உடம்பானது உயிருக்கு உறுதியைத் தருவதால், அதனை ஆதாரமாகக் கொண்டு முதல்வனை விரும்பு என்பது கருத்து.

உடம்பு இல்லை எனில் உயிர்க்கு உறுதி தேட இயலாது. சுவர் இல்லாமல் சித்திரம் வரைய முடியாதல்லவா? எனவே உயிருக்கு உறுதி உடம்பின் பயன் எனில் அதனைக் கொண்டு செய்வது என்? ஆதியை விரும்புதல் தானே! அதனை விரும்பு எனச் சிறப்பிக்கிறார் ஔவையார்.

உலகப்பொதுமறையில் முப்பால்கள் அறம், பொருள், இன்பம் என்று விட்டுப் போன ஒன்று உள்ளது. அதுவே வீடுபேறு. அது என் தேடலில் ஔவையாரின் வீடுபேற்றினை அறிய உதவும் ஞானக்குறள் கிடைத்தது. இப்போது உலகப்பொதுமறையும் முழுமை பெறுகிறதோ என என் மனம் மகிழ்கிறது. ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்.



## குறள் 9

உடம்பினாற் பெற்ற பயனாவ வெல்லாம்
திடம்பட ஈசனைத் தேடு

**விளக்கம்**

உடம்பினால் அடைந்த பயனெல்லாம், பயன்களைக் கொண்டு உறுதியாக ஈசனைத் தேடுவதே ஆகும். உடம்பின் பயனாக ஏற்படும் உணர்வுகள் உணர்ச்சிகள் ஆகியவை எல்லாவற்றையும் உறுதியோடு ஈசனைத் தேடுவதிலேயே செலுத்த வேண்டும் என்பது கருத்து.

பிறவிகளிலேயே உயர்ந்த பிறவி மனிதப் பிறவி. அதிலும் கூன், குருடு, செவிடு, ஊமை என இல்லாமல் நல்ல உடம்பைப் பெற்றுள்ள நாம் அதன் பயன்களையும் இறைவனைத் தேடுவதிலேயே பயன்படுத்த, அதுவே கடமையாகக் கொள்ள வேண்டும். ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்..

(தொடரும்).

# அகத்தியர் திருக்கோவில் பஞ்சேஷ்டி

ஒரு சமயம் - அகத்தியப் பெருமான் தவம் புரிந்து கொண்டிருக்கும் பொழுது, அரக்கர் வம்சத்தை சேர்ந்த "சுகேது" என்பவன் - தன் குடும்பத்தாரோடு அவர் காலில் வந்து விழுந்தான்.

அசுரர் குடும்பத்தைச் சேர்ந்த "சுகேது" எதற்காக தன் காலில் விழவேண்டும் என்று அகஸ்த்தியப் பெருமான், தன் ஞானக் கண்ணால் பார்த்த பொழுது, "சுகேது" மிகவும் உத்தமன் என்றும், முன் ஜென்ம கர்மவினையால் அரக்கர் குலத்தில் பிறந்தவன் என்பதையும், அசுரர் குடும்பத்தில் பிறந்தாலும் சதா சர்வ காலமும் சிவபெருமானையே வழிபட்டு வருவதால் மற்ற அசுரர்கள் சுகேதுவையும், அவன் குடும்பத்தையும் துன்புறுத்தி வருவதாக அறிந்தார்.
இந்த சுகேதுவையும், அவன் குடும்பத்தினரையும் காப்பாற்ற வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்? என்று யோசித்தார்.
யாகம் மூலமாகத்தான் சுகேதுவின் தோஷத்தை போக்கி, முக்தி கொடுக்க முடியும் என்பதை உணர்ந்த அகத்தியர், தேவயாகம், பிரம்மயாகம், பூதயாகம், பிதுர்யாகம், மானுடயாகம் என்ற ஐந்து யாகங்களை செய்ய நினைத்தார். அதே சமயம் இந்த யாகத்தை செய்யவிடாமல் அரக்கர்கள் கூட்டம் வரும். இதை எப்படித் தடுப்பது என்று நினைக்கும் பொழுது, உமையவளே அகத்தியன் முன் தோன்றினாள்!
"அகத்தியரே! உங்களது யாகம் பற்றி நான் முக்கண்ணன் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இதுவரை நேரிடையாகக் கண்டதில்லை, அந்த பாக்கியத்தை அருள வேண்டும்" என்று கருணையோடு வேண்டினாள்.
உமாதேவியே இப்படியொரு வேண்டுகோளை தன்னிடம் வைத்த பொழுது அகஸ்தியர் அகமகிழ்ந்து போனார்.
"தாயே! தேவர்களுக்கும், என்னுடைய மானிட சிஷ்யர்களுக்குமே இதுவரை யாகம் செய்து, அவர்களது தோஷத்தைப் போக்கிய நான், இன்று முதன் முறையாக நல்ல உள்ளம் கொண்டு, அன்றாடம் சிவபெருமானையே வணங்கிவரும் "சுகேது" என்னும் அரக்கர் குலத்தைச் சேர்ந்தவனுக்கும், அவனது குடும்பத்தினருக்கும் பஞ்சயாகம் ஒன்றைச் செய்ய விரும்புகிறேன். தாங்கள் சம்மதித்தால், தாங்கள் எங்கு செய்யச் சொல்கிறீர்களோ, அந்த இடத்திலே செய்ய விரும்புகிறேன்" என்றார் அகத்தியர்.
"என்ன அகத்தியரே! அரக்கனுக்கு தோஷம் போக யாகமா? அதுவும் உங்கள் கையாலா?, இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது. இப்படி செய்து கொண்டே போனால் எல்லா அரக்கர்களும் உங்கள் காலடியில் வந்து விழுந்து விடுவார்களே" என்றாள் உமையாள்.
"பகைவனுக்கே அருள்கின்ற தாங்களே இப்படிச் சொல்லலாமா? எல்லா அரக்கர்களையும் நல்லவர்களாக ஆக்கிக் காட்டுவோம்" என்றார்.

"இல்லை, அகத்தியா! கெடுதல்கள் நடக்க நடக்கத்தான் இறைபக்தி வளரும். உன்னால் எல்லா அரக்கர்களும் சொர்க்கம் அடைந்துவிட்டால், தேவலோகம் தாங்காது. கெடுதல் செய்பவர்கள் அப்படியே அவர்களுது தொழிலை தப்பாது செய்யட்டும், கெடுதல் இருந்தால்தானே நன்மைக்கும் நல்லவர்களுக்கும் மரியாதை கிடைக்கும். எனவே அரக்கர்களைக் கெடுத்துவிடாதே!" என்றாள் சூசகமாக.
"தாயே! தாங்கள் சொல்வதை நானும் அறிந்தவன்தான். என்னிடம் புகலிடம் கேட்டு வந்த இந்த சுகேது, அவனது குடும்பத்தினர்க்கும் சாப விமோசனம் செய்ய தாங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லையே!"

"அகத்தியா! நீ எதை செய்தாலும் என்ன சொன்னாலும் அதற்கு ஒரு காரணம் நிச்சயம் இருக்கும். உன்னை எதிர்த்து பேச முடியுமா? இல்லை உனக்கு எதிராக யாரும் எதுவும் செய்ய முடியுமா? இதில் எனக்கு மட்டும் விதிவிலக்கு இருக்கிறதா என்ன?" என்ற உமையவள் "இப்போது உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்" என்றாள்.
"தாங்கள் என்னுடைய யாகத்தைப் பார்ப்பதாக விரும்பினீர்கள் அல்லவா? அதனால் இந்த சுகேதுவுக்கு ஐந்துவகை யாகங்களும் செய்யப் போகிறேன். தாங்கள் இந்த யாகம் வெற்றி பெற முக்கண்ணன் துணையோடு உதவ வேண்டும்" என்றார் அகத்தியப் பெருமான்.
எப்படி?
"இந்த யாகம் முடியும் வரை அரக்கர்களால் எந்தவிதத் தொந்தரவும் வரக்கூடாது. தாங்கள் தான் முன்னின்று காத்தருள வேண்டும். அதே சமயம் முக்கண் உருவெடுத்தும் காட்சி தரவேண்டும். ஏனெனில் இந்த பஞ்சயாகம் செய்துவிட்டு, சத்ரு சம்ஹார யாகம் ஒன்றை முருகப்பெருமான் துணையோடு செய்யப் போகிறேன்" என்றார்.
"அதென்ன சத்ரு சம்ஹார யாகம்?"
"முதன் முறையாக நானே என் கையால் செய்யப் போகும் யாகம். போட்டி, பொறாமை, எதிர்ப்பு, கொடுமை இது போன்ற தொல்லைகளால் நாள்தோறும் அவதிப்படுபவர்கள், அந்த தொல்லையிலிருந்து அகல, முருகப் பெருமானே எனக்கிட்ட கட்டளை அது. முறையோடு செய்யப் போகிறேன்" என்றார்.



"மிக்க மகிழ்ச்சி அகத்தியரே!, இதை செய்யத் தகுந்து இடம் இனிமேல் "பஞ்சேஷ்டி" என்று அழைக்கப்படும். அங்குதான், சிவபெருமான் சுயம்புவாக காட்சி அளித்திருக்கிறார். காஞ்சிபுரத்திற்கு அருகே உள்ள இந்த அருமையான இடம், பிற்காலத்தில் பெரும் புண்ணிய ஸ்தலமாக மாறவும் போகிறது" என்றாள் உமையவள், மிகவும் ஆனந்தமாக.
"தாயே, தாங்கள் என் பொருட்டு அருள்பாலிக்க முன் வந்தது மிகவும் மகிழ்ச்சி. தாங்கள் ஆனந்தமாக இதைச் சொன்னதும்என் யாகத்திற்கு துணை நிற்கப் போவதால், தங்களை இன்று முதல் "ஆனந்தவல்லித் தாயார்" என்று அழைக்க விரும்புகிறேன். தங்களுக்கு சம்மதம் தானே?"என்றார் அகத்தியர்.
"அப்படியே ஆகட்டும்" என்று ஆசிர்வதித்தாள், ஆனந்தவல்லித் தாயார்.
மிகச் சிறப்பாக அகஸ்தியர் நடத்திய அந்த யாகத்தை தடைசெய்ய வந்த அரக்கர்களை, ஆனந்தவல்லித் தாயார் தன் இடது காலை முன் வைத்து, தன் முக்கண்ணினால் சம்ஹாரம் செய்தாள்.
அகஸ்தியர் ஐந்து யாகத்தையும், கடைசியாக சத்ரு சம்ஹார யாகத்தையும் வெற்றிகரமாக முடித்தார்.
சுகேதுவும் அவனது குடும்பத்தினர்களும், சாப விமோசனம் பெற்றனர். உமையவளும் ஆனந்தவல்லித் தாயாராக அருள் பொங்க, இடது காலை முன்வைத்து மகிழ்ச்சியாக காட்சி தருகிறாள்.
இந்த கோவில் சென்னையிலிருந்து 28 கிலோ மீட்டர் தொலைவில் கல்கத்தா நெடுஞ்சாலையில், ரெட்ஹில்ஸ் பக்கத்தில் அமைந்திருக்கிறது.மிக பழமையான கோவில், ராஜகோபுரத்தில் வைணவப் பெருமையை காட்டும் தசாவதார காட்சிகள் அழகுப் பட ஒரு பக்கமும், அதற்கு நேர் எதிரில் சைவப் பெருமையைக் குறிக்கும் தெய்வக் காட்சிகளும் சரிக்கு சரிசமமாக வடிக்கப்பட்டிருக்கிறது.
நவக்ரகங்கள் இங்கு நேர் வரிசையாக இருப்பதையும், அதில், சனீச்வரனுக்கு காக்கை வாகனத்திற்குப் பதிலாக கருடவாகனம் இருப்பதையும் காணலாம். இது சற்று வித்யாசமாக இருக்கும்.
கோயிலுக்கு இடதுபுறம் மிகப் பெரிய குளம் இருக்கிறது. இது அகஸ்தியர் உமிழ்நீரால் தோன்றியது என புராணங்கள் கூறுகின்றது. ஆனால் அகத்தியர் ஜீவநாடியில் இது பற்றி கேட்ட பொழுது, யாகம் முடித்த கையை அலம்புவதற்கு அகத்தியர் கமண்டலத்திலிருந்து, கங்கை அவளே நீராக வந்து, அகத்தியர் கையை அலம்ப, உருவெடுத்ததாக வந்திருக்கிறது.
சத்ரு சம்ஹார யாகம் செய்ய, இதைவிட மிகச்சிறந்த கோவில் வேறு எங்கும் இருப்பதாக தெரியவில்லை. இது சென்னை நகரவாசிகளுக்கு மட்டுமல்ல, அனைத்து சிவபக்தர்களுக்கும் ஒரு வரப்ரசாதமான புண்ணிய ஸ்தலம்."யாருக்கு விதி இருக்கிறதோ, யார் கர்மாவில் அதற்கு அனுமதி இருக்கிறதோ, அவர்கள இங்கு வரட்டும், வந்தெனது அருள் பெறட்டும்" என்றார் அகத்தியர்.

## தினம் ஒரு தலைவர்கள்

# சாரு மஜூம்தார் வரலாறு

சாரு மஜூம்தார் (15 மே 1918 - 28 ஜூலை 1972) ஒரு இந்திய கம்யூனிஸ்ட் தலைவரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) நிறுவனர் மற்றும் பொதுச் செயலாளருமாவார் . 1918 இல் சிலிகுரியில் ஒரு முற்போக்கான நில உரிமையாளர் குடும்பத்தில் பிறந்த இவர், இந்திய சுதந்திர இயக்கத்தின் போது ஒரு கம்யூனிஸ்டாக மாறி , பின்னர் நக்சலிசத்தை உருவாக்கினார் . இந்த காலகட்டத்தில், 1967 நக்சல்பாரி எழுச்சியின் வரலாற்றுக் கணக்குகளை அவர் எழுதினார் . அவரது எழுத்துக்கள், குறிப்பாக வரலாற்று எட்டு ஆவணங்கள் , இந்தியாவில் உள்ள பல கம்யூனிச-இணைந்த அரசியல் கட்சிகளின் சித்தாந்தத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டன.

வாழ்க்கை வரலாறு
மஜூம்தார் ராஜ்ஷாஹியின் (இப்போது சிலிகுரி) மதுலலோயில் ஒரு ஜமீன்தார் குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை பிரேஷ்வர் மஜூம்தார் ஒரு சுதந்திரப் போராட்ட வீரராகவும் , இந்திய சுதந்திர இயக்கத்தின் போது இந்திய தேசிய காங்கிரஸின் டார்ஜிலிங் மாவட்டக் குழுவின் தலைவராகவும் இருந்தார் .

1930 ஆம் ஆண்டில், சிலிகுரியில் ஒரு மாணவராக, சேவ்மங்கல் சிங் மற்றும் ப்ரோஜென் பாசு ராய் சவுத்ரி ஆகியோரின் வேண்டுகோளின் பேரில், காலனித்துவ எதிர்ப்பு அமைப்பான அனுஷிலன் சமிதியுடன் இணைக்கப்பட்ட அனைத்து வங்காள மாணவர் சங்கத்தில் சேர்ந்தார்.

1937 ஆம் ஆண்டு தனது 'மெட்ரிக்' தேர்வில் முதல் பிரிவில் பட்டம் பெற்ற மஜூம்தார், பப்னா மாவட்டத்தில் (இன்றைய வங்காளதேசம்) உள்ள எட்வர்ட் கல்லூரியில் சேர்ந்தார். இருப்பினும், சிறிது காலத்திற்குப் பிறகு, சுதந்திர இயக்கத்தில் சேருவதற்காக, தனது முறையான கல்வியை விட்டுவிட்டு, சிலிகுரிக்குத் திரும்பினார். 1938 ஆம் ஆண்டு, தனது 19 வயதில், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். அடுத்த ஆண்டு, அண்டை நாடான ஜல்பைகுரி மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI) ஒழுங்கமைக்கப்பட்டபோது , மஜூம்தார் அப்போது தடைசெய்யப்பட்ட கட்சியில் சேர்ந்து அதன் விவசாயிகள் முன்னணியில் பணியாற்றினார். விரைவில் ஒரு கைது வாரண்ட் அவரை முதல் முறையாக ஒரு கம்யூனிஸ்ட் ஆர்வலராக தலைமறைவாகச் செல்ல கட்டாயப்படுத்தியது. இரண்டாம் உலகப் போர் வெடித்தபோது CPI தடைசெய்யப்பட்டாலும், அவர் விவசாயிகள் மத்தியில் CPI நடவடிக்கைகளைத் தொடர்ந்தார், மேலும் 1942 இல் CPI ஜல்பைகுரி மாவட்டக் குழுவில் உறுப்பினரானார். 1943 ஆம் ஆண்டு பெரும் பஞ்சத்தின் போது ஜல்பைகுரியில் 'பயிர்களைக் கைப்பற்றுதல்' பிரச்சாரத்தை ஏற்பாடு செய்ய இந்த பதவி உயர்வு அவருக்கு தைரியத்தை அளித்தது . 1946 ஆம் ஆண்டில், அவர் ஜல்பைகுரி பகுதியில் தேபாகா இயக்கத்தில் சேர்ந்து வடக்கு வங்காளத்தில் பாட்டாளி வர்க்க போர்க்குணமிக்க போராட்டத்தைத் தொடங்கினார். இந்தப் போராட்டம் அவரது புரட்சிகரப் போராட்டக் கண்ணோட்டத்தை வடிவமைத்தது. பின்னர் அவர் டார்ஜிலிங்கில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பணியாற்றினார் .



1948 ஆம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது, அடுத்த மூன்று ஆண்டுகள் அவர் சிறையில் கழித்தார். ஜனவரி 1952 இல் அவர் ஜல்பைகுரியைச் சேர்ந்த சக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான லீலா மஜூம்தார் சென்குப்தாவை மணந்தார். இந்த ஜோடி சிலிகுரிக்கு குடிபெயர்ந்தது, இது சில ஆண்டுகள் மஜூம்தாரின் நடவடிக்கைகளின் மையமாக இருந்தது. அவர் 1962 இல் சிறிது காலம் சிறையில் அடைக்கப்பட்டார். 1960களின் நடுப்பகுதியில், வடக்கு வங்காளத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) (CPI(M)) இல் மஜூம்தார் ஒரு இடதுசாரிப் பிரிவை ஏற்பாடு செய்தார். 1967 ஆம் ஆண்டில், நக்சல்பாரியில் அவரது தோழர் கனு சன்யால் தலைமையில் ஒரு போர்க்குணமிக்க விவசாயிகள் எழுச்சி நடந்தது. இந்தக் குழு பின்னர் நக்சலைட்டுகள் என்று அழைக்கப்பட்டது , மேலும் இந்த நேரத்தில் அவர் எழுதிய எட்டு கட்டுரைகள் - வரலாற்று எட்டு ஆவணங்கள் என்று அழைக்கப்பட்டன - அவற்றின் சித்தாந்த அடித்தளத்தை வழங்குவதாகக் கருதப்படுகிறது. புரட்சி சீன கம்யூனிஸ்ட் புரட்சியின் வடிவத்தில் ஆயுதப் போராட்டத்தின் பாதையை எடுக்க வேண்டும் என்றும் , நக்சல்பாரியில் நடந்த எழுச்சி ஒரு மாவோயிஸ்ட் புரட்சியின் தொடக்கமாகும் என்றும் மஜூம்தார் வாதிட்டார். தலைவர் மாவோ சேதுங்கின் மேற்கோள்களுக்கு மஜூம்தார் அதிக முக்கியத்துவம் கொடுத்தார் , இது படிப்பறிவற்ற விவசாயிகளுக்கு சத்தமாக வாசிக்கப்பட வேண்டும் என்று கோரியது. புரட்சிகர அறிவுஜீவிகள், இளைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இடையே ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கான ஒரு முக்கியமான வழிமுறையாக மஜூம்தார் மேற்கோள்களைக் கருதினார். மஜூம்தாரால் வலியுறுத்தப்பட்ட பிற நூல்களில் லின் பியாவோவின் மக்கள் போரின் வெற்றி நீண்ட காலம் வாழ்க , மற்றும் தொடர்ந்து படிக்கும் மூன்று கட்டுரைகள் ( இன் மெமரி ஆஃப் நார்மன் பெத்துன் , சர்வ் தி பீப்பிள் , மற்றும் தி ஃபூலிஷ் ஓல்ட் மேன் ரிமூவ்ஸ் தி மவுண்டன்ஸ் ஆகியவற்றின் தொகுப்பு ) ஆகியவை அடங்கும்.
1967 ஆம் ஆண்டு நக்சல்பாரி எழுச்சி நசுக்கப்பட்டபோது , மஜூம்தார் கூறினார்: "... நூற்றுக்கணக்கான நக்சல்பாரி இந்தியாவில் புகைந்து கொண்டிருக்கிறது....நக்சல்பாரி இறக்கவில்லை, இறக்கவும் போவதில்லை". அதே ஆண்டு, மஜூம்தார் பிரிந்து சென்று கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் அகில இந்திய ஒருங்கிணைப்புக் குழுவை உருவாக்கினார் . 1969 ஆம் ஆண்டு, மஜூம்தாரும் மற்றவர்களும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) ஐ நிறுவினர் .
இறப்பு
மஜூம்தார் ஜூலை 16, 1972 அன்று கைது செய்யப்பட்டார். மஜூம்தாரின் மரணத்திற்கான சூழ்நிலைகள் தெளிவாக இல்லை. ஜூலை 28, 1972 அன்று அதிகாலை 4 மணிக்கு மஜூம்தார் மாரடைப்பால் இறந்தார் என்பது காவல்துறையின் அதிகாரப்பூர்வ பதிலாகும். இருப்பினும், அனைத்து நக்சலைட் பிரிவுகளும் இதை மறுத்தன, மாறாக இது ஒரு காவல் கொலை என்றும், போலீஸ் லாக்கில் மருந்து வழங்கப்படாததால் அவர் கொல்லப்பட்டார் என்றும் கூறின. அவரது உடல் ஆயுதமேந்திய போலீசார் மற்றும் துணை ராணுவப் படைகளின் கண்காணிப்பில் கியோரடோலா தகனக்கூடத்தில் தகனம் செய்யப்பட்டது .

மஜூம்தாரின் மரணத்திற்குப் பிறகு இந்தியாவில் தீவிர இடதுசாரி இயக்கம் பல சித்தாந்தப் பிளவுகளைக் கண்டுள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) விடுதலை மஜூம்தாரின் மரணத்தின் ஆண்டு நிறைவை தியாகிகள் தினமாகக் கொண்டாடுகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) ஜூலை கடைசி வாரத்தில் மஜூம்தாரின் மரணத்தை நினைவுகூரும் வகையில் தியாகிகள் வாரத்தைக் கொண்டாடுகிறது, அங்கு உறுப்பினர்கள் அவரது சித்தாந்தத்தை மறுபரிசீலனை செய்து தங்கள் இயக்கத்தில் அவர் ஏற்படுத்திய செல்வாக்கை நினைவுகூர்கிறார்கள்.

# 1000 கோடி ரூபாய் வசூலை தாண்டியது Dhurandhar 2



இந்தியில் ஆதித்யா தார் இயக்கத்தில் ரன்வீர் சிங் நடிப்பில் கடந்த டிசம்பரில் வெளியான துரந்தர் படம் 1000 கோடி ரூபாய்க்கு மேல் வசூலித்து சாதனை படைத்தது.

பாகிஸ்தானில் பணியாற்றும் இந்திய உளவாளியை பற்றிய கதைக்களத்தில் இப்படம் அமைந்திருந்தது. இதன் 2-ம் பாகமான 'துரந்தர் தி ரிவெஞ்ச்' படம் கடந்த மார்ச் 19-ல் வெளியாகி முதல் படத்தைப் போல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்நிலையில், துரந்தர் 2 திரைப்படம் வெளியான 7 நாட்களிலேயே உலகளவில் ரூ.1,000 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை படைத்துள்ளது. இந்த ஸ்பை திரில்லர் படம் வட அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளிலும் வசூல் வேட்டை நடத்தி வருகிறது.

சீன திரைப்படமான 'பெகாசஸ் 3' (Pegasus 3) இந்த ஆண்டு உலகளவில் அதிக வசூல் செய்த படங்களின் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இப்படம் ரூ. 5,900 கோடிக்கும் அதிகமான வசூலைத் தாண்டியுள்ளது.

திரையுலக நட்சத்திரங்கள் பிரபலமான இதழுக்காக போட்டோஷூட் நடத்துவது வழக்கமான ஒன்றுதான். அந்த வகையில், இந்திய சினிமாவில் பிரபலமான நடிகைகளில் ஒருவராக இருக்கும் சோபிதா, பிரபல இதழின் அட்டைப்படத்திற்காக விதவிதமாக போஸ் கொடுத்துள்ளார். இந்த போட்டோஷூட் புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவரே வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகின்றன.

# ராம் சரணின் பெத்தி படத்தின் க்ளிம்ஸ் விடியோ!



நடிகர் ராம் சரண் நடிப்பில் உருவாகியுள்ள பெத்தி படத்தின் க்ளிம்ஸ் விடியோ வெளியாகியுள்ளது. தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடா, மலையாளம் ஆகிய மொழிகளில் இந்த க்ளிம்ஸ் விடியோ வெளியாகியுள்ளது.

தேசிய விருது பெற்ற தெலுங்கு இயக்குநர் புச்சி பாபு சனா இயக்கத்தில் ராம் சரண் பெத்தி படத்தில் நடித்துள்ளார்.

கன்னட சூப்பர் ஸ்டார் சிவராஜ்குமார், பாலிவுட் நடிகை ஜான்வி கபூர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த இந்தப் படத்திற்கு ஏஆர் ரஹ்மான் இசையமைக்கிறார். இப்படத்தில் இடம்பெற்ற, சிக்கிரி பாடல் மிகப்பெரிய ஹிட் அடித்தது. இந்நிலையில், ராம் சரண் பிறந்த நாளில் இந்தப் படத்தின் க்ளிம்ஸ் விடியோ வெளியாகியுள்ளது.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்தப் படத்தின் கதையை இயக்குநர் சுகுமார் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் படம் ஏப்.30ஆம் தேதி பான் இந்திய மொழிகளில் வெளியாகவிருக்கிறது.




# அனுமன் ஜெயந்திக்கு வெளியாகும் ராமாயணா பட க்ளிம்ஸ் விடியோ!




ராமாயணா படத்தின் காட்சிகள்.

படம்: யூடியூப் / வேல்ட் ஆஃப் ராமாயணா.

Updated On :27 மார்ச் 2026, 11:29 am

இணையதளச் செய்திப் பிரிவு

நடிகர்கள் ரன்பீர், யஷ் நடிக்கும் ராமாயணா முதல் பாகத்தின் க்ளிம்ஸ் விடியோ வெளியாகும் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு இந்த விடியோ வரும் ஏப்.2ஆம் தேதி வெளியாகவிருக்கிறது.

நமீதா மல்ஹோத்ரா தயாரிப்பில் உருவாகியுள்ள இந்தப் படத்தினை பாலிவுட் இயக்குநர் நிதிஷ் திவாரி இயக்கி வருகிறார்.

இந்தப் படத்தில் ராமனாக ரன்பீர் கபூர், சீதையாக சாய் பல்லவி, ராவணனாக யஷ்ஷும் நடித்து வருகிறார்கள். இந்தப் படத்தின் 3 நிமிடங்கள் கொண்ட அறிமுக விடியோ வெளியாகி கவனம் ஈர்த்தது.

இரண்டு பாகமாக உருவாகும் இப்படத்தின் முதல் பாகத்திற்கான படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாகவும் அடுத்த பாகத்திற்கான படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான், ஹான்ஸ் ஜிம்மர் இணைந்து இசையமைப்பது உறுதியாகியுள்ளது. இந்தப் படத்தின் முதல் பாகம் தீபாவளிக்கு வெளியாகிறது.



திரை பிரபலங்கள் தங்களுடைய சமீபத்திய புகைப்படங்களை சமூக வலைத்தளத்தில் பதிவிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். அதுவும், வெளிநாட்டிற்கு வெகேஷன் சென்றிருந்தால், கண்டிப்பாக அங்கிருந்து விதவிதமாக போஸ் கொடுத்து எடுத்துக்கொள்ளும் புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவிடுவார்கள்.

அந்த வகையில் மாலத்தீவிற்கு விடுமுறை நாட்களை கொண்டாட சென்றுள்ள நடிகை பிரக்யா ஜெய்ஸ்வால் அங்கு எடுத்துக்கொண்ட தனது சமீபத்திய கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை தற்போது வெளியிட்டுள்ளார்.

# விமர்சனம்: கவித்துவ அனுபவம் தரும் விண்வெளிப் பயணம்!

ரய்லண்ட் கிரேஸ் (ரையான் கோஸ்லிங்) என்னும் நபர் ஒரு விண்கலத்தில் கண்விழிக்கிறார். அவருக்குத் தனது கடந்த கால நினைவுகள் தெளிவற்றதாக இருக்கின்றன. தான் ஒரு விண்வெளி வீரரே அல்ல, ஒரு உயிரியல் ஆசிரியர் என்பது அவருக்கு மெல்ல நினைவுக்கு வருகிறது. சூரியனை அழித்துக் கொண்டிருக்கும் நுண்ணுயிரிகளைத் தடுத்து, உலகைக் காக்கும் ஒரு பயணத்தில் அவர் அனுப்பப்பட்டிருப்பது தெரியவருகிறது.



இன்னொரு புறம் மற்றொரு கிரகத்திலிருந்து தனது உலகைக் காக்க வந்த ராக்கி எனும் விசித்திரமான உருவம் கொண்ட ஏலியனைச் சந்திக்கிறார். மொழி தெரியாத இரு வேறு உலகங்களைச் சேர்ந்தவர்கள் எப்படித் தொடர்புகொண்டு, இணைந்து தங்கள் கிரகங்களைக் காக்கிறார்கள் என்பதே மீதிக்கதை.

படத்தின் மிகப்பெரிய பலம் அதன் கதாபாத்திரப் படைப்பு. ரையான் கோஸ்லிங் தனது அசாத்தியமான நடிப்பால் படத்தை ஒற்றை ஆளாக தாங்குகிறார். அவர் ஒரு விண்வெளி வீரர் அல்ல என்பதால், விண்வெளியின் பிரம்மாண்டத்தைப் பார்த்து அவர் வியக்கும் இடங்கள் அப்படியே பார்வையாளர்களான நமக்கும் கடத்தப்படுகின்றன. 'ராக்கி' கதாபாத்திரம், சமீபகால சினிமாக்களில் வந்த ஏலியன்களிலேயே மிகவும் அழகான ஒன்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவருக்கும் இடையே மலரும் அந்த எதிர்பாராத நட்புதான் படத்தின் ஆன்மா.

தொழில்நுட்ப ரீதியாக திரைப்படம் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தி இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும் . கிரேக் ஃப்ரேசரின் ஒளிப்பதிவு விண்வெளியை பிரம்மாண்டத்துடன் காட்சிப்படுத்தி இருக்கிறது. நிச்சயம் பெரிய திரையில் பார்க்க வேண்டிய காட்சிகள் படம் முழுக்க உள்ளன.

இருப்பினும், படத்தின் நீளம் ஒரு சிறு குறையாகத் தெரிகிறது. ஏறக்குறைய 2 மணிநேரம் 40 நிமிடங்கள் ஓடும் இப்படத்தின் கிளைமாக்ஸ் பகுதி சற்றே இழுவையான உணர்வை தருகிறது. படம் முடிந்துவிட்டது என்று நாம் நினைக்கும்போது மீண்டும் தொடர்வது பெரிய குறை. சில இடங்களில் நகைச்சுவையைத் திணிக்க முயன்றது படத்தின் தீவிரத்தைக் குறைத்தாலும், ரையான் கோஸ்லிங்கின் நடிப்பும், படத்தின் ஆக்கமும் இதுபோன்ற குறைகளை ஈடுகட்டி விடுகின்றன.

நாயகனின் விண்வெளிப் போராட்டங்களுக்கு இடையே, அவ்வப்போது வரும் 'பிளாஷ்பேக்' காட்சிகள் கதையின் ஆழத்தை அதிகரிக்கின்றன. ஜெர்மன் அதிகாரியான எவா ஸ்ட்ராட், ஒரு சாமான்ய ஆசிரியரான கிரேஸை எப்படி இந்த விபரீதமான மிஷனுக்குள் இழுக்கிறார் என்பதும், அதற்குப் பின்னால் இருக்கும் அரசியல் அழுத்தங்களும் மிக நுணுக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. சாண்ட்ரா ஹல்லர் தனது கறாரான நடிப்பின் மூலம், உலகைக் காக்க எந்த எல்லைக்கும் செல்லும் ஒரு அதிகாரியின் பிம்பத்தை அழகாகக் கட்டமைத்துள்ளார். ஹாரி ஸ்டைல்ஸின் 'சைன் ஆஃப் தி டைம்ஸ்' பாடலை அவர் பாடும் காட்சி ஒரு கவிதையாகத் திரையில் விரிகிறது.

அறிவியல் நுணுக்கங்கள் நிறைந்த படமாக இருந்தாலும், கிரேஸுக்கும் ராக்கிக்கும் இடையே மலரும் நட்புதான் படத்தின் ஹைலைட். மொழி தெரியாத சூழலில், ஒலிகள் மற்றும் சைகைகள் மூலம் அவர்கள் ஒரு பொதுவான மொழியைக் கண்டறியும் இடங்கள் ஆகச்சிறந்த தருணங்கள். இரு விண்கலங்களுக்கு இடையே நடக்கும் காட்சிகளை ஒரு பிரம்மாண்டமான ஓவியம் போல, விண்வெளியின் அந்த மவுனமான அழகை கண்முன் நிறுத்தியுள்ளார் இயக்குநர் .

மொத்தத்தில் 'ப்ராஜெக்ட் ஹெய்ல் மேரி' வழக்கமான ஹாலிவுட் மசாலா அறிவியல் புனைவு படமாக இல்லாமல் நட்பு, சமூகக் கடமை, நம்பிக்கை ஆகியவற்றைப் பேசும் ஒரு அழகிய படைப்பாக தனித்து நிற்கிறது. 'கிராவிட்டி' போன்ற படங்களை ரசிப்பவர் என்றால் இப்படத்துக்கு தாராளமாக டிக்கெட் எடுக்கலாம்.







WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424




WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872













தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE











## சீற்றம் அகற்றிடேல்..!

சீற்றததை விட்டுவிட வேண்டாம்.! இதை
செப்புகிற கதையொன்று கேளாய்!

ஊருக்கு ஓரத்தில் ஒரு காடு.. அந்த காட்டுக்கு நடுவிலே
பாம்புப் புற்று! புற்றுக்குள் வசித்தது ஒரு பாம்பு போவோரை
வருவோரை கடித்தது அப் பாம்பு.!

பயணிகள் அந்த வழி தவிர்ப்பார்.. பாலகர்கள் பயத்துடன்
நடப்பார்.! கொத்துதே பாம்பென்று தவிப்பார்.. கொடுங்கோலன்
பாம்பென்று சபிப்பார்.!

காட்டுவழிப் பாதையிலே ஒருநாள்..
கடும் தவ முனியொருவர் வந்தார். நாட்டு மக்கள்
தன்குறை கூற.. தவமுனிவர் அருளாசி தந்தார்.!

நாகத்தைப் பார்த்து அவர் சொன்னார்.. நல்ல பாம்பே..
நல்ல பாம்பாய் மாறு..நடமாடும் மானுடரை கடிகாதே..!
நான் மீண்டும் வருவேன் என்றார்..!

தவமுனியின் வார்த்தைப்படி பாம்புதனையடக்கி பதையிலேக்
கிடக்கும்..! பயமற்று சிறுவர்கள் கல்லெறிந்து அடித்தார்!

உடலெல்லாம் புண்ணாக பாம்பு.. ஓரமாய் ஊர்ந்து போய்
பதுங்கும்.. தவமுனிவர் திரும்பவும் வந்தார்!

பாம்பே நீ நலம்தானா கேட்டார்..
தன் பாடுதனை சொல்லியது அழுவே.. கல்லாலே சிறார்கள்
அடித்தார்.. கண்ணீருடன் நான்யிங்கு பொறுத்தேன்!

கொத்தாதே என்றுதான் சொன்னேன்.. சீறாதே என்று
சொன்னேனா? சீறு நீ பாம்பே சீறு..!படம்விரித்து பயமின்றி
சீறு.. பாதகர்கள் நடுவே நீ சீறு!

சீறினால் அடிப்போர்கள் ஓடுவார்..



சீற்றமே தற்காத்தல் அறிக.! அடித்தோரும்
மிதிப்போரும் பதற.. துடிக்காதே துணிந்து நீ
சீறு..!

மாற்றத்தை தருவதே சீற்றம்.. மனிதர்க்கும்
வேண்டுமே சீற்றம்..சீற்றத்தை அகற்றாதே
பாம்பே.. தவமுனிவர் உபதேசம் புரிந்தார்.!

**வே.கல்யாண்குமார்.**

## ஆணவம் போக்கல் அறிவு!

நேரிசை வெண்பா!

நானெனது என்ற
நலமிலாச்செருக்கின்றி
தேனென வாழ்வில்
தெளிவான... வானுயரப்
பேணின் பெருமையே
கிட்டிடும் நம்மிலே
ஆணவம் போக்கல் அறிவு!

ஆன்மாவைப்பற்றியுள்ள
பீடில் அழுக்கேதான்
நானென்ற ஆணவம்
நாளுமே.. வீணென்றே
காணும் உயிரில் உடலிலே




கண்ணியமாய்
ஆணவம்
போக்கல்
அறிவு!

**முனைவர் இராம. வேதநாயகம்.**
திருவண்ணாமலை.

பெரும்பாடு பட்டு
ஒன்றிணைந்த
சொல் மேகக் கூட்டங்கள்
இடி, மின்னல்
ஏதுமில்லாமலேயே
பொழிந்து தள்ள..
அகமும் புறமும்
குளிரச் செய்கிறது
தளர்ந்து கொடுத்தே
நெகிழ்ந்து கிடக்கும்
நிலமடந்தையை
முத்துக் குளியலில்

மலர்ந்து சிலிர்த்தது
மன ரோஜாவும்..



வார்த்தைப்
பனித்
துளிகளின்
முத்தத்தில்.

**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்

பார்க்காமலே புரிந்தது
பற்றித் தூக்கிய கை
உன்னுடையது தான் !

நான் பார்க்காதபோதான
உன் சிரிப்பெல்லாம்
என் கணக்கில் வரவில்லை !



என்
பக்கங்களை
நிரப்பி
விடுகிறது
உன் பார்வை !

**ரிஷபன்**



அம்முகுட்டி பேபிம்மா
என் பௌஜிம்மா நீ தான்
வெண்ணைக்கட்டி பூத்மா
என் பௌஜிம்மா நீ தான்
செல்லக்குட்டி அம்மும்மா
என் பௌஜிம்மா நீ தான்
உன் கண் பார்த்து
எனை தொலைத்தேனடி
உனை பார்த்து காதல்
படித்தேனடி என்
ஆக்ஸ்போர்ட்டு அகராதியே
என் வாழ்வின் அர்த்தம் நீயடி
என் திண்டுக்கல்
திராட்சையே திகட்டாமல்
இருப்பவள் நீயடி
என் திறக்காத இதயப்பூட்டும்
திறந்ததும் உன்னால் தானடி



மணக்கின்ற
மனம்
விரும்புகின்ற
என் அசைவ
பிரியாணியும்
நீயடி
உன் கரம்
பிடித்த நாளே
என் வாழ்வின் பெருநாளடி!

**லி.நௌஷாத் கான்**



## வலி....


முள் தைப்பதில் மட்டும்
அல்ல... மலர்களின்
மௌனம் கூட...வலி தான்...

நீயற்றத் தருணங்களையும்...
சிந்தித்திருக்க வேண்டும்...
நான்... வானவில்லாய்
வடிவமைத்த நீ தான்...



வெறுமையாகவும்
மாற்றி
விட்டாய்...
வாழ்க்கையை....
விலகல்
மூலம்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## ரங்கராட்டினம்

நீ வந்து பேசிச்
சிரித்துக் குறும்புகள் செய்து
அணைத்து நாம் விளையாடி
மகிழும் போதெல்லாம்
குறும்புக் கதைகள் படித்து
ரசித்ததைப் போல்
அட்ராசிட்டி அலப்பரை
செய்கிறது என் மனசு!
இன்றென்ன முருங்கைக்காய்
சாப்பிட்டாயா என்ன?
என்று உன் கண்கள்
கேட்கும் கேள்வியில் என்
கா த ல் கண்காட்சியில்
ரங்கராட்டினம் சுற்றி விட்டு
இறங்கினாற் போல்
மயக்கமுறுகிறது!
எப்பொழுதாவது ஒரு முறை
தான் வருகிறாய்!
ஆனால் எப்பொழுதுமே
உன்னை நினைத்துக்
கொள்ளும் படியான
கவிதைகளையல்லவா
எனக்குள் எழுதி விட்டுப்
போகிறாய்! உனக்காகவே
இன்னொரு பிறவியெடுக்கத்



தவமிருக்கும்
ஆசை
வருகிறது
எனக்கு!(ள்!)

**முத்து ஆனந்த்**
வேலூர்

## முதுமை

வசந்தமாகத் தொடங்கிய
வாழ்க்கை...

உடல் சோர்ந்தாலும்
மனம் விழித்திருக்கும்
முதுமை மரத்தின் நிழலில்
இளைப்பாறும் தருணம்...

ஓடிய நாட்கள்
ஒவ்வொன்றும் திரும்பி
அனுபவ கதைகளாகத்
தொடர..
பருவங்கள் கடந்தும்
பாதை நீண்டு
உள்ளம் மட்டும் தெளிவாக...

காலம் கற்ற பாடங்கள்
கடினமாக இல்லாமல்
இலேசாக மனதில் அமர...
முடிவில் வாழ்க்கை...
நீண்ட வரலாறு அல்ல...
காலம் செதுக்கிய
அனுபவத்தின் பயணம்



## விண்மீன்கள்

நிலாப் பெண்ணோடு
இரவின் நிழலில்
உலாவரும் நட்சத்திர
நாயகனே...

இமையின்றி ஒளிர்கிறாய்
இதழின்றி சிரிக்கிறாய்
ஓசையின்றி அழைக்கிறாய்

உன்னழகைக் கண்டு
ரசித்து, திகைத்து, பிரமித்த
என்னை அழைத்து என்ன
வேண்டுமெனநீ கேட்டால்...
உன்னைத் தவிர வேறென்ன
கேட்பேன் நான்.

கனவின் கதவுகள் திறந்து
காற்றின் கரங்களில் ஏறி
உன் உலகத்துக்குள்
வந்தால்... ஓர் நொடி
பார்வையில்ஒரு யுகம்
வாழ்ந்தது போலஎன் உள்ளம்
நிரம்பி வழியுமே...


நீ சிரிக்கும் அழகில்...
நிலவும் பொறாமை
கொள்ளுமே என்னுயிரே
உன்னில் கரையுமே...

**நா.பத்மாவதி,** கொரட்டூர்

## வாழ்விக்க வந்த வள்ளுவம் !


எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் ,அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு !

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின்
போராட்டத்தை ஒரே திருக்குறளில் அடக்கிடலாம் !



சொல்வது யார் ? என்பது முக்கியமன்று
சொல்வது சரியா ? என்பதே முக்கியம் !

அவரே சொல்லி விட்டார் என்பதற்காக
அப்படியே ஏற்பது என்பது மடமை !



எவரே சொன்னாலும் அவர் சொன்னதில்
ஏதேனும் உண்மை உள்ளது ஆராயவேண்டும் !

எதையும் ஏன் ? எதற்கு ? எப்படி? எதனால் ?
என்று ஆராயக் கற்பித்த ஆசான் பெரியார் !

மூடநம்பிக்கைகளை முற்றாக எதிர்த்தார் !
மூளையைப் பயன்படுத்திடக் காரணமானார் !

வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று எப்போதும்
வெண்தாடி வேந்தரைப் பேசவைத்தது திருக்குறள் !

சமரசத்திற்கு இடமின்றி கொள்கைக் குன்றாக்கியது
செந்தமிழன் மகுடமான மட்டற்ற திருக்குறள் !



அறிவுப் புரட்சியை அகிலத்தில் நிகழ்த்திட
அகரமாக இருந்தது சிகரமான திருக்குறள் !

ஈ .வெ.இராமசாமி நாயக்கர் என்ற வணிகரை
ஈரோட்டுப் பெரியார் ஆக்கியது இணையற்ற
திருக்குறள் !

**கவிஞர் இரா .இரவி !**

1. இளநீர் காரருக்கு தாகம்
எடுத்தது எதிரில் உள்ள
கடையில் போய்
குளிர் பானம் குடித்தார்

2. ஆணின் திருமண
வாழ்க்கை என்பது பெண்
பார்ப்பது ஒரு தலை ராகம்
நிச்சயதார்த்தம் அபூர்வ ராகம்
திருமணம் தெய்வீக ராகம்
திருமணத்திற்கு பின் மௌன
ராகம்

3.உணவை மிச்சம்
வைக்காமல் சாப்பிடு என்றால்
தாய் உணவை யாராவது
மிச்சம் வைக்க மாட்டார்களா?
என எதிர்பார்த்து
காத்திருந்தது நாய்

4. வாய் செய்த தவறுக்கு
கால்களுக்கு கொடுக்கப்படும்
தண்டனை தான் வாக்கிங்



5. சாப்டிங்களா என்ன
சாப்டிங்க எப்போது
சாப்பிட்டீங்க என்று
மனைவிக்கு பிறகு
அக்கறையாக கேட்பது சுகர்
டெஸ்ட் எடுக்கும் நர்ஸ்
மட்டுமே

---------------------

1.வெற்றி பெறுவதற்கான
முதல் படி நன்றாக படி

2.எதற்கு என்னை உணவில்
சேர்த்தார்கள் என்று
தெரியவில்லை தட்டின் ஒரு
மூலையில் இருக்கிறேன்
என்றது கருவேப்பிலை.

3.எத்தனை சிறப்பாக குதிரை
வண்டியை இழுத்தாலும்
அதற்கும் சாட்டையடி உண்டு
அதேபோல் எத்தனை சிறந்த
மனிதராக இருந்தாலும்
உனக்கும் விமர்சனம் உண்டு

4.வாசனை என்பது சில
நிமிடம் வரை வறுமை என்பது
சில காலம் வரை அழகு
என்பது வயது உள்ளவரை
நல்ல உறவு என்பது உயிர்
உள்ளவரை

5.குப்பையை நோக்கிச் சென்ற
உரல்கள் அம்மிகள்
மருத்துவமனையை நோக்கி
சென்ற உடல்கள்

6.வாழ்க்கை ஏற்றத்
தாழ்வுகளால் நிரம்பி உள்ளது
தாழ்வு இல்லாமல் உயர்வு
இல்லை

---------------------

1. கடவுள் படைத்த உலகில்
மனிதன் வாழ்கிறான்
மனிதன் வடித்த சிலையில்
கடவுள் வாழ்கிறார்

2. படிப்பு என்பது மூளைக்குள்
தகவல்களை திணிப்பது
அல்ல அது மூளையை
சிந்திக்க வைக்கும் ஒரு
கருவி

3. சில இடத்துக்கு நாம
போறது புண்ணியம்
சில இடத்துக்கு நாம
போகாமல் இருப்பது
கண்ணியம்

3. நடிக்கத் தெரியாத அன்பு
கோபமாகத்தான் வெளிப்படும்

4. மாஸ்க் கொரோனாவில்
இருந்து நம்மளை காப்பாற்றும்
மௌனம் மனைவியிடம்
இருந்து நம்மளை காப்பாற்றும்

5. எப்பொழுதெல்லாம்
விமர்சனங்கள்
எழுப்பப்படுகிறதோ
அப்போதெல்லாம் நீ
கடமையை சரியாக



செய்கிறாய்
என்று அர்த்தம்
மற்றவர்களின்
வயிற்றெரிச்சல்
தன் விமர்சனம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## சொந்த வீடே சொர்க்கம்

எங்கள் ஊர் இலாசுப்பேட்டை அது
சுத்தத்திலே அரசன் கோட்டை
கோடியிலே ஒரு உயரமான மேடு அதில்
கட்டிய அடுக்குமாடி வீடு

ஏற வேண்டாம் பல படிக்கட்டு
அதிலிருந்து மேலே போக லிப்டு
கிடைக்குமா இதுபோல சிறிய மனைகட்கு கூடுகட்டி
வாழுதேபார் குருவிச்சிட்டு

வீசுதம்மா நல்ல தென்றல் காற்று நாள்தோறும் கிடைக்கும்
தண்ணீர் நல்ஊற்று உயர்மின்சாரத்தால் இயங்கும் நீர் இயந்திரம்
இதையமைக்கப் பொறியாளர் போட்டாரோ மந்திரம்

வீட்டுப் பக்கம் குளுகுளுனு பூங்கா அழகாய் அமைந்தது யோகப்
பாங்காய் கடைக்குப் போய் வாங்க வேண்டாம் தேங்காய்
மரத்திலிருந்து பறித்துத் தின்னலாம் ஒட்டு
மாங்காய்



பள்ளிசென்று படிக்கலாம் பல நூலு சென்றுவர
தூரமில்லை வலிக்காதே காலு கடை கண்ணி
பக்கத்திலே உண்டு என்னுள்ளம் மகிழாதோ இதன்
வனப்பைக் கண்டு

**எஸ். சந்திரசேகரன் அமுதா**,செஞ்சிக்கோட்டை.

# நூல் விமர்சனம்


நூலின் பெயர் : எழுத்துச்
சித்தர் பாலகுமாரன்
எழுத்துக்கு எழுபது
தொகுத்தவர்: பாலகுமாரன்
வெளியீடு : விசா
பப்ளிகேஷன்ஸ்
விலை : ₹1200
தொடர்புக்கு: 044– 2432
2899/2432 7696

எழுத்துச் சித்தர் பாலகுமாரன் பற்றி பிரபல எழுத்தாளர்கள்/ வாசகர்கள்/ஜோதிட நண்பர்கள் / ஊடகவியலாளர் என 128 பேர் அவருடனான நெருக்கம் குறித்து பகிர்ந்து கொண்டதன் தொகுப்பே இந்நூல்.

இவருக்கு எழுத்துச் சித்தர் என பெயர் சூட்டியவர் குமுதம் பக்தி ஸ்பெஷல் ஆசிரியர் ஜெயாப்பிரியன் என அவரின் முகநூல் பதிவால் அறிந்தேன். அதை மறைந்த குமுதம் ஆசிரியர் ப்ரியா கல்யாணராமன் பாராட்டினாராம்.

பாலகுமாரன் சொன்னது போல அவரின் இறப்புக்கு பிறகும் இப்புத்தகம் உயிரோடு இருக்கும். இதிலிருந்து ஒரு சில பகுதிகள் உங்களுக்காக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்:

32 வருடங்களுக்கு முன்(2016 ல் இந்நூல் வெளியானது)திரு. பாலசந்தர் அவர்கள் சொல்லி ஏதோ ஒரு பத்திரிகைக்காக இவரை பேட்டி எடுத்தார் என்கிறார். அன்று அவர் கேட்ட கேள்விகள் இதுவரை யாரும் அவரிடம் கேட்டதில்லையாம். பாட்ஷா படத்தில் ," நான் ஒரு தடவ சொன்னா 100 தடவ சொன்ன மாதிரி" என்ற வசனம் பாலகுமாரன் எழுதியதே. சிந்துபைரவி படத்தின் போது இவரோடு நெருங்கிப் பழக வாய்ப்பு கிடைத்தது என்கிறார் நடிகர் சிவகுமார்.






ராஜ்கிரண் மகன் பெயரை நைனார் முகம்மது என மாற்றியவர் பாலகுமாரன். திப்புசுல்தான் என்பது சாதாரண மன்னனோ, சாதாரண ஆத்மாவோ அல்ல. அது பெரும் ஜுவாலை...அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி யாருக்கும் கிடையாது எனக் கூறி பெயரை மாற்றினாராம். கொல்லையும் வாளியும் வரளுகின்றன அவளில்லா தனிமையில் என்று பாலாவும் நேற்று மணமுடித்த நேப்பாள கூர்க்காவிற்கு இன்றுதான் முதற் பகல் என்று சுப்ரமண்யராஜுவும் கவிதையில் கரைந்து கொண்டிருந்த 1975ல் அறிமுகம் ஆனதாகச் சொல்கிறார் எழுத்தாளர் இந்துமதி.

எழுத்து பிதாமகர் சாவி அவர்களின் வைரமோதிரக்கையால் பலமான குட்டு வாங்கிய முதல் எழுத்தாளர் பாலகுமாரன் என்கிறார் க்ரைம்கதை மன்னன் ராஜேஷ்குமார்.

பாலகுமாரனின் " உடையார்" நாவல் ஒன்று போதும் "ஞானபீட" விருது பெறத் தகுதியானது என்கிறார் மறைந்த எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன். பெண்களிடம் பொதுவாக ஆண்கள் கவனிக்கத் தவறும் சில அம்சங்களை, குணாதிசயங்களை பாலகுமாரன் கவனித்திருப்பார். ஒரு பெண் மனம் திறந்து எழுதினால், இப்படித்தான் எழுதுவாள் என்று அடித்துச் சொல்லக்கூடிய விதமாக அவர் எழுத்து பரிமளிக்கும் என்கின்றனர் சுபா ( சுரேஷ்- பாலகிருஷ்ணன்) அருள் ஆன்மிக இதழின் ஆசிரியர் கிருஷ்ணா பாலகுமாரனின் சீடராக இருந்தவர். "யோகி ராம் சுரத்குமார் ஜெயகுரு ராயா" என்ற மந்திரத்தை எல்லேரிடமும் கொண்டு சேர்த்தவர் எழுத்துச் சித்தர்.அவர் குருவின் பெயரை உச்சரித்தாலே உள்ளே ஒரு அதிர்வலை ஏற்படும். அந்த குருநாதரே பாலகுமாரன், " என் பேனா" என்கிறார். பாலகுமாரன் நாவல்கள் தனக்கு வேத புத்தகம் என்கிறார் மோகனூர் பார்த்தசாரதி. பின்னிணைப்பாக அவர் எழுதிய நூல்களின் விவரங்கள்...

**ஸ்ரீகாந்த் திருச்சி**







## சொர்க்கம் வந்ததே

உள்ளம் மகிழ்ச்சியில் மலர
சொர்க்கம் தெரிந்ததே...
பூக்களின் வாசம் போல
மனதில் மகிழ்ச்சி பொங்க
நேசமும் பிறந்ததே ..
எண்ணிய எண்ணம்
எல்லாம் மென்மையாக
நிறைவேறியதே ...
வீசும் காற்றில் மனம் மகிழ
நிம்மதி பிறந்தது.
விண்ணில்
மின்னியதாரகைப் போல
கண்கள் மின்னியதே....
தினம் தினம் இனிதாய்
வெற்றியால் மனம்
மகிழ்ந்தது மழைச்சாரல்
போல மகிழ்ச்சி முகத்தில்
தெளித்ததே.... துக்கமும்
இல்லை துயரமும் இல்லை
இன்பமும் வெற்றியும்



வந்ததே...
உறவுடன்
இருந்த நொடி
எல்லாம் மனம்
விழைந்ததே...
அகிலமே
சொர்க்கமென
தெரிந்ததே...

**உஷா முத்துராமன்**



## HAPPY WOMENS DAY

நான் ஒரு பெண்ணின்
மொபைல் போன் பேசுகிறேன்
நீ எதற்கும் லாயக்கு இல்லை
,உன்னால பத்து காசுக்கு
புரயோஜனம் இல்லை என
அடிக்கடி அவள் கணவனிடம்
திட்டு வாங்குவாள் .
அம்மா ,சகோதரி
,மனைவி,மகள் இல்லையேல்
வாழ்க்கையில் இன்பமேது
இந்த உலகமே பெண்களால்
தான் சுழல்கிறது என்றும்
இனிய மகளிர் தின
வாழ்த்துக்கள் என்ற
அவனின் ஸ்டேட்டஸ்
பார்த்து என்னை நானே
எரித்து கொள்ளலாமா என
தோன்றுகிறது
இப்படிக்கு அவளின்
மொபைல் போன்

**லி .நௌஷாத் கான்**

## பிரிவுபசார விழா

மாணாக்கர்களுக்கு
அறுசுவை சிற்றுண்டியை
மனமுவந்தளித்து
வாயாற வாழ்த்தி
வயிறார உண்ணச்செய்து
அவர்களின் துவக்கப்பள்ளி
வகுப்பிலிருந்து முன்னேறி
மேற்படிப்பை தொடர்ந்து
மேல்நிலை பெற்று
வாழ பாரபக்ஷமின்றி
பிரிவுபசார வாழ்த்தும்
விருந்தும் அளித்து கற்ற
கல்விக்கூடத்தையும், கல்வி
பயிற்றுவித்த துவக்கப்பள்ளி
ஆசிரியர்களையும்
மாணவர்கள் அவர்தம்
வாழ்நாள் முழுக்க மறக்காமல்
நினைவுபடுத்தி மகிழ
முத்தாய்ப்பாய் அளிக்கும்
பிரிவுபசார விருந்து !

**Uma Venkatesan**



அன்னம்போல நடந்து
வாறா... அள்ளித்தண்ட
போல வளையுறா....
தங்க தாமரையாட்டம்
சிரிக்கிறா... கட்டிக்
கரும்பபோல இனிக்கிற...

(அன்னம் போல....)

சோளக் கொல்லையிலே
குயிலு கூவுதடி அந்தப்
பாட்டே கேட்கையிலே
அசந்து நானும் போனேனடி...

ஒடி வந்து பார்ப்பதற்கு மனம்
நாடி தேடி செல்லுதடி...
உன் குரலை கேட்கையிலே
ஊமையாகிப் போனேன்டி...

சீமையிலே பார்த்ததில்லை
சின்னவளை உன்னழகு
சிங்காரத் தேன் மலரே
சிறுபொழுது நில்லேன்டி..

(அன்னம் போல)

வசந்த காலத்திலே வஞ்சி
உன் அருகினிலே
இன்ப சுகம் காண்பதற்கு
ஏகமும் வருகுதடி

வைகர பொழுதினிலே வந்த
இளம் மாமயிலே
இந்த சுகம் இப்போது
இருந்தால் மட்டும்போதுமடி...

(அன்னம் போல)




இயற்கைக்கொடையை
குடும்ப சகிதமாக உழைத்து
மகிழ்ந்து ஆரோக்யமான,
சந்தோஷமான சூழலில்
நடவு நடுவதிலிருந்து
தந்தையின் அர்ப்பணிப்பான
உழைப்பை கண்ணுற்று
வாழும் இல்லாளும் ஈன்ற
மகனும் ! தாய் சாலப்பறிந்து
உணவு தயாரித்து, தன்
கடமையாற்றி கணவனுக்கும்,
குழந்தைக்கும் பசியறிந்து
உணவு தயாரித்து, சேர்ந்து
பகிர்ந்து உண்டு மகிழ்ந்து
பயிரிடும் வேலையிலும்
பங்கேற்று சேர்ந்து சிரித்து
சேர்ந்து மகிழும் அழகான
இயற்கையுடன் இணைந்த
இல்லற வாழ்க்கை !

**உமா வெங்கடேசன்**

## புல்கூட நம்மை வீழ்த்தும்

கண்மூடி பொய்யுறக்கம் கொண்டி ருந்தால்
கனவினிலும் நல்வழிகள் தெரிந்தி டாது
விண்மீதில் பறப்பதற்கே ஆசை கொண்டால்
வெறுங்கையை வீசிநின்றால் நடந்தி டாது !
மண்மீதில் பெயர்நிறுவி புகழ்கு விக்க
மனம்மட்டும் விரும்புவதால் நடந்தி டாது
திண்மைமிகு உண்மையுடன் தளர்ச்சி யின்றித்
தினமுழைத்தால் தானிங்கே வெற்றி கிட்டும் !

புல்லர்க்கு வழிவிட்டுப் புறத்தே நின்றால்
புல்கூட நம்காலைப் புரட்டி வீழ்த்தும்
பொல்லாமை கண்டஞ்சி மௌன மானால்
பொய்புரட்டே மேடையேறி வீரம் பேசும் !
நல்லவர்கள் வீட்டிற்குள் பதுங்கிக் கொண்டால்
நரிகளிங்கே நாடாளும் தலைமை யாகும்
வல்லடிமை நினைவகற்றித் துணிவு பெற்று
வந்தால்தான் நல்லவையும் நடக்கு மிங்கே !



நமக்கென்ன என்றொதுங்கி நாமி ருந்தால்
நம்கண்ணை நாம்குத்திக் கெடுவ தாகும்
தமகென்றே வாழ்வோரின் தாளில் வீழ்ந்தால்
தலைகனத்து நம்வயிற்றில் காலை வைப்பர் !
சுமக்கின்ற கொடுமைகளைச் சிலுவை என்றே
சுமந்துநின்றால் முள்மகுடம் சூட்டிப் பார்ப்பர்
நமதென்னும் பொதுமையிலே மானத் தோடு
நாமெழுந்தால் நற்காலம் பூக்கு மிங்கே !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## நான் எழுதுவது கடிதமல்ல...

அன்புள்ளம் கொண்ட என்
அம்மா அப்பாவுக்கு
வணக்கங்கள்.
உங்கள் அன்பு மகனின்
விழிப்புணர்வு கடிதம்.

ஜனநாயக தேர்தல்
திருவிழாவில் நீங்கள்
அவசியம் பங்கேற்று
வாக்களிக்க வேண்டும்.

நமது கடமை நமது உரிமை
வாக்கு யாருக்காகவும்
எதற்காகவும் விற்காமல்
உண்மையான
சேவை பற்றாளனுக்கு
வாக்களியுங்கள்.

எனது ஒட்டுரிமை
வயதுக்க்காக
காத்திருக்கிறேன்...
கடமையாற்றிட தங்கள்
உரிமைகளை தட்டிப்
பறிக்கவும் எதற்காகவும்
விட்டுக் கொடுக்கவும்
கூடாது.

மாபெரும் நமது ஜனநாயக
திருவிழாவில் பங்கேற்று
விழிப்புணர்வுடன்
வாக்களியுங்கள்
பொறுப்புணர்ந்து மறவாதீர்.



தங்கள் அன்பின்
புதல்வன்
எதற்கும் விலை போகாத
மாசில்லா மணி.

**எறும்பூர் கை. செல்வகுமார்,**
செய்யாறு.



## கா..கை வலிப்பினரைப் பாதுகாப்போம்!

நேரிசை வெண்பா!

கால்கை வலிப்பினைக்
காட்டிடும் நாளிதுவே!

ஆள்வினை யின்றி
அசைவினால்.. தோளில்

உரமின்றிச் செய்திடும்
உன்னதமாக
நரம்பியல் கோளாற்றை நன்று!
மூளையைப்பாதிக்கும்
முன்னேற்றம்போகுமே!

காலுடன் கையும்
வலிப்பாலே.. கோலமின்றிக்

காணுமே தன்னினைவும்
காணாமல் வாழ்வரே

பேணுவோம் அன்னாரைப்
பீடு!

## இயற்கை!

(எழுசீர் மண்டிலம்)

இயற்கை என்னும்
எழிலாம் அன்னை
இனிதாய்த் திகழ்வாள்
என்றும்! நயன்மை யோடே
நாளும் அவளே
நல்ல
பொருளைத்தருவாள்!
பயனில் முதன்மைப்
பாங்காய்க் கண்டு
பளிங்காய் அவளே
நிற்பாள்!
வியப்பாய் மாந்தர்
வாழ்வில் உயர்ந்து
வெற்றி நடையைக்காண்பாள்!

நீரும் நிலமும் காடும்
விலங்கும் நேர்ந்த தன்றோ
இயற்கை! பாரில் பசுமை
பளிங்காய்த் தந்தே
பண்பாய் நிற்பாள்
இயற்கை! சீரும் சிறப்பும்
செழிப்பும் கலந்து
செம்மை நல்கும் இயற்கை!
ஊரும் வாழ
உலகும் வாழ உதவும் நாளும்
இயற்கை!

## ஈகை புரிவோம் இனிது!

நேரிசை வெண்பா!

பிரதிபலன் காணாமல்
பீடுடன் செய்யும்

பரிவேதான் ஈகையென்போம்
பாங்காய்...அருமையான

தாகத்தில் தண்ணீர்
கொடுப்பதுபோல் இல்லார்க்கே

ஈகை புரிவோம் இனிது!

ஈகையெனும் இன்பவழி
இட்டேதான் சென்றிடும்

வேகமாய்ச் சொர்க்கத்தின்
வீறுடை.. வாசலுக்கே!



ஆகவே இல்லார்க்கே
அன்பாக எந்நாளும்

ஈகை புரிவோம்
இனிது!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

1. ஒவ்வொருவருக்கும்
அடுத்தவரின் குறை
பளிச்சென்று தெரிகிறது
ஆனால் அவர்களின்
குறை மங்கலாக கூட
தெரிவதில்லை

2. உலகத்திலேயே பொய்
அதிகமாக பேசும் இடம்
கோர்ட் ஆகவும் உண்மை
அதிகம் பேசும் இடம்
டாஸ்மாக் கடையாகவும்
உள்ளது

3. கடவுள் உங்கள்
பிரச்சினையை தீர்க்கும்
போது உங்களுக்கு கடவுள்
மீது நம்பிக்கை வரும்
கடவுள் உங்கள்
பிரச்சனைகளை தீர்க்காத
போது கடவுளுக்கு உங்கள்
மீது நம்பிக்கை இருக்கிறது

4. முடியாது என்ற
வார்த்தையை மூளைக்குள்
ஏற்ற வேண்டாம் நம்மை
நாமே உணராத வரையில்
ஆற்றலும் பெருகாது
வாழ்க்கையும் வசப்படாது

5. மனைவியிடம் இருந்து
என்னவோ பண்ணுங்கள்



என்று
சொன்னால்
என்னை
மீறி எப்படி
பண்ணுவீங்க
என்று
பொருளாகும்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## சிறந்தவை-ஆறு !

கடைசி சிரிப்பு– மணமேடை!

மணமக்கள் கை கோர்த்து
சுற்றி வருதல் – சண்டை
பயிற்சிக்கான முன்னோட்டம்

மாமனார், மாமியார் காலில்
விழுதல் – மாப்பிள்ளை
என்ன கஷ்டப்படப்போறாரோ

பிரிகையில் பெற்றோரை
கட்டியணைத்து அழுதல்–
இனி இந்த அழுகை
அவரில்ல அழுகனும்.

சிறந்த குடும்ப ஆயுதம் –
பூரிக்கட்டை, கரண்டி



திருமணமான
ஆண்களுக்கு
சோகத்தை
சொல்லி
புலம்ப
புகலிடம்–
டாஸ்மாக் !

**எம்.பி.தினேஷ்.**கோவை



## நீல குயில்கள்

அழகான கிராம பள்ளியின்
நீல குயில்கள்
பந்து விளையாடும்
இரட்டை ஜடை சிட்டுகள்
அரசு பள்ளியில் கல்விக்கு
மட்டுமல்ல பயிற்சி
அனைத்து விளையாட்டிற்கும்
கலைக்கும் பயிற்சி
முயற்சி அனைத்தும் உண்டு
எங்கள் கட்டணமில்லா
பள்ளியில் கவலை இல்லை
இனி நாங்கள் எதிலும்
எங்கும் பளிச்சிடும் எங்கள்
ஆற்றல் முன்னிலை
வகிக்கும் கல்வி கலை
விளையாட்டு என அனைத்து
துறையிலும் வெற்றி வாகை
சூடி கிராமத்தின் மணம் வீச
செய்திடுவோம்உலகத்தோடு
இணைந்து கிராமத்தை
உயர்த்தி வளர்த்திடும்
சாதனை மலர்கள் நாங்கள் !!

**Chellam sekar**

## கவிதை பிறந்த கதை.!

நினைப்பதெல்லாம்..
எழுதிவைத்தால் அதன் பெயர்
கவிதையல்ல.!
கரைந்துருகச்
செய்துவிட்டால்.. கவிதைக்கு
மரணமில்லை!

மழையெனவே
பொழிவதெல்லாம் மாபெரும்
கவிதையல்ல..!
படிப்பவர்கள் மனம்
விதைத்தால்.. கவிதைக்கு
இறப்புயில்லை.!

*ஏதோ உலகத்தில்
பிறந்தோம்.. இங்கு
எப்படியோ நாம் வளர்ந்தோம்..
எல்லோரையும் போல்
பிறப்பும் இறப்பும் கவிஞனுக்
கிங்குயில்லை.!

முடிந்தவரை எழுதுவது
என்றென்றும்
கவிதையில்லை.. முடிவுயின்றி
நிலைத்திருக்கும் சொற்களோ
மறைவதில்லை..!

*வாழ்க்கைப் பாதையில்
எங்கும்.. வழிகளில் மழைநீர்த்
தேங்கும்.. யாக்கை யெடுத்த
அர்த்தங்கள் யாவும் இவனது
எழுத்துக்கள் சொல்லும்..!

கடலிருந்து வானம் சென்று
மண்தனைத் தேடி வரும்..
கவிதைகளும் இவன்வழியே..
கடவுளைத் தேடி வரும்!

**வே.கல்யாண்குமார்.**



## முத்துக்களோ கண்கள்

உன்னைப் பற்றிப் பேசுவதும்
எழுதுவதும்மகிழ்வதும்
பாடுவதும் மட்டுமல்ல
உன்னைப் பற்றி
நினைப்பதும் கூட
எனக்குக்கா த ல் தான்!
விதவிதமாக என்னை
நோக்கும் உன் விழிகள்
இருக்கிறதே அது என்
கனவில் வந்தாலும் கூட
முத்துக்களோ கண்கள்
என்று பிரமிக்கிறேன் நான்!
உன் கண்களை ரசிக்கின்ற
பொழுதுகளிலெல்லாம்
சின்னக் கவுண்டர்
விஜய்காந்த் கோர்த்துத் தந்த
முத்து மணி மாலை போல்
உனக்கும் நான்
வழங்க ஆசை!
ஆனால் அது வரையே
என் ஆவல்! அதில் வரும்
பம்பரக் காட்சி போல்
நான் ஒரே ஒரு வினாடி கூட
ஆசைப்பட்டதில்லை!
நீ என்னை நல்லவன் என்று
கூடச் சொல்ல வேண்டாம்
அதை விட அழகான
உன் மு த் த ங் க ள்
போதும்!

## தித்திப்பதோ கன்னம்

எனக்குப்பிடித்த இனிப்பு
வகைகள் எதுவெதுவென்று
நீ என் காதைச் செல்லமாகக்
கடித்தபடியே கேட்கிறாய்!
உன் ரகசிய ஆசை
என்னவென்று என்
பதிலுக்குத் தெரியாதா
என்ன?! என்
செல்லச் சீமாட்டி உன்னைச்
சீண்டி ரசிப்பதும்(கூட)
என் அழகான ஆசைகளில்
ஒன்றென்று என்
அன்பிற்குத் தெரியாதா
என்ன? கருப்பட்டி, கரும்பில்
தொடங்கித்தொடர்ந்து
தொடர்கிறேன்!
நீயும்(கூடக்)கடைசி வரை
தித்திப்பது உன் கன்னம்
என்று நான் சொல்லும் வரை
விடவில்லை விடவில்லை
விடவேயில்லை!
அப்பொழுது தான் நான்
அந்த(ரங்க) உண்மையைக்
கண்டுபிடித்தேன்!
ஆம் அன்பே! எல்லா
ஊர்களின் குறும்பையும்
நீ குத்தகை அல்லவா
எடுத்திருக்கிறாய்!

## சந்தித்த வேளையில்

நீ கவனித்திருக்கிறாயோ
இல்லையோ என் இனிய
வசந்தமே நாம் சந்தித்த
வேளைகளில்
இது தான் வேலையென்று
நம் இருவரிடையே வந்து
ஒட்டிக் கொள்ளும் பார்
இந்தக் காதல்!
அந்த அன்பிற்கும்
அதன் பணிக்கும் நீயும்
நானும் என்ன
வேண்டுமானாலும்
செய்யலாம்!
அந்தக் கடமையைச்
செயலாற்றவே நான்
முழுமையான அன்பை
உன்னிடத்தில் விதைத்தேன்!
உன் அழகிய குரலில்
அடிக்கடி குறள் சொல்கிறாய்!
அதன் பிறகே நான்
உன்னைச் சந்திக்கும்
வேலைகளும் அதற்கெனவே
காத்திருக்கும் காதலின்
வேலைகளும் இனிதே
இனிதாக நிறைவேறுகிறது!
இனியெல்லாம் வரமே! சுகமே!
வாழ்வே! வசந்தமே!
என்று விதவிதமாகச் சொல்லி
காதலுக்கான கோடிட்ட
இடங்களை நீயும்
நானும் நிரப்பிக் கொள்ளலாம்!

## சிந்திக்கவேயில்லை!

நீ என்னவெல்லாமோ
சொன்னாலும் நான்
சிந்திக்கவேயில்லை
காதல் ஒன்று மட்டுமே
அப்பொழுதெல்லாம்
என் கண் முன்னே நிற்கும்....
அல்ல....அல்ல.... கண்
முன்னே தாண்டவமாடும்!
நீ திட்டம் போட்டு
என்னைத்திருட வந்தாலும்
சரிஒரு பட்டாம் பூச்சி போலத்
திடீரென வந்தாலும் சரி
கொஞ்சமும் சிந்திக்காமல்
உனக்கு வசந்தமாய்
ஒரு வணக்கம் சொல்லி
வரவேற்கிறது என் கா த ல்!
உன் அங்கத்தில்
ஓர் இடத்தில் கூடத்
தங்கம் இடம் பெறா
விட்டாலும் என்
இல்லம் தேடி வந்த
பொன்மகள் அல்லவா நீ!?
எப்படித்தான் தெரியுமோ
என்று தெரியவில்லை!
நீ வரும் போது தான்
அந்தத் தென்றல் கூடத்
தெருப் பக்கம் வருகை
தருகிறது!

## தந்து விட்டேன் என்னை....

உன்னை உயிருக்கு உயிராகக்
கா த லி க் கி றே ன்
என்பதை நீ சொல்லில்
மட்டுமல்ல அடிக்கடி
செயலிலும் (கூட)
உணர்த்துகிறாய்!
எனக்கு அதைப்
பற்றியெல்லாம்
சொல்லவும் தெரியாது
செய்யவும் தெரியாது!
எனக்குத்தெரிந்த வரையில்
உண்மையிலும்
உண்மையாகக்
காதலெனும் காதலாகத்
*தந்து விட்டேன் என்னை!
நீ வருவதால் என்
கனவுகள் வரம் வாங்கி
வந்திருக்கிறதென்றால்
உன் காதலோ எனக்கு
வாழ்க்கையையே
பரிசளித்திருக்கிறது!
வீழும் காதல் வரலாறென்றால்
வாழும் காதல் வரமல்லவா!



என்னைத்தந்து விட்ட
பிறகே எனக்குத்
தெரிந்தது நீ இரவிலும்
கூட கபடி விளையாடும்
வீராங்கனை என்று!

**முத்து ஆனந்த்**
வேலூர்

ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US 9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY - LOVE
- HEALTH - FAMILY
- BUSINESS - CAREER
- MARRIAGE

ARG CONSTRUCTIONS
We Build Your DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
- Residential Construction
- Commercial Construction
- Customer Satisfaction
Contact Us 9710348377

VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
(FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

PREMIUM LAND SALE
NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO BUY OR SELL PROPERTY OR LAND?
+91 9884417843

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹைப்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

S.R Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யு,
வி.பி.ஜி அவின்யு, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம்
கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை
செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

EuroKids Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Telecaller Job

Apply Today

Mobile Calling !!!!

Rs 250-Rs500 per day

Work From Home Jobs

Rs 8000 - Rs 15000 per month

Ananda Bhaskar

9337501889

7789941009

ஆட்கள் தேவை

வார சம்பளத்திற்கு

லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை

உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்

OMR பெருங்குடி சென்னை

Contact

9790979539

PLOT SALE

ORAGADAM 11L to 23L

TAMBARAM 51L to 69L

OMR 26L to 51L

ECR 52L to 75L

9626777627

WANTED

MARKETING HEAD REAL ESTATE

Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE

(Monthly up to - 1.5 Lakhs)

Age: 25 to 40 Experienced Only

Office @ Anna Nagar

9790021367

WANTED

COLLECTION EXECUTIVES

TELECALLERS

FOR MNC BANK.

Sal.23,000/-

161, Bells Road, Chennai - 05.

Cl.: 98410 38488 / 93848 17349

முனீஸ்வர் துணை

கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்

BI NEW TEACHERS COLONY

பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்

RERA APPROVED

மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES

RG Rajendra Prasath

Proprietor

கங்கோதரி எண்டர்பிரைசஸ்

Buying & Selling

வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.

97103 48377, 89254 08203

gangotharienterprises2018@gmail.com

No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

20% OFF

www.manjalmart.com

7789951009

order@manjalmart.com

ADVERTISE WITH US!

CONTACT US

9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY

New / Resale... Residential / Commercial...

* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds

JOINT VENTURES INVITED

MK REAL ESTATE

Tell me your Budget ⇨ We Show Your Home

Call:7871617005

Just499

Pick Any Website

Just ₹499 Only!

Affordable Website Solutions for Every Business

Matrimonial Website · Real Estate Website · E. Commerce Website

Restaurant Website · Shopping Website · News Website

MLM Binary Website · MLM Level Website · MLM Gaming Website

Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING

TELECALLERS

SALARY STARTING FROM RS.20000/- ONWARDS

+91 7871617005

Vilambaram

www.vilambaram.com

WE ARE Digital Marketing Agency

We are the

LEADS GENERATION FACTORY

For Your

REAL ESTATE BUSINESS

* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead

GROW YOUR BUSINESS WITH US

for more details

+91 7789941009

+91 9337501889

vilambarampage@gmail.com

80 % OFF SPECIAL OFFER DISCOUNT

90 DAYS MONEY BACK GUARANTEE

just499

REAL ESTATE SOFTWARE

We Provide Complete Real Estate Software Solutions

ONLY Rs. 499

Website: just499.com

Phone: 7789951009

WhatsApp: 7789951009

Email: orderjust499@gmail.com

Just499

JOB WEBSITE SOFTWARE

We Provide Complete Job Portal Software Solution

ONLY Rs. 499

Website: just499.com

Phone: 7789951009

WhatsApp: 7789951009

Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU

Marketing Executive

SALARY Rs.15000/-

+ Incentive

+ Petrol Allowance

vilambarampage@gmail.com

7789941009




























விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஓலக்கூர்
பசுமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு விசுவாவசு வருஷத்திய
பிரமோற்சவப் பத்திரிக்கை

அன்புடையீர் வணக்கம்.

குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப் பெருமான், மகிமை நிறைந்ததும், சித்தர்களும், ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் **கோ கிரி** என்னும் திருக்கோயில் ஆகும்.

எழிலும், அருளும் நிறைந்த பசுமலையில் முருகப்பெருமான் ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி என்னும் திருநாமத்தோடு வீற்றிருந்து பக்தர்களின் இன்னல்களை களைந்து வாழ்வில் அனைத்து செல்வங்களையும் தந்து மேன்மையடையச் செய்கிறார் என்பது பக்தர்கள் வாயிலாகக் கண்ட நிதர்சனமான உண்மை.


இறைவன் திருவருளாலும், பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் குருவருளாலும் நிகழும் மங்கலகரமான கலியுகாதி 5126 விசுவாவசு வருடம் பங்குனி மாதம்-**08** ம் தேதி **22.03.2026 ஞாயிற்றுக்கிழமை,** சதுர்த்தி திதி, பரணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை 10.30 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் **மயூர துவஜாரோகணமும்** அன்று முதல் பதினொன்று நாட்கள் வரையில் சிறப்பான மகோற்சவங்களும் நடக்க இருப்பதால் பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு ஸ்ரீமுருகப்பெருமான் திருவருளுக்கு பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| பங்குனி மாதம்- 07 | 21.03.2026 சனிக்கிழமை | விநாயகர் வழிபாடு,பூர்வாங்க பூஜைகள் |
| பங்குனி மாதம்- 08 | 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை | அஸ்திர தேவர் பூஜை, துவஜாரோகணம்(கொடியேற்றம்) |
| பங்குனி மாதம்- 09 | 23.03.2026 திங்கட்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 10 | 24.03.2026 செவ்வாய்க்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 11 | 25.03.2026 புதன்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 12 | 26.03.2026 வியாழக்கிழமை | மயில்வாகன கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 13 | 27.03.2026 வெள்ளிக்கிழமை | முத்து பிரபை கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 14 | 28.03.2026 சனிக்கிழமை | இந்திர விமான கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 15 | 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை | திருக்கல்யாணம் இரவு 9.00 மணிக்கு |
| பங்குனி மாதம் - 16 | 30.03.2026 திங்கட்கிழமை | ரதோற்சவம் [மாலை 5.00 மணிக்கு திருத்தேரோட்டம்] |
| பங்குனி மாதம் - 17 | 31.03.2026 செவ்வாய்க்கிழமை | பங்குனி உத்திரம், தீர்த்த வாரி, த்வஜ அவரோகணம்(கொடி இறக்கம்) |
| பங்குனி மாதம் - 18 | 01.04.2026 புதன்கிழமை | 11-ம் நாள் விடையாற்றி உற்சவம் |

குறிப்பு
பிரதிமாதம் பௌர்ணமி கிரிவலம் நடைபெறுகிறது
கிரிவலம் செய்து வளமோடு வாழ்க!

இங்ஙனம்,
S.V.சுப்ரமண்ய சோமயாஜீலு
V.ராம்குமார் சோமயாஜீலு
ஆதின பரம்பரை அறங்காவலர்கள்,
மேல் ஓலக்கூர் - 604 203.
செல் : 9962344722, 8610716563
9047725285





# பல்சுவை களஞ்சியம்




# நூறாவது நாள்!

## துடுப்பதி ரகுநாதன்

நமது பார்யா ரசிகர் மன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் நாளை மாலை 6-00 மணிக்கு நமது ரசிகர்கள் மன்றத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நாளை நமது உயிருக்கு மேலான மதிப்பிற்குரிய பார்யா நடித்த சங்கம் படத்தின் நூறாவது நாள்! அதை நாம் சிறப்பாக கொண்டாடி மகிழ்வோம்! - என்ற ரசிகர் மன்ற தலைவர் அழைப்பை ஏற்று அனைத்து ரசிகர்களும் 5-30 மணிக்கே ரசிகர் மன்றத்தில் கூடி விட்டார்கள்!

ரசிகர் மன்ற கட்டிட முகப்பில் வாழை மரங்கள் கட்டப் பட்டு, குத்து விளக்கு ஏற்றப் பட்டு, ரசிகர்கள் அனைவருக்கு இனிப்பு, காரம் வழங்கப் பட்ட பொழுது தான் தலைவர் அந்த புதிய வயசான நபரை கவனித்தார்.

“சார்!... நீங்க எங்க ரசிகர் மன்ற உறுப்பினர் இல்லையே?...”புதிய நபரிடம் தலைவர் கேட்டார்.

“ ஆமாம் தம்பி! ... ஒரு திருத்தம் சொல்லி விட்டு, உங்களிடம் ஒரு கோரிக்கை வைப்பதற்காக நான் இங்கு வந்தேன்!..” என்று சொன்ன அந்த புதிய நபரை எல்லா ரசிகர்களும் திரும்பி பார்த்தார்கள்!

“என்ன சார் சொல்லுங்க!...”

“ நூறாவது நாள் என்று போட்டிருக்கிறீர்கள்! அது சரியில்லை! நூறாவது தடவை என்று தான் போட வேண்டும்! சங்கம் படம் ரிலீஸாகி ஏழு வருடங்கள் முடிந்து விட்டன!

அதன் உரிமையைப் பெற்ற அந்த டி. வி. சானல் இன்று மாலை இந்த ஏழு வருடங்களில் நூறாவது தடவையாகத் தான் ஒளி பரப்பப் போகிறார்கள்! அது அந்தப் படத்தின் நூறாவது நாள் ஆகாது! அதை நூறாவது தடவை நீங்கள் திருத்தம் செய்து கொண்டாடுவது தான் சிறப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்!



எங்களைப் போன்ற பொது மக்கள் சற்று ஓய்வாக டி..வி யைப் போட்டால் ஒரே படத்தை நாங்கள் எத்தனை தடவை பார்ப்பது? .. நாங்க ஒரு முறை கூட பார்க்காத படங்கள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன!... உங்களைப் போன்ற ரசிகர்கள் அதை டி. வி சானல்களுக்கு எடுத்துச் சொன்னால் தான் அவர்கள் கேட்பார்கள்! அது எங்களைப் போன்ற பொது மக்களுக்குப் பயன் படும்! ... “

என்று சொல்லி விட்டு அவர் பாட்டிற்கு எழுந்து சென்று கொண்டிருந்தார்!

**டி.எஸ். ரகுநாதன்.**
கோயமுத்தூர்

# மீம்ஸ்









# விடுகதை

| | |
|---|---|
| சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன? | கொசு |
| மழையில் பிறந்து வெயிலில் காயுது? | காளான் |
| அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான், அவன் யார்? | பந்து |
| வட்ட வட்ட நிலவில் வரைஞ்சிருக்கு; எழுதியிருக்கு. அது என்ன? | நாணயம் |
| ஓடையில கருப்பு மீனு துள்ளி விளையாடுது அது என்ன ? | கண் |
| பூ பூப்பது கண்ணுக்குத் தெரியும். காய் காய்ப்பது கண்ணுக்குத் தெரியாது. அது என்ன? | வேர்கடலை |
| பட்டுப்பை நிறைய பவுண் காசு. அது என்ன? | வத்தல் மிளகாய் |

ரச்னாவின் கணவன் ரூபேஷ் பெங்களூரில் ஒரு ஐ.டி. கம்பெனியில் நல்ல உத்தியோ கத்தில் இருந்தான்.

பெங்களூரில் தங்கியிருந்து வாரம் ஒரு முறை வந்து போவான்.

வழக்கம் போல் இம்முறையும் அவன் வந்த போது கதவைத் திறக்கவில்லை ரச்னா.

“கோவிட் பரவல் தணியும் வரை வீட்டுக்கு வரவேணாம். உங்களால் என் உயிருக்கு ஆபத்து. “ என்று பால்கனியிலிருந்தே சொல்லி அவனைத் துரத்திவிட்டாள்.

நல்ல வேளை, வீட்டு வேலைக்காரிக்கு ஓர் அறையை ஒதுக்கி அவளை வீட்டிலேயே தங்க வைத்தது எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது?

திடீரென்று இருமினாள் வேலைக்காரி.

“என்னாச்சு?” என்று



ரச்னா கேட்க, “காய்ச்சல் வர்ற மாதிரி இருக்கு. ஒரு வேளை கொரோனாவோன்னு சந்தேகமா இருக்கு.” என்றாள் வேலைக்காரி.

“அப்ப நீ உடனே கிளம்பு.” என்று அவளையும் துரத்திவிட்டாள் ரச்னா.

தன் வீட்டுக்கு வந்த வேலைக்காரி தன் கணவனிடம் சொன்னாள்:

“கட்டிய கணவனையே ஈவு, இரக்கம் இல்லாமல் துரத்தியடித்த சுயநலவாதி கிட்ட வேலை செய்ய எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கலை. அதான் எனக்கு கொரோனா வந்த மாதிரி நடிச்சி அங்கிருந்து வந்துட்டேன். அந்த அம்மாவுக்கு கொரோனா வந்தா யார் காப்பாத்துறாங்கன்னு பாரப்போம். “

**மலர்மதி**
ஆவடி,
சென்னை

# ஜோக்ஸ்



புலவர் ஏன் ஸ்கூல் பையனைப் போல மன்னர் முன்னால் முட்டிப் போட்டுள்ளார்!”
”கமலஹாசன் டிவிட்டெல்லாம் தமது கவிதையென பீலா விட்டதால் இந்த தண்டனையாம்!”
============

”தலைவரு மேல ஏன் லேடிஸ் செருப்பை வீசி எறியறாங்க?”
”மடிக்கணினி தருவேன்கறதுக்கு பதிலா ”மடிக்கன்னி”தருவேன்னு உளறி இருக்காரு!”
====================

”ஏன் என் பின்னாடியே வர்றீங்க?”
”நீங்கதானே பேஸ்புக்ல ஃபாலோ மீ போட்டிருந்தீங்க!”
====================




என்னப்பா சொல்றே! கல்யாணம் பண்ணேன் பக்க விளைவுகள் வந்துச்சுன்னு சொல்றே!
”ஆமாம்பா கல்யாணம் பண்ண மறுநாள் முதல் தூக்கம் போச்சு பேச்சு போச்சு மொத்தத்துல நிம்மதி போச்சு” இதெல்லாம் பக்க விளைவுகள்தானே!”
====================
”ஓட்டு போட்ட மக்களுக்கு என்ன செய்ய போறீங்க தலைவரே!
”இது வரைக்கும் என்ன செய்தோமோ அதையே செய்யப் போறோம்!”

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## மலச்சிக்கலை கட்டுப்படுத்தும் எளிய, இயற்கை முறைகள்!



மலச்சிக்கல், பொதுவான செரிமான பிரச்சனை ஆகும். உலகம் முழுவதும் லட்சக்கணக்கானோர் இப்பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். வாரத்திற்கு மூன்றுக்கும் குறைவான முறை மலம் கழிப்பது, மலம் கெட்டியான, வறண்ட நிலையில் வெளியேறுவது இதன் முக்கிய அறிகுறிகளாகும்.

மலச்சிக்கல் பெரும்பாலும் அசவுகரியத்தையும், விரக்தியையும் ஏற்படுத்துகிறது. மலத்தை வெளியேற்ற முடியாத நிலையில், தினசரி வாழ்க்கை பாதிக்கப்படுவதால் கோபம், எரிச்சல், சோர்வு மற்றும் கவனம் செலுத்துவதில் சிரமம் உண்டாகிறது. ஆனால் சில எளிய உணவுமுறை மாற்றங்கள் மற்றும் பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் பாதிப்பை குறைக்கலாம்.

1 காலையில் சூடான நீரில் எலுமிச்சைச்சாறு பிழிந்து அருந்துவது குடல் இயக்கத்தை தூண்டும். ஜீரணத்தை மேம்படுத்தும்.

2 ஓட்சில் கரையக்கூடிய நார்ச்சத்து அதிகம் உள்ளதால் மலத்தை மென்மையாக்கி வெளியேற்ற உதவும். பப்பாளி குடல் இயக்கத்தை தூண்டும்.

3 சியா விதை: நீரை உறிஞ்சி ஜெல்லி போன்று மாறி குடலில் நுழைந்து மலத்தை மென்மையாக மாற்றும்.

4 10-15 நிமிடம் நடைப்பயிற்சி செய்வதன் மூலம் குடல் இயக்கம் மேம்பட்டு, மலச்சிக்கலை குறைக்க உதவும்.

## வெறும் வயிற்றில் குடிக்க வேண்டிய சிறந்த பானங்கள்



சில பானங்களை வெறும் வயிற்றில் குடித்தாலும் சிறந்த நன்மைகளைத் தரும். அவை பற்றி...

வெதுவெதுப்பான நீர், எலுமிச்சை மற்றும் தேன்:

வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சை சாறும் தேனும் கலந்து பருகுவது, நச்சுகளை நீக்கி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

**சீரகத் தண்ணீர்:**

சீரகத் தண்ணீரானது, செரிமானக் கோளாறுகளைச் சரிசெய்து, வயிற்று உப்புசத்தைக் குறைக்கிறது.

**வெந்தய நீர்:**

ரத்த சர்க்கரை அளவைச் சமநிலையில் வைக்கவும், உடல் எடையைக் குறைக்கவும் வெந்தய நீர் உதவுகிறது.

**கிரீன் டீ:**

அவ்வப்போது கிரீன் டீ பருகுவது, வளர்சிதை மாற்றத்தை அதிகரித்து, உடலை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும்.

**ஊறவைத்த பாதாம் நீர்:**

பாதாம் பருப்பு சாப்பிடுவதும், பாதாம் ஊறவைத்த நீரை குடிப்பதும் மூளை ஆரோக்கியத்துக்கு நல்லது. ஆற்றலை அளிக்கும்.

## ஆரோக்கியமான உணவுப்பழக்கம்...

நாம் சாப்பிடும் உணவு நம் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்ததாக அமைய வேண்டும். எப்போதும் சாப்பிட்ட சாப்பாடு வெளிவரும் வண்ணம் வயிறு முட்டச் சாப்பிடக்கூடாது. வயிற்றில் பாதியளவு உணவு, கால்பகுதி தண்ணீர், அடுத்த கால்பகுதி காற்றின் வருகைக்கு ஏற்றபடி வயிற்றில் இடம்விட்டுச் சாப்பிடுவதே மிதஉணவுப் பழக்கமாகும்.

அதிக அளவிற்கு உண்டால் நோய் வரும். ஆயுள் குறையும். எனவே எப்போதும் வயிறு புடைக்க, மூச்சு முட்ட உண்ணக்கூடாது. அளவிற்குக் குறைவாக உண்டாலும் உடலில் சக்தி குறையும். எனவே தேவையான அளவு அதாவது அதிகமாகவும் இல்லாமல், குறைவாகவும் இல்லாமல் உண்ண வேண்டும்.

நமக்குப் பசியே இல்லாத பொழுது கடனே என்று, மேலும் மேலும் உண்ணக்கூடாது. பசித்தே புசிக்க வேண்டும். பகலில் உணவு சிறப்பான விருந்தென்றால் இரவில் எதுவும் உண்ணக்கூடாது.

மன உழைப்பு அதிகம் உள்ளவர்கள் அரிசி உணவு குறைவாகவும், கோதுமை, பால், வெண்ணெய், தேன், பாதாம் பருப்பு, முந்திரிப்பருப்பு, தக்காளிச்சாறு, ஆப்பிள், திராட்சை, மாதுளை, ஆரஞ்சு, பசலைக்கீரை, புடலங்காய், பாகற்காய், ஆகிய ஊட்டச்சத்துக்களையும், புதிய காய்கறிகளையும் நிறைய உண்ண வேண்டும்.

உடல் உழைப்பு உள்ளவர்களுக்கு, உணவு அதிகம் தேவை. இவர்கள் அரிசி, கோதுமை, நெய், தயிர், உருளைக்கிழங்கு, முட்டைக்கோசு, நிலக்கடலை, நல்லெண்ணெய் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

உடல் உழைப்பின்றி நாற்காலியில் அமர்ந்து பகல் முழுவதும் வேலை பார்ப்பவர்கள் உணவைக் குறைக்க வேண்டும். உடல் உழைப்பு இல்லாததால் உண்ணும் உணவானது உடலில் கசடுகளாகத் தங்கி துன்பம் விளைவிக்கும்.

அதனால் நாள் முழுதும் நாற்காலியில் அமர்ந்து வேலை செய்பவர்கள் எளிதில் செரிக்கக் கூடிய காய்கறிகள், பழங்கள் மற்றும் ஒரு கப் அளவான சாதம் எடுத்துக் கொண்டு அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு கால் வயிற்றுக்கு நீர் குடித்தாலே சரியானது. இது மேலும் இவர்கள் கொழுப்பு சார்ந்த எண்ணெய் பொருட்கள், பால், தயிர், வெண்ணெய், நெய், தேங்காய் போன்றவற்றில் தயாரான உணவுப் பொருட்களைக் குறைத்தால் வீணாக உடலில் கூடும் கொழுப்புகளைக் குறைத்து ஆரோக்கியமாக வாழலாம்.





## வாட்டும் வெயிலில் இருந்து உடலை பாதுகாக்க பயனுள்ள டிப்ஸ்

* கோடையில் சூரிய ஒளியின் தாக்கத்தால் நம் சருமத்தில் புறஊதாக் கதிர்களால் பாதிப்பு ஏற்படலாம். ஆக்சிடேசன் எனும் வேதி மாற்றம் உங்களை களைப் படையச் செய்யும். அதிலிருந்து தப்பிக்க நல்ல சத்தான உணவுகளை உட்கொள்ள வேண்டும். அதுவும் அளவோடு எடுத்துக்கொள்ள வேண்டும்.

* உடலுக்குக் குளிர்ச்சி தரும் தானியங்களான சோளம், பார்லி போன்றவற்றை கோடை காலத்தில் சேர்க்கலாம். மேலும், சோம்பு, சீரகம், பழங்களில் திராட்சை, பேரீச்சை மற்றும் நீர்ச்சத்துள்ள பழங்கள் நல்லது.

* கோடை காலத்தில் வரும் முக்கியமான பிரச்சனை, 'புட் பாய்சனிங்' எனப்படும் உணவு நஞ்சாதல். அதைத் தவிர்க்க, சீரகத்தை வறுத்துப் பொடி செய்து ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறை ஒரு ஸ்பூன் பொடியை மோரில் கலந்து குடித்து வர, புட் பாய்சன் அபாயம் நீங்கும். வயிற்றுப்போக்கு போன்றவற்றையும் சரிசெய்யும்.

* கோடை காலத்தில் இரவில் பனங்கற்கண்டு கலந்து பாலை அருந்தி வர, உடல் சூடு தணியும். பகலில் கொத்தமல்லித் தழையை அரைத்து மோரில் கலந்து குடித்தால் உடல் சூடு குறையும். ரோஜா இதழ்களை தேனில் ஊறவைத்துச் சாப்பிடலாம்.

* உடலில் சூட்டை அதிகரிக்கும் வேர்க்காய்கறிகளான உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், பீட்ரூட் மற்றும் வெங்காயம், பூண்டு, இஞ்சி, காளான் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் அளவாகப் பயன்படுத்த வேண்டும்.




* கோடை காலத்தில் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்தை அளிப்பதுடன், நீரிழப்பைத் தடுக்கவும் தர்பூசணி உதவுகிறது. தர்பூசணி உங்களை நீரேற்றமாகவும், குளிர்ச்சியாகவும் வைப்பதுடன், சூரிய வெப்பத்தால் சருமம் சேதமடையாமல் பாதுகாக்கிறது. முலாம் பழம், கோடைகால வெப்பத்தால் உண்டாகும் ஹார்மோன் மாற்றங்களைத் தவிர்த்து உடலை நீரேற்றமாக வைக்க உதவும்.

* கோடை நாட்களில் அதிக தாகம் ஏற்படும். அதற்கு, செம்பருத்தி பூவின் 5 இதழ்களை ஒரு லிட்டர் நீரில் ஊறவைத்து குடிக்கலாம். நெல்லி வற்றலை பாக்கு போல வாயிலிட்டு மென்று வந்தாலும் தாகம் தணியும். உணவில் தேனை அடிக்கடி சேர்த்துக்கொள்ளலாம்.

* வெயில் நேரத்தில் அவ்வப்போது முகம் கழுவிக் கொள்ளுங்கள். உடனே துணியால் துடைக்காமல் அப்படியே விட்டு விடுங்கள். சிறிது நேரத்தில் தானாகவே உலர்ந்து விடும். நல்ல புத்துணர்ச்சியும் கொடுக்கும்.

* அதிக வெப்பம் காரணமாக சில நேரங்களில் கண்கள் எரியும். அப்போது ஒரு கைக்குட்டை அல்லது தூய துணியை நீரில் நனைத்து அவ்வப்போது கண்களில் ஒற்றிக்கொள்ளுங்கள்.

* கோடை காலத்தில் கண்களின் நலன் காக்க தினமும் 50 கிராம் அளவுக்கு மாம்பழம் அல்லது பப்பாளியைச் சாப்பிட்டு வரலாம். அரைக்கீரையை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் கண்கள் குளிர்ச்சியடையும். அதுபோல் பொன்னாங்கண்ணி, முருங்கைக் கீரை சாப்பிட்டாலும் பார்வைத்திறன் மேம்படும். வெளியே செல்லும்போது சன்ஸ் கிரீன் போட்டுக்கொள்வதும் நல்லது.




## உடல் வெளிப்படுத்தும் எச்சரிக்கை அறிகுறிகள்

தினசரி வாழ்வில் சிறிய அறிகுறிகள் மூலம் நம் உடல் பல விஷயங்களை எச்சரிக்கிறது. அவற்றை கவனமாக புரிந்துகொண்டால் பல உடல்நலப் பிரச்சனைகளை ஆரம்பத்திலேயே கண்டறிய முடியும். அப்படி உடலில் தோன்றும் சில பொதுவான அறிகுறிகள் என்ன சொல்கின்றன என்பதை பார்ப்போம்...

அடிக்கடி கொட்டாவி...

அடிக்கடி கொட்டாவி விடுவது, உடலுக்கு போதுமான ஆக்சிஜன் கிடைக்கவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. அதே நேரத்தில் தூக்கக் குறைபாடும், அதிக சோர்வும் கொட்டாவி எழுவதற்கு காரணமாக இருக்கலாம்.

வாய் துர்நாற்றம்...

இது பெரும்பாலும் வாய் சுகாதார குறைபாடு காரணமாக ஏற்படுகிறது. சில நேரங்களில் அஜீரணம் அல்லது வயிற்று பிரச்சனைகள் காரணமாகவும் வாய் துர்நாற்றம் உண்டாகலாம்.

விரல்கள் மரத்துப்போதல்...

விரல்கள் மரத்துப்போவது நரம்பு செயல்பாட்டில் மாற்றம் இருப்பதைக் காட்டுகிறது. வைட்டமின் பி12 குறைபாடு இருந்தாலும் இந்த அறிகுறி தோன்றும்.

எப்போதும் சோர்வு...

எப்போதும் சோர்வாக இருப்பது வைட்டமின் டி குறைபாட்டின் அறிகுறியாகும். சூரிய ஒளியில் சில நிமிடங்கள் செலவிடுவது, சத்தான உணவு உண்பது சோர்வை விரட்ட உதவிடும். தொடர்ந்து சோர்வு நீடித்தால் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியமானது.

அதிக முடி உதிர்வு...

உடலில் இரும்புச்சத்து குறைவதால் முடி பலவீனமடைந்து அதிகமாக உதிரக்கூடும். இரும்புச்சத்துமிக்க உணவுகளை உட்கொள்வதும், தேவையான சிகிச்சை முறையும் முடி உதிர்வை கட்டுப்படுத்த உதவும்.

மஞ்சள் நிற கண்கள்...

கண்களின் வெள்ளைப்பகுதி மஞ்சளாக மாறுவது மஞ்சள் காமாலை நோயின் அறிகுறியாகும். இது பெரும்பாலும் ஈரல் செயல்பாட்டில் பிரச்சனை இருப்பதை சுட்டிக்காட்டும்.

வாசனை தெரியாமல் போவது...

சில நேரங்களில் வாசனை உணரும் திறன் குறைவது உடலில் துத்தநாகம் சத்து குறைவாக இருப்பதைக் காட்டுகிறது. ஆனால் சளி அல்லது நோய்த்தொற்றுகளாலும் இது ஏற்படலாம்.



காதில் ரீங்கார சத்தம்...

அடிக்கடி காதில் ரீங்கார சத்தம் கேட்பது சில சமயங்களில் உயர் ரத்த அழுத்தத்துடன் தொடர்புடையதாக இருக்கலாம். இது நீண்ட காலம் தொடர்ந்தால் மருத்துவரை அணுகுவது நல்லது.

வீக்கமான கால்கள்...

கால்களில் அடிக்கடி வீக்கம் ஏற்படுவது உடலில் நீர் தேக்கம் இருப்பதை சுட்டிக்காட்டலாம். சில சமயங்களில் இதயம் அல்லது சிறுநீரக பிரச்சனைகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம். உடனடி மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது நல்லது.

ஈறுகளில் ரத்தக்கசிவு...


பல் துலக்கும்போது ஈறுகளில் ரத்தம் வருவது வைட்டமின் சி குறைபாட்டின் அறிகுறியாகும். பழங்கள் மற்றும் காய்கறிகள் அதிகம் உட்கொள்வது அவசியம்.

## வசந்த நவராத்திரி விழாவில் சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன்....8-ஆம் நாள் உற்சவம்



**சென்னை, மார்ச் 28:** திருவள்ளூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் பராபவ வருஷ வசந்த நவராத்திரியை முன்னிட்டு நவராத்திரி 8-ஆம் நாள் உற்சவத்தில் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, மூலவர் புலி வாகனத்தில் வைஷ்ணவி தேவி அலங்காரமும், உற்சவர் நவ துர்க்கையில் ஒருவரான காளராத்திரி தேவி அலங்காரமும், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## ஸ்ரீராம நவமி சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை, மார்ச் 28:** திருவண்ணாமலை மாவட்டம் போளூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் ஸ்ரீராம நவமியை முன்னிட்டு சந்தோஷ் ஐயர் அவர்களால் ஸ்ரீபட்டாபிராமர், உற்சவர் கோதண்ட ராமர், சீதாதேவி, லட்சுமணர் மற்றும் ஆஞ்சநேயருக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, துளசி மாலைகளுடன், வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர்.

அனைவருக்கும் கேசரி பிரசாதம் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



கோவை பீளமேடு ஸ்ரீ அஷ்டாம்ஸ வரத ஆஞ்சநேயர் ஸ்ரீ ராமநவமி உற்சவம் ஸ்ரீபத்ராசலம் ராமர் திருக்கோலம்.



வானமாமலை ஸ்ரீதெய்வ நாயகப் பெருமாள் பங்குனி பிரமோற்சவம் ஐந்தாம் திருநாள் கருட சேவை புறப்பாடு.

## என் எஸ் எஸ் கேம்ப்



சென்னை Dr. ஆர் கே நகர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தண்டையார்பேட்டை சென்னை.81 உள்ள N S S மாணவர்கள் மாணவிகள் சுமார் 60பேர் தண்டையார்பேட்டையில் உள்ள திருவள்ளுவர் நகர் குடியிருப்போர் சங்கத்துடன் இணைந்து திருவள்ளுவர் நகரில் என் எஸ் எஸ் கேம்ப் நடத்துவதற்காக 24.03.26 அன்று காலை10.30. மணி அளவில் கல்லூரி வளாகத்தில் இருந்து கல்லூரி முதல்வர். Dr.D. லலிதா அவர்கள் கல்லூரி முதல் திருவள்ளுவர் நகர் வரை மாணவர்களின் அணிவகுப்பை துவக்கி வைத்தார்கள் அச்சமயம் திருவள்ளுவர் நகர் குடியிருப்போர் சங்க தலைவர் S.குணமணி, சங்க செயலாளர் திரு. D.கிறிஸ்டோபர் மற்றும் சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் அணிவகுப்பை முன் நின்று நடத்திச் சென்று NSS கேம்ப் இனிதே திருவள்ளுவர் நகரில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது இந்த கேம்ப் 24 ஆம் தேதி முதல் 30 ம் தேதி வரை இந்த நகரில் தூய்மை பணி, கல்வி விழிப்புணர்வு தூய்மை விழிப்புணர்வு, மரம் நடுதல் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும், நிகழ்சிகள் ஏற்பாடுகள் NSS நிகழ்ச்சி அதிகாரி கல்லுரி பேராசிரியர்.Dr. O.S.சரவணன் அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது

## சீர்காழியில் ஜேசிஐ சார்பில் மாபெரும் ரத்ததான முகாம் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்பு



**சீர்காழி, மார்ச், 28:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே புத்தூரில் செயல்பட்டு வரும் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஜேசிஐ சீர்காழி கிரீன் சிட்டி அமைப்பு, சீர்காழி அரசு மருத்துவமனை மற்றும் கல்லூரியில் செயல்பட்டு வரும் என்எஸ்எஸ், ஒய்ஆர்சி, ஆர்ஆர்சி உள்ளிட்ட அமைப்புகளின் முன்னெடுப்பில் மாபெரும் ரத்ததான முகாம் நடைபெற்றது.

இதில் கல்லூரியில் படிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ - மாணவிகள் பெருந்திரளாக பங்கேற்று ஆர்வமுடன் ரத்ததானம் செய்தனர். ரத்ததானம் செய்த மாணவ மாணவியருக்கு அரசு மருத்துவமனை சார்பில் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜேசிஐ சீர்காழி கிரீன் சிட்டி அமைப்பின் தலைவர் கவிமோகன், அரசு மருத்துவர் அறிவழகன், கல்லூரி முதல்வர், என் எஸ் எஸ் ஒருங்கிணைப்பாளர் சசிகுமார், ஒய்ஆர் சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் கணேசன், ஆர்ஆர்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் சுரேஷ், தாய் ரத்ததான அமைப்பின் தலைவர் அப்பாஸ் அலி, ஒருங்கிணைப்பாளர் அன்பு, ஜேசிஐ அமைப்பின் செயலாளர் சக்திபாலன், பொருளாளர் சடகோபன் மற்றும் அரசு மருத்துவமனை செவிலியர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## வாடிப்பட்டியில் வாக்களிக்க வலியுறுத்தி விழிபுணர்வுஉறுதிமொழி பேரணி




**வாடிப்பட்டி, மார்ச்.28:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் வாக்காளர்கள் வாக்களிக்க வலியுறுத்தி விழிப்புணர்வு உறுதிமொழி மற்றும் பேரணி நடந்தது. இந்த ஊர்வலத்திற்கு தேர்தல் நடத்தும் அலுவலர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அதிகாரி சண்முக வடிவேல் தலைமை தாங்கி உறுதி மொழி வாசித்து தொடக்கி வைத்தார். இந்தியாவின் ஜனநாயக பாரம்பரியம் சுதந்திரமான நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களின் கண்ணியத்தையும் நிலை நிறுத்த குடிமக்களாகிய நாம் மதம் இனம் சாதி சமூகம் மொழி அல்லது பிற காரணங்களால் பாதிக்கப்படாமல் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றி வாக்களிப்போம் என்று உறுதியளிக்கிறோம் என்று உறுதிமொழி வாசித்தார். உதவி தேர்தல் அதிகாரிகள் தாசில்தார் ராமச்சந்திரன், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் பஞ்சாட்சரம், மண்டல துணை தாசில்தார் செந்தில்குமார், தேர்தல் துணை தாசில்தார் கருப்பையா, வருவாய் ஆய்வாளர் கௌதம் குமார், ராஜா, கிராம நிர்வாக அலுவலர்கள் ஜெயபிரகாஷ், ஜெயராஜ், கிராம உதவியாளர்கள் சண்முகம் உள்பட தாய் கலை அறிவியல் கல்லூரி மாணவிகள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இதில் வாக்களிப்பது எங்கள் உரிமை வாக்களிப்பது எங்கள் கடமை எங்கள் வாக்கு விற்பனைக்கு அல்ல என்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி மாணவிகள் கோஷமிட்டபடி வந்தனர். இந்த ஊர்வலம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் தொடங்கி மதுரை திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் காவல் நிலையம் பழைய போஸ்ட் ஆபீஸ் பஸ் நிலையம் வழியாக சந்தை கேட் வரை சென்றது.

## திருமண வைபவம்



ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்ரீஆண்டாள் நாச்சியார் பங்குனி திருமண வைபவம் பரங்கி நாற்காலி புரபாடு.

## கெஜ வாகனம் சேவை



மதுரை ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாள் பங்குனி பிரம்மோற்சவம் கெஜ வாகனம் சேவை புரப்பாடு.



புல்லபுதங்குடி ஸ்ரீவல்வில் ராமசுவாமி பிரம்மோற்சவம் நாள் 9 ரதோத்சவம்

## தென்னாங்கூரில் ஸ்ரீராமநவமி சிறப்பு அலங்காரத்தில் மூல மூர்த்திகள்...!



**வந்தவாசி, மார்ச் 28:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீபாண்டுரங்கன் ருக்மாயி திருக்கோயிலில் நேற்று ஸ்ரீராமநவமி முன்னிட்டு மூல மூர்த்திகள் சீதா - ராமர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். முன்னதாக விசேஷ பூஜைகள் நடைபெற்றன. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது. **பா. சீனிவாசன், வந்தவாசி.**

## ஸ்ரீராம நவமியை சிறப்பு வழிபாடு



**ராணிப்பேட்டை, மார்ச் 28:** ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு ஸ்ரீ ராமர், சீதை, ஆஞ்சநேயர், அனைத்து தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால், துளசி மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. மற்றும் ராமர் சீதை கல்யாணம் உற்சவமும் நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜைகள் கலந்து கொண்டு ஸ்ரீ ராமரையும், சீதா, ஆஞ்சநேயரையும் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஸ்ரீராம நவமியை முன்னிட்டு சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை மார்ச் -28:** திருவண்ணாமலை அருள்மிகு பூதநாராயணன் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஆஞ்சநேய பெருமானுக்கும் ஸ்ரீபூத நாராயணனுக்கும் அனைத்து தெய்வங்களுக்கும் ஸ்ரீராம நவமியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, தாமரைப்பூ பூக்களால் அலங்காரங்கள், வடை மாலை,வெற்றிலை மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தி யங்களுடன் மகாதீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பூத நாராயண பெருமானையும், ஸ்ரீஆஞ்சநேயரையும் ராமர், லக்ஷ்மணர், சீதை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் துளசி, தீர்த்த பிரசாதமும், குங்குமம், ஜடாரி பிரசாதங்கள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஸ்ரீ ராம நவமி உற்சவம்



**மயிலாடுதுறை, மார்ச் 28:** மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் கருவாழக்கரை அருகே உள்ள மருதூர் கிராமத்தில் 200 ஆண்டுகள் பழமையான ஸ்ரீ ராம வரதாஹினி மடம் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளி அருள்பாலித்து வரும் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு ராம நவமியை முன்னிட்டு மஞ்சப்பொடி, மாப்பொடி, பால், இளநீர், சந்தனம் உள்ளிட்ட மங்கல பொருட்களினால் அபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து அலங்காரம் அர்ச்சனை நடைபெற்று மகா தீபாராதனை காண்பிக்கப் பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

பக்தர்களுக்கு பானகம், நீர்மோர், சுண்டல், வடை உள்ளிட்ட பிரசாதங்களும் நெல் தானமும் வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை சாம்பசிவம், கேசவன், கண்ணன் மற்றும் பக்தர்கள் செய்திருந்தனர்.

## ஆஞ்சநேயர் விக்ரகங்களுக்கு சிறப்பு அபிஷேகம்



நேற்று (27.3.26) ராம நவமி யொட்டி, போளூர் பட்டாபிராமர் பஜனை மந்திராலயத்தில்,உற்சவ மூர்த்திகளான கோதண்ட ராமர், சீதா பிராட்டியார், லட்சுமணன்,ஆஞ்சநேயர் விக்ரகங்களுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், ஆராதனைகள் நடைபெற்றன. பக்தர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.






## கோயிலுக்கு நிலம் தானம் கொடுத்த நில வரைபட கல்வெட்டு கண்டெடுப்பு



**செய்யாறு மார்ச் .28:** செய்யாறு அடுத்த மடிப்பாக்கம் பெரிய ஏரி அருகில் கோயிலுக்கு நிலம் தானம் கொடுத்த நில வரைபட கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் ,செய்யாறு வட்டம் ,மடு மாநகர் என்று தொன்மை கால வரலாற்றில் அறியப்படும் மடிப்பாக்கம் கிராமத்தில் பெரிய ஏரியின் எதுவாயில் கிழக்குப் பகுதியில் ஒரு குண்டு கல்லில் வரைபடத்துடன் பொறிக்கப்பட்ட கல்வெட்டினை வரலாற்று ஆய்வாளர் எறும்பூர் கை. செல்வகுமார் கண்டெடுத்தார். நில அளவை சார்ந்த வரைபடக் கல்வெட்டு குறித்து ஆய்வாளர் மேலும் கூறியதாவது, மடிப்பாக்கம் கிராமம் பெரிய ஏரியின் கிழக்கு திசையில் ஏரியின் ஓரத்தில் வரைபடத்துடன் கூடிய குண்டுகல் கற்குவியலோடு இருந்தது. அவற்றை நேரில் கள ஆய்வு மேற்கொண்டதில் கல்லின் நீளம் 82 செண்டிமீட்டர் ,அகலம் 58 செண்டிமீட்டர் அளவில் இருந்தது .அக்கல்லில் திசை காட்டும் கருவி போல் வரைபடம் பொறிக்கப்பட்டு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என அறியும் வகையில் நில அளவைக்கு பயன்படுத்துவது போல் செதுக்கப்பட்டிருந்தது.

மேலும் திசைகாட்டும் வரைபடம் பக்கத்தில் ஸ்ரீமகாவிஷ்ணுவின் ஐந்தாவது மற்றும் முதல் முழு மனித அவதாரமான வாமன அவதாரம் பொறிக்கப்பட்டுள்ளது. (தேவர்களைக் காக்க குள்ள அந்தனச் சிறுவனாக வாமனர் அடியெடுத்து மூன்றடி மண் தானம் கேட்டு அகிலத்தையும் அளந்த அவதாரமாகும்.) கையில் குடை, கமண்டலம் ஏந்திய குள்ள அந்தனச் சிறுவன் படம் செதுக்கி நிலையில் வரையப்பட்டிருந்தது.

பிற்கால சோழர் காலத்தில் நில அளவை நிர்வகித்த முக்கியத்துறை புறவு வரித் திணைக்களம் இன்றைய வருவாய் துறை போலவே செயல்பட்டதாக தெரிகிறது. மேலும் பிற்கால சோழர்கள் கோயில்கள், பிராமணர்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு நிலம் ,தங்கம், கால்நடைகளை அதிக அளவில் தானம் வழங்கினர் .தானம் செய்யப்பட்ட நிலங்களுக்கு வரி விளக்கு அழிக்கப்பட்டிருந்தது.கோயில்கள் சமூக மட்டும் பொருளாதார மையங்களாக செயல்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.அந்த வகையில் கோயிலுக்கு நிலம் தானமாக கொடுத்த வகையில் நில அளவை வரைபடம் ஆன்மீக வரலாற்றுச் செய்தியோடு இணைத்து அடையாளம் படுத்தி உள்ளார்கள். என்பது இக்கல்வெட்டின் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும் இதுகுறித்து விரிவான ஆய்வுக்கு உட்படுத்தினால் எந்த கோயிலுக்கு எவ்வளவு நிலம் தானமாக வழங்கப்பட்டது என்பது குறித்து தெரிய வர வாய்ப்பு உள்ளது கிபி 9ஆம் நூற்றாண்டிற்கும் கிபி 13ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தை சேர்ந்தவையாக இருக்கலாம். இவ்வாறு வரலாற்று ஆய்வாளர் எறும்பூர் கை. செல்வகுமார் தெரிவித்தார்.

## 2026 பொது தேர்தல் விழிப்புணர்வு வாசகங்களை எரிவாயு உருளையில் ஒட்டி விழிப்புணர்வு



**திருவண்ணாமலை மார்ச் -28:** மாநகராட்சிக்கு உட்பட்ட வேங்கிக்கால் நேதாஜி நகரில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்களை அடங்கிய ஒட்டுவில்லைகளை எரிவாயு உருளையில் ஒட்டி விழிப்புணர்வு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. இரா. இராம்பிரதீபன் அவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சுற்றுலா: கொடைக்கானலில் மிஸ் பண்ணக்கூடாத சூப்பர் ஸ்பாட் குக்கல் குகைகள்!



கொடைக்கானலில் இருந்து 40 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள குக்கல் குகைகள் வரலாற்றுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த பழங்கால பாறைகளின் தொகுப்பாகும். இந்த குக்கல் குகைகள் அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் அமைந்துள்ளன. 1500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்த குகைகள் பழமையான செதுக்கப்பட்ட குகைகளில் ஒன்றாகும். இவை கிரானுலைட் மற்றும் சார்கோனைட் எனப்படும் பல்வேறு வகையான உருமாற்ற பாறைகளின் மேல் தொங்கும் அடுக்குகளாகும்.

மலை உச்சியின் காடுகளுக்குள் இந்த குக்கல் குகைகள் மறைந்துள்ளன. உயரமான இடத்தில் இருப்பதால் காடுகளுக்குள் மலையேற்றம் செய்ய விரும்புவர்களுக்கு சிறந்த இடமாக திகழ்கிறது. செங்குத்தான பாறைகள், புல்வெளிகள் வழியாக மலையின் உச்சிக்கு செல்லும் குறுகிய பயணம் மலையேற்றம் செய்ய விரும்புபவர் களுக்கு மறக்கமுடியாத ஒரு அனுபவத்தை கொடுக்கும்.



கடல் மட்டத்திலிருந்து 6200 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த குகைகள் கொடைக்கானலில் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ளதால் ஆண்டு முழுவதும் பனிமூட்டமான குளிர்கால நிலை நிலவுகிறது. 1980 களின் நடுப்பகுதி வரை மலை உச்சியில் 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்ததாகவும், தற்போது மலையற்றம் செய்பவர்களின் முகாம் தளம் ஒரு காலத்தில் பாலியன் பழங்குடியினரின் ஆரம்பகால குடியேற்றமாக இருந்ததாகவும் கூறுகின்றனர்.

குகைகளின் பரந்த நிலப்பரப்பும், அதன் தனித்துவமான தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கு பெயர் பெற்றது. வனப்பகுதியில் மலையேற்றம் செய்ய விரும்பும் சுற்றுலாப் பயணிகள் வனத்துறையிடம் அனுமதி பெற வேண்டும்.

பரபரப்பான வாழ்க்கையிலிருந்து விடுபட்டு ஓய்வெடுக்க விரும்புபவர்களுக்கு இது ஒரு உண்மையான புகலிடமாக திகழ்கிறது. குகைகளுக்கு செல்ல உள்ளூர் வழிகாட்டிகளை நியமித்துக்கொள்வது நல்லது. வழி நடுகிலும் ஆர்க்கிட் மற்றும் சால் மரங்கள், ஜெரனியம் தோட்டங்கள், பைன் மற்றும் வாட்டல் காடுகள் நிறைந்த அடர்ந்த காடுகள் நிறைந்த பகுதிகள் வழியாக சென்றால் குக்கல் காட்டு ஓய்வு இல்லத்தை அடையலாம். 1500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள பாறை தங்குமிடம் உண்மையில் குகைகளாக, பாறைகளின் மேல் தொங்கும் அடுக்குகளாக காட்சியளிப்பது கண்ணுக்கு விருந்தாக உள்ளது.

ஏப்ரல் முதல் ஜூலை வரை மற்றும் செப்டம்பர் முதல் அக்டோபர் வரை இங்கு செல்வதற்கு ஏற்ற காலமாகும்.

இந்தப்பகுதி நான்கு வகையான சுற்றுச்சூழல் அமைப்புகளை உள்ளடக்கியது. சதுப்பு நிலம், புல்வெளி, நன்னீர் ஏரி மற்றும் சோலை என நான்கு வகையான அமைப்புகளைக் கொண்டது. இங்கு 800 ஆண்டுகள் பழமையான பிரம்மாண்டமான மரம் ஒன்று உள்ளது. இது வேலி அமைக்கப்பட்டு தமிழ்நாடு வனத்துறையின் பராமரிப்பில் இருந்து வருகிறது. மிகவும் அரிதான ஒற்றை ஃபெர்ன் மரங்கள், ஜாமூன், ருத்ராட்ச மரங்கள், பல வகையான இலவங்கப்பட்டை மரங்கள் மற்றும் செண்பகம் மலர் மரங்கள் ஆகியவை நிறைந்துள்ளன.

இங்குள்ள கூக்கல் ஏரியில் நீர் நாய்கள் அதிகம் காணப்படுகின்றன. 165 வகையான பட்டாம்பூச்சிகளும், மரப் புறாக்களும், நீலகிரி பிபிட் போன்ற அசாதாரண பறவைகளும் இங்கு காணப்படுகிறன.

# வேலைவாய்ப்பு கார்னர்

## திருச்சி என்ஐடி-ல் பேராசிரியர், உதவிப் பேராசிரியர் வேலை வேண்டுமா?

தேசிய தொழில்நுட்ப கழகம்(என்ஐடி) திருச்சியில் காலியாக உள்ள 122 பேராசிரியர், உதவிப்பேராசிரியர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியும் ஆர்வமும் உள்ளவர்களிடம் இருந்து ஏப்ரல் 6 ஆம் தேதிக்குள் ஆன்லைன்மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அறிவிப்பு எண். NITT/R/F/L10/2026/01

சம்பளம்: என்ஐடி விதிமுறைகளின்படி வழங்கப்படும்.

வயதுவரம்பு: உதவிப் பேராசிரியர் பணிக்கு 35-க்குள் இருக்க வேண்டும். இதர பணிகளுக்கு வயதுவரம்பில் கிடையாது.

தகுதி: Engineering, Humanities, Science, Management, Architecture, Education போன்ற ஏதாதொரு துறையில் அல்லது அதற்கு இணையான துறையில் முதல் வகுப்பில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டம் பெற்றும், முனைவர் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது GATE,UGC NET,CSIR-NET போன்ற தேர்வுகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். கூடுதல் விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பை பார்த்து படித்து தெரிந்துகொள்ளவும்.

தேர்வு செய்யப்படும் முறை: தகுதி, பணி அனுபவம், கற்பிக்கும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். இது குறித்து விவரம் தகுதியானவர்களுக்கு அவர்களது மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை: www.nitt.edu என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பித்தவுடன் அதனை பிரிண்ட் அவுட் எடுத்து அதனுடன் தேவையான சான்றிதழ்களின் நகல்களை இணைத்து கீழ்வரும் அஞ்சல் முகவரிக்கு விரைவு, பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய அஞ்சல் முகவரி:

The Registrar, National Institute of Technology, Trichy - 620 015

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 6.4.2026

ஆன்லைன் விண்ணப்ப பிரிண்ட் அவுட் வந்து சேர கடைசி நாள்: 16.4.2026

# தமிழக காங். 23 தொகுதிகளை அடையாளம் கண்டுள்ளதாக செல்வப்பெருந்தகை தகவல்

சென்னை, மார்ச் 28:

*"எங்களுக்கு ஒதுக்கப்பட்ட 28 தொகுதிகளில் 23 தொகுதிகளை அடையாளம் கண்டுள்ளோம்" என தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "திமுகவுடன் பேச்சுவார்த்தை சுமுகமாக நடைபெற்றது. நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எங்களுக்கு ஒதுக்கப்பட்ட 28 தொகுதிகளில் 23 தொகுதிகளை அடையாளம் கண்டுள்ளோம். ஐந்து தொகுதிகள் குறித்து மீண்டும் பேசி முடிவெடுப்போம்.*

*தென்காசி மற்றும் விருத்தாச்சலம் தவிர 16 தொகுதிகளை மீண்டும் நாங்கள் திரும்ப பெற்றுள்ளோம். ஈரோடு கிழக்கு ஏற்கெனவே நாங்கள் நின்ற தொகுதி, அதனால் அதை நாங்கள் திரும்ப பெற்றுள்ளோம். கன்னியாகுமரியில் நாங்கள் மூன்று தொகுதிகளில்*



*போட்டியிடுகிறோம். அதில் ஒன்றை கேட்கிறார்கள்.*

*இது குறித்து அகில இந்திய தலைமையிடம் பேசியுள்ளார்கள். அது எங்களுடைய சிட்டிங் தொகுதி என்பதால் அதைக் கொடுப்பது கடினம். ஸ்ரீ வைகுண்டம் தொகுதியில் எங்கள் வேட்பாளருக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. அதனால் அது குறித்து முதல்வரிடம் பேசி இப்பிரச்சினையை தீர்ப்போம். வேட்பாளர் அறிவிப்பு ஓரிரு நாட்களில் வெளியாகும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.*


# சென்னை விமான நிலைய ஒருங்கிணைந்த 2-ஆவது முனையம் டிசம்பருக்குள் திறக்க வாய்ப்பு

சென்னை, மார்ச் 28:

*சென்னை விமான நிலையத்தின் ஒருங்கிணைந்த இரண்டாவது முனையம் டிசம்பா மாதத்துக்குள் மக்கள் பயன்பாட்டுக்கு திறக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனா்.*

*சென்னை விமான நிலையத்தின் உள்நாட்டு மற்றும் சா்வதேச விமான முனையங்களில் நாள்தோறும் 450-க்கும் மேற்பட்ட விமானங்கள் வந்து செல்கின்றன. நாளொன்றுக்கு 55,000-க்கும் மேற்பட்ட பயணிகள் இந்த விமான நிலையத்தை பயன்படுத்தி வருகின்றனா். மேலும், பயணிகளைக் கையாளும் திறனை அதிகரிக்க சென்னை விமான நிலையத்தில் ரூ.2,467 கோடியில் மூன்றாவது முனைய பகுதியில் ஒருங்கிணைந்த சா்வதேச விமானமுனையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

*இருகட்டங்களாக நடைபெற்று வரும் இப்பணிகளின் முதற்கட்ட*



*பணிகள் கடந்த 2023 ஏப்ரல் மாதம் நிறைவடைந்த நிலையில், இதை பிரதமா் மோடி திறந்து வைத்தாா். இதையடுத்து இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் நிகழாண்டு இறுதிக்குள் முடிவடைய வாய்ப்புள்ளது.*

*இதுகுறித்து சென்னை விமான நிலைய அதிகாரிகள் கூறியதாவது:*

*இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணிகளை நிகழாண்டு ஜூன் மாதத்துக்குள் முடிக்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றத்தால் ஸ்டீல் உள்பட சில பொருள்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், பணிகள் முடிப்பதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. இந்த இரண்டாம் கட்ட சாவதேச முனைய பணி முழுவதும் டிசம்பா மாதத்துக்குள் முடித்து, முனையத்தை திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. பணிகள் முடிந்து பயன்பாட்டுக்கு வந்தால் பயணிகளை கையாளும் திறன் அதிகரிக்கும். ஆண்டுக்கு 3.5 கோடி பயணிகளை கையாள முடியும். இரண்டாம் கட்ட பணிகள் முடிந்து திறக்கப்பட்டால் கூடுதலாக 72 செக் இன்கவுன்ட்டா்கள் திறக்கப்படும் என்றனா்.*

# ஈரான் போர் எதிரொலியா? முட்டை விலை கடும் வீழ்ச்சி

சென்னை, மார்ச் 28:

*அசைவப் பிரியர்களின் முதல் தேர்வாக எப்போதுமே இருக்கும் முட்டை விலை சில்லறை விற்பனையில் கடந்த ஒரு சில ஆண்டுகளாகவே ரூ.5-க்கு மேல் இருந்து வந்த நிலையில், தற்போது மெல்ல குறைந்து வருகிறது.*

*தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டல ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில், பண்ணையாளா்களிடம் முட்டை விலை நிர்ணயம் தொடா்பாக கருத்து கேட்கப்பட்டது. அதில், முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலையை ரூ.4.05 காசுகளாக நிர்ணயித்து தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு அறிவித்தது. கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக முட்டை விலை நாள்தோறும் சரிவைக் கண்டு வருகிறது. இதற்குக் காரணம் ஈரான் போர் எதிரொலி என்றே கூறப்படுகிறது.*

*ஈரான் மீது அமெரிக்க - இஸ்ரேல் கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், உலக நாடுகளுக்கு எரிபொருள்கள், கச்சா எண்ணெய் சென்றடைவதில் சிக்கல் நிலவுகிறது. எரிபொருள் தட்டுப்பாட்டால், வணிக சிலிண்டர்களுக்கு கடும் கட்டுப்பாடுகளை மத்திய அரசு அறிவித்தது. இதனால், வணிக சிலிண்டர்கள் கிடைக்காமல், பல உணவகங்கள் மூடப்பட்டுள்ளன. பெரும்பாலும் பெரிய உணவக நிறுவனங்கள் எப்படியோ மின் அடுப்புகள், விறகு அடுப்பு என நிலைமை சமாளித்தாலும், சிறிய உணவகங்கள், மாற்று வழிகளுக்கு இடமில்லாத நிலையில், கடைகளை மூடிவைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.*

*நாள்தோறும் நூற்றுக்கணக்கானோரின் உணவுத் தேவையை பூர்த்தி செய்துவந்த தெருவோர உணவகங்கள் சிலிண்டர்கள் கிடைக்காமல் நாள் கணக்கில் மூடப்பட்டுள்ளது. பொதுவாகவே தெருவுக்கு ஒரு நான்கு உணவகங்கள் இருந்தால், அதில் பெரும்பாலானவை அசைவ உணவகங்களாகத்தான் இருக்கும். இவை பல நாள்களாக மூடப்பட்டிருப்பதால் முட்டைகள் கொள்முதல் குறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழகத்தில் முட்டை உற்பத்தியில் சிறந்து விளங்கும் நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் நாள்தோறும் 7 கோடி முட்டைகள் உற்பத்தியாகின்றன. இங்குதான், முட்டை கொள்முதலுக்கான மொத்த விற்பனை விலையும் நிர்ணயிக்கப்படுகிறது.*

*தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதால், முட்டை கொள்முதலில் அது எதிரொலித்திருக்கிறது. இதனால் விலை குறைந்துள்ளது. விலை குறைவு காரணமாக ஒரு முட்டைக்கு ரூ.1 அளவுக்கு முட்டை உற்பத்தியாளர்கள் நஷ்டம் அடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.*

# மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மார்ச் 30 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, மார்ச் 28:

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் சனிக்கிழமை (மார்ச் 28) முதல் மார்ச் 30 வரை மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை மையம் சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் வடக்கு உள் கர்நாடகம் வரை வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதன் காரணமாக, தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வெள்ளிக்கிழமை(மார்ச் 27) வட வானிலை நிலவக்கூடும்.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் சனிக்கிழமை(மார்ச் 28) முதல் மார்ச் 30 வரை மிதமான மழை பெய்யக்கூடும். தென் தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மார்ச் 31, ஏப்.1 ஆகிய தேதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புகர் பகுதிகளில் வெள்ளிக்கிழமை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் மார்ச் 30 வரை சற்று அதிகமாக இருக்கக்கூடும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டப்பேரவைத் தேர்தலால் தள்ளிவைக்கப்பட்ட வடபழனி - பூந்தமல்லி மெட்ரோ ரயில் இயக்கம்

சென்னை, மார்ச் 28:

பாதுகாப்பு ஆணையர் அனுமதித்தும், தேர்தல் காரணமாக வடபழனி-பூந்தமல்லி இடையேயான மெட்ரோ ரயில் இயக்கம் தள்ளிவைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில் முதல்கட்டமாக சென்ட்ரல் ரயில் நிலையம் முதல் மீனம்பாக்கம் விமானம் நிலையம் வரையில் இரு வழித்தடங்களில் மெட்ரோ ரயில் இயக்கப்படும் நிலையில், இரண்டாம் கட்டமாக மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் 4 -ஆவது வழித்தடமாக மெரீனா கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புற வழிச்சாலை வரை தண்டவாளம், ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. அந்த வழித்தடத்தில் வடபழனி முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை வரை 14. 64 கிலோ மீட்டர் தொலைவுக்கான தண்டவாளப் பணிகள், ரயில் நிலையப் பணிகள்முழுமையாக நிறைவடைந்து, ரயில் இயக்கத்துக்கான பாதுகாப்பு பரிசோதனையானது கடந்த பிப்ரவரி 11 மற்றும் 12, 25 ஆகிய தேதிகளில் நடைபெற்றன.

பெங்களூரிலிருந்து ரயில்வே பாதுகாப்பு ஆணையர் மதுகர் சௌத்ரி தலைமையிலான குழுவினர் பரிசோதனை மேற்கொண்டதையடுத்து, ரயில் இயக்கவும் அனுமதி கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனால், சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிப்பு காரணமாக வடபழனி-பூந்தமல்லி மெட்ரோ ரயில் இயக்கம் தள்ளிவைக்கப்பட்டுள்ளதாகவும், வரும் மே மாத இறுதியில் அங்கு மெட்ரோ ரயில் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் கூறினர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# டில்லியில் குற்றங்களைக் கண்காணிக்க ஏஐ தொழில்நுட்பத்தில் இயங்கும் கேமராக்கள் நிறுவ பொதுப்பணித் துறை திட்டம்

**புதுடெல்லி, மார்ச் 28:**
பொதுப் பாதுகாப்பு மற்றும் குடிமை மேலாண்மை ஆகிய இரண்டையும் மேம்படுத்தும் வகையில், செயற்கைநுண்ணறிவு (ஏஐ) அடிப்படையிலான பகுப்பாய்வுகளை ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்தி, தனது சிசிடிவி கண்காணிப்பு வலையமைப்பில் ஒரு பெரிய சீரமைப்பை மேற்கொள்ள தில்லி அரசு திட்டமிட்டுள்ளது என்று அதிகாரிகள் வியாழக்கிழமை தெரிவித்தனர்.

கடந்த சில ஆண்டுகளில், பொதுப்பணித்துறை இரண்டு கட்டங்களாக சுமார் 2.8 லட்சம் சிசிடிவி கேமராக்களை நிறுவியுள்ளது. இருப்பினும், பல ஆண்டுகளாக, அந்தக் கேமராக்களில் பலவற்றின் ஆயுட்காலம் முடிந்துவிட்டது, அவை மாற்றப்படும் என்று அவர்கள் கூறினர்.

இது குறித்து மூத்த அரசு அதிகாரி கூறியதாவது: தனது சிசிடிவி வலையமைப்பை வலுப்படுத்த, பொதுப்பணித்துறை ஒரு விரிவான மதிப்பீட்டை நடத்த திட்டமிட்டுள்ளது. இதில் தற்போதுள்ள குறைபாடுகளைக் கண்டறிதல், இடைவெளிகளை நிரப்புதல், சேமிப்பு வரம்புகள், வலையமைப்புத் தடைகள் மற்றும் செயல்பாட்டுச் சிக்கல்கள் ஆகியவை அடங்கும். இதற்காக ஒரு நிறுவனத்தை பணியமர்த்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம், அதற்கான டெண்டர் கோரப்பட்டுள்ளது.

காலாவதியான கேமராக்களை மாற்றுவதற்கான ஒரு திட்டத்தை வகுக்குமாறும், அவ்வாறு செய்யும்போது, நகரப் புனரமைப்புக்காக கேமராக்களைப் பயன்படுத்துவது உட்பட, எதிர்காலத் திட்டங்களையும் வகுக்குமாறும் பொதுப்பணித்துறை அமைச்சர் பர்வேஷ் சாஹிப் சிங் முன்னதாகவே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

திட்டத்தின்படி, 'ஆலோசகர்கள், கும்பல் படுகொலைகள், சாலைக் குழிகள், குப்பை கொட்டுதல், தூசி கண்காணிப்பு மற்றும் பிற தொடர்புடைய பகுப்பாய்வுகளைக் கண்டறியக்கூடிய மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பகுப்பாய்வுகளை உள்ளடக்கிய ஒரு நவீன கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை அமைப்பார்கள். மாசுபாட்டைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க உதவும் வகையில், இந்த புதிய வலையமைப்பில் முக அங்கீகாரம் மற்றும் தானியங்கி வாகனப் பதிவு எண் அங்கீகாரம் அமைப்புகளும் கண்காணிப்பு அமைப்பில் இணைக்கப்படும் என்று பொதுப்பணித்துறை திட்டமிட்டுள்ளது. சில பகுதிகளில், பல முகமைகள் சிசிடிவி கேமராக்களை நிறுவி வருகின்றன, எனவே, பொதுப்பணித்துறை அந்த மதிப்பீட்டைச் செய்து, இரட்டிப்பாவதைத் தவிர்க்க வேண்டும். இந்த நடவடிக்கை, கண்காணிப்புப் பரப்பில் இரட்டிப்பாவதைத்தவிர்ப்பதையும், கண்காணிப்பு உள்கட்டமைப்பின் பயனுள்ள களப் பரவலை அதிகப்படுத்துவதையும் உறுதி செய்யும். ஆலோசகர், தில்லி முழுவதும் ஒரு ஒருங்கிணைந்த சிசிடிவி கண்காணிப்பு அமைப்புக்கான தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமான பல தீர்வுகளை முன்மொழிய வேண்டும். ஆலோசகர், பல அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர்கள் ஒரே நேரத்தில் நேரலைக் காட்சிகளை அணுக உதவும் ஒரு அமைப்பை வடிவமைக்க வேண்டும்' என்று பகிரப்பட்ட திட்டத்தில் கூறப்பட்டுள்ளது என்றார் அவர்.

## க்ரைம் கார்னர்

### திருப்பூரில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 200-க்கும் மேற்பட்ட சிலிண்டர்கள் பறிமுதல்!

**திருப்பூர், மார்ச் 28:**
திருப்பூர் சாமுண்டிபுரம் அருகே தாய் மூகாம்பிகை நகரில் முறையான அனுமதியின்றி சிலிண்டர்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக மாவட்ட வழங்கல் துறையினருக்கு தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சரவணன், குடிமைப்பொருள் (வடக்கு) தனி வட்டாட்சியர் ராகவி தலைமையிலான அலுவலர்கள் மற்றும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வு ஆய்வாளர் ராஜசேகர் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வில் முறையான அனுமதியின்றி 200-க்கும் மேற்பட்ட வணிக மற்றும் வீட்டு சமையல் எரிவாயு உருளைகள் விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து பதுக்கி வைக்கப்பட்டிருந்த சிலிண்டர்களை பறிமுதல் செய்து ஏஜென்சியின் உரிமையாளர் மோகன் என்பவரிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### கடன் தொல்லை: 2 குழந்தைகளுடன் தாய் கிணற்றில் குதித்து தற்கொலை

**சென்னை, மார்ச் 28:**
கூடுவாஞ்சேரி அடுத்த மாடம்பாக்கம் வள்ளலார் நகர் பகுதியைச் சேர்ந்தவர் ஷம்சியா(26), இவருக்கு 10 வயதில் ஆஷிபா என்ற மகளும், 6 வயதில் அப்தர் என்ற மகனும் இருந்தனர். இந்த நிலையில் வியாழக்கிழமை ஷம்சியா தனது மகள் மற்றும் மகனுடன் கூடுவாஞ்சேரி மாடம்பாக்கம் பிரதான சாலை அருகே உள்ள தனியாருக்கு சொந்தமான கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். ஷம்சியா தனது குழந்தைகளுடன் கிணற்றில் குதித்ததை பார்த்த அப்பகுதி பொதுமக்கள் படப்பை காவல் நிலையம், தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து படப்பை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தியதில், ஷம்சியாவின் கணவர் ஆசிப் ஓராண்டுக்கு முன்பு இறந்து விட்ட நிலையில், கடன் தொல்லை அதிகமாக இருந்ததால் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகவும், தங்களது இறப்புக்கு யாரும் காரணம் இல்லை என கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்துள்ளது. கடன் தொல்லையால் தனது குழந்தைகளுடன் தாய் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதி பொது மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

### மதுரவாயலில் கப்பல் பொறியாளரை கொலை செய்து எரித்த 4 பேருக்கு ஆயுள் தண்டனை

**சென்னை, மார்ச் 28:**
சென்னை, மதுரவாயலை சேர்ந்தவர் டில்லிபாபு என்ற வெங் கடேசன் (29). கப்பல் துறை யில் பொறியாளராக பணிபுரிந்து வந்த டில்லிபாபுவிடம், மதுரவாயல் கோகுல் என்ற கோகுலகிருஷ்ணன்(38), கடன் வாங்கி இருந்ததாக கூறப் படுகிற து. அந்த கடனை திருப்பி கொடுக்குமாறு கோகுலுக்கு, டில்லி பாபு நெருக்கடி கொடுத்து வந்துள்ளார்.

இதனை அறிந்த கோகுலின் நண்பர்களான மதுரவாயல் கார்மேகம் (38), பூபாலன் (32), ராஜ்குமார் (33), சுந்தரேசன் என்கிற சுந்தர் (32), கடந்த 2012-ம் ஆண்டு பிப். 6-ம் தேதி, காரில் சென்று கொண்டிருந்த டில்லிபாபுவை அவரது வீட் டின் அருகே கடத்தியுள்ளனர்.

பிறகு, கார்மேகம் உள்ளிட்ட 4 பேர், காரிலேயே டில்லி பாபுவை கொலை செய்து, திருவண்ணாமலை பகுதிக்கு உடலை எடுத்து சென்று எரித்துள்ளனர். இதுகுறித்து வழக் குப் பதிவு செய்த மதுரவாயல் போலீஸார், கோகுல், கார் மேகம் உள்ளிட்ட 5 பேரை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை பூந்தமல்லியில் உள்ள கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் 3-ல் நடைபெற்று வந்தது. இதில், அரசு தரப்பில் வழக்கறிஞர் பாலமுருகன் ஆஜராகி வாதாடினார். முடிவுக்கு வந்த வழக்கு விசாரணையில் கார்மேகம், பூபாலன், ராஜ்கு மார், சுந்தரேசன் ஆகிய 4 பேர் மீதான குற்றம் நிரூபிக்கப் பட்டது. இந்த வழக்கின் தீர்ப்பை பூந்தமல்லி, கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்- 3 நீதிபதி விஜயகுமார் அளித் தார். அதில் 4 பேருக்கு ஆயுள் தண்டனை, தலா ரூ.4,000 அப ராதம் விதிக்கப்பட்டது. கோகுல் மீதான குற்றச்சாட்டு நிரூபிக் கப்படாததால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

## விளையாட்டு செய்திகள்

### சேப்பாக்கத்தில் இந்தியா - ஆஸி. டெஸ்ட் போட்டி

**சென்னை, மார்ச் 28:**
ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி 2027-ம் ஆண்டு தொடக்கத்தில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட பார்டர்-கவாஸ்கர் தொடரில் விளையாடுகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டி ஜனவரி 21 முதல் 25 வரை நாக்பூரில் நடைபெறுகிறது.

2-வது டெஸ்ட் போட்டி ஜனவரி 29 முதல் பிப்ரவரி 2-ம் தேதி வரை சென்னை சேப்பாக்கம் மைதானத்திலும், 3-வது டெஸ்ட் போட்டி குவாஹாட்டியில் பிப்ரவரி 11 முதல் 15 வரையிலும், 4-வது டெஸ்ட் போட்டி ராஞ்சியில் பிப்ரவரி 19 முதல் 23 வரையிலும், 5-வது டெஸ்ட் போட்டி பிப்ரவரி 27 முதல் மார்ச் 3 வரை அகமதாபாத்திலும் நடைபெறுகின்றன.

### IPL 2026 சீசனில் 'சிஎஸ்கே' விளையாடும் முழு அட்டவணை: ஏப்.23-ல் மும்பை உடன் பலப்பரீட்சை

**சென்னை, மார்ச் 28:**
நடப்பு ஐபிஎல் சீசன் நாளை (மார்ச் 28) தொடங்க உள்ளது. இந்நிலையில், இந்த சீசனில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி விளையாடும் முழு ஆட்ட அட்டவணை குறித்து பார்ப்போம்.

இந்த சீசனை முன்னிட்டு சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பல முக்கிய மாற்றங்களை மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் பார்த்தால் சிஎஸ்கே அணியின் பேட்டிங் வரிசை பலம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இளம் வீரர்களுடன் இணைந்து அனுபவமிக்க வீரர்கள் சிஎஸ்கே அணிக்காக இந்த முறை களம் காண உள்ளனர். சஞ்சு சாம்சன், ருதுராஜ் கெய்க்வாட் (கேப்டன்), ஆயுஷ் மாத்ரே, டெவால்ட் பிரேவிஸ், உர்வில் படேல், கார்த்திக் சர்மா, தோனி, மேத்யூ ஷார்ட், நூர் அகமது, கலீல் அகமது, ஜேமி ஓவர்டன் உள்ளிட்ட வீரர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் ஆடும் லெவனில் ஆடுவது கிட்டத்தட்ட உறுதி.

### IPL 2026: ஒவ்வொரு எம்எல்ஏ-வுக்கும் 4 டிக்கெட் வழங்குக: கர்நாடக அரசுக்கு சபாநாயகர் கோரிக்கை

பெங்களூரு: ஐபிஎல் 2026-ம் ஆண்டுக்கான சீசன் தொடங்க உள்ளது. இந்த சூழலில் இந்த சீசனை முன்னிட்டு பெங்களூருவில் நடைபெறும் ஐபிஎல் போட்டிகளுக்கு ஒவ்வொரு எம்.எல்.ஏ-வுக்கும் 4 மேட்ச் டிக்கெட்டுகள் வழங்குமாறு கர்நாடக அரசுக்கு சபாநாயகர் அறிவுறுத்தி உள்ளார்.

ஐபிஎல் டிக்கெட் தொடர்பாக கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கத்தின் மீது பல்வேறு கட்சிகளை சேர்ந்த கர்நாடக சட்டப்பேரவை உறுப்பினர்கள் சில குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். இந்த சூழலில் அம்மாநில சபாநாயகரான யு.டி.காதர் இதை தெரிவித்துள்ளார். இந்த சீசனில் முதல் ஆட்டம் பெங்களூருவில் நடைபெறுகிறது. இதில் நடப்பு சாம்பியன் ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூரு மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் விளையாடுகின்றன. இந்நிலையில், ஐபிஎல் டிக்கெட் விவகாரம் தொடர்பாக கர்நாடக மாநில எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.அசோகா பேசினார். பெங்களூரு நகரத்தின் வளர்ச்சி தொடர்பான விவாதத்தின் போது அவர் இதனை பேசினார்.

## 800 கி.மீ தூரத்தை தாக்கும் ஏவுகணைகள்: இந்தியா புதிய திட்டம்

**புதுடெல்லி, மார்ச் 28:**
இந்திய பாதுகாப்புத் துறையில் முக்கிய முன்னேற்றமாக, 800 கிலோமீட்டருக்கும் அதிக தூரத்தை தாக்கும் திறன் கொண்ட பிரம்மோஸ் சூப்பர்சோனிக் குரூஸ் ஏவுகணை வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளது.




இந்த ஏவுகணைகள் அதிவேகமாக (சூப்பர்சோனிக்) பாய்ந்து, நீண்ட தூர இலக்குகளை துல்லியமாக தாக்கும் திறன் கொண்டவை. தற்போது இந்தியாவிடம் சுமார் 450 கி.மீ. வரை தாக்கும் ஏவுகணைகள் இருந்தாலும், பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும் நோக்கில் இந்த புதிய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழ்நிலை மற்றும் உலகளாவிய பாதுகாப்பு சவால்களை கருத்தில் கொண்டு, எதிர்காலத் தேவைகளை முன்னிட்டு இந்தியா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிகிறது. இந்த திட்டம் இந்திய ராணுவத்தின் தாக்குதல் திறனை மேலும் அதிகரிக்கும் என்றும், தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஈரான் ஏவுகணைத் தாக்குதல்: அபுதாபியில் இந்தியர் உள்ளிட்ட 2 பேர் உயிரிழப்பு

**புதுடெல்லி, மார்ச் 28:**
ஐக்கிய அரபு அமீரகம் நாட்டின் மீது ஈரான் வியாழக்கிழமை நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் அபுதாபியில் இந்தியா உள்ளிட்ட 2 பேர் உயிரிழந்தனர்.



இஸ்ரேல், அமெரிக்க தாக்குதலுக்கு பதிலடியாக ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகளிலுள்ள அமெரிக்க ராணுவ, கடற்படைத் தளத்தை குறிவைத்து ஈரான் ட்ரோன் மூலமும், ஏவுகணைகள் மூலமும் தாக்குதல் நடத்தி வருகிறது. ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபி நகரை குறிவைத்து ஈரான் வியாழக்கிழமை மீண்டும் பேலிஸ்டிக் ரக ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியது.

அந்த ஏவுகணைகளை ஐக்கிய அரபு அமீரகம் இடைமறித்து தாக்கி அழித்தது. அபுதாபி நகரில் வானிலிருந்து ஏவுகணை பாகங்கள் விழுந்து காயமடைந்ததில் இந்தியா ஒருவரும், பாகிஸ்தானியா ஒருவரும் உயிரிழந்தனா. மேலும் ஓா இந்தியா உள்ளிட்ட 3 போ காயமடைந்தனா.

இதுகுறித்து ஐக்கிய அரபு அமீரக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிவில், '15 பேலிஸ்டிக் ரக ஏவுகணைகள், 11 ஆளில்லா ட்ரோன்களை எங்கள் நாட்டின் வான் பாதுகாப்பு அமைப்புகள் இடைமறித்து அழித்தன. இதையும் சோத்து இதுவரை 372 பேலிஸ்டிக் ரக ஏவுகணைகள், 15 க்ரூயிஸ் ரக ஏவுகணைகள், 1,826 ட்ரோன்களை வான் பாதுகாப்பு அமைப்பு இடைமறித்து அழித்துள்ளது. அத்துடன் ஐக்கிய அரபு அமீரக பாதுகாப்புப் படை வீரா்கள் 2 போ உயிரிழந்துள்ளனா். இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 5 நாடுகளைச் சோ்ந்த பொதுமக்கள் 8 போ் உயிரிழந்துள்ளனா். இந்தியா, பாகிஸ்தான், இராக் உள்ளிட்ட நாடுகளைச் சோ்ந்த 169 பொதுமக்கள் காயமடைந்துள்ளனா். எத்தகைய அச்சுறுத்தலையும் எதிா்கொள்ள ஐக்கிய அரபு அமீரகம் தயாராகவும் ஆயத்த நிலையிலும் உள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு சென்னையை சேர்ந்த நிறுவனம் ரூ.1 கோடி நன்கொடை

**திருப்பதி, மார்ச் 28:**
திருப்பதி ஏழுமலையான் கோவில் தேவஸ்தானத்தின் (TTD) ஸ்ரீ வெங்கடேஸ்வரா பிரணாதன அறக்கட்டளைக்கு சென்னையை சேர்ந்த தனியார் நிறுவனம் ரூ.1 கோடி நன்கொடை வழங்கியுள்ளது. இந்த நன்கொடைக்கான காசோலை, திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் (TTD) தலைவர் பி.ஆர். நாயுடுவிடம் அவரது முகாம் அலுவலகத்தில் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக கோவில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "தி சென்னை ஷாப்பிங் மாலின் தலைவர் மர்ரி வெங்கட ரெட்டி, ஸ்ரீ வெங்கடேஸ்வரா பிரணாதன அறக்கட்டளைக்கு ரூ.1 கோடி நன்கொடையாக வழங்கினார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001-ல் நிறுவப்பட்ட வெங்கடேஸ்வரா பிரணாதன அறக்கட்டளை, உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்ட ஏழை நோயாளிகளுக்கு இலவச மருத்துவ வசதிகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## வணிகச் செய்திகள்

### ரூ. 60,000 விலையில் 120 கி.மீ. மைலேஜ் தரும் புதிய ஸ்கூட்டர்! ஸீலியோ எக்ஸ் மென் பிளஸ்!

**புதுடெல்லி, மார்ச் 28:**
ஸீலியோ என்ற மின்னணு இருசக்கர வாகனத் தயாரிப்பு நிறுவனம் புதிய ஸ்கூட்டரை அறிமுகம் செய்துள்ளது. ரூ. 60 ஆயிரம் விலையில் 120 கி.மீ. தூரம் வரை மைலேஜ் தரக்கூடிய வகையில் இந்த ஸ்கூட்டர் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உலகளவில் நிலவும் சமநிலையற்ற பதற்றமான சூழலால் எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாட்டின் பல நகரங்களில் பெட்ரோல், டீசலுக்கு வாகனங்கள் வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறைந்த விலையிலேயே அதிக மைலேஜ் தரும் ஸ்கூட்டரை ஸீலியோ நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. ஒரு முறை முழுமையாக சார்ஜ் செய்தால் 120 கி.மீ. வரை பயணிக்கலாம். இருவரை பேட்டரிகள் உள்ளன. லித்தியம், லீட் பேட்டரி என இருவரை பேட்டரிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதில் லித்தியம் பேட்டரிக்கு 4 - 5 மணி நேரமும், லீட் பேட்டரிக்கு 8 - 10 மணி நேரமும் சார்ஜ் செய்ய வேண்டும். இதில் 1.5 அலகுகள் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது.

180 கிலோ வரை சுமை ஏற்றும் திறன் கொண்டது.

முன்பக்கம் டிஸ்க் பிரேக் மற்றும் பின் பக்கம் டிரம் பிரேக் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால், எடை அதிகமாக இருந்தாலும் பாதுகாப்பான நிறுத்தம் உறுதி செய்யப்படும்.

## 10 ஆண்டுகளில் டில்லி மின்சார மானியச் செலவு இரட்டிப்பாகியுள்ளது

**புதுடெல்லி, மார்ச் 28:**
தில்லியில் வீட்டு உபயோக மின்சார நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், கடந்த பத்தாண்டுகளில் நகர அரசின் மின்சார மானியச் செலவு இரண்டு மடங்கிற்கும் மேலாக உயர்ந்துள்ளது என்று ஓர் அறிக்கை தெரிவிக்கிறது.

நடப்பு நிதியாண்டில் பிப்ரவரி 2026-குள் தில்லி அரசால் வழங்கப்படும் மின்சார மானியத் தொகை ரூ. 4,037.63 கோடி என்று சமீபத்தில் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் தில்லியில் மின்சார நுகர்வோரின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 40 சதவீதம் அதிகரித்து, தற்போது 73 லட்சத்திற்கும் அதிகமாக உள்ளது. மொத்த நுகர்வோரின் விகிதப்படி, வீட்டு உபயோகப் பிரிவு அதிகபட்சமாக 84.1 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

2015-16-இல் தில்லியில் மின்சார நுகர்வோரின் எண்ணிக்கை 52.62 லட்சமாக இருந்தது. இது 2024-25 வரையிலான 10 ஆண்டுகளஇல் 73.61 லட்சமாக அதிகரித்துள்ளது. இது இந்தக் காலகட்டத்தில் 20.99 லட்சம் நுகர்வோர் அதிகரிப்பாகும்.

அறிக்கையின்படி, தில்லியில் சுமார் 47.58 லட்சம் (மாத சராசரி) குடும்பங்கள் மின்சார மானியம் பெற்று வருகின்றன. இது மொத்த வீட்டு மின்சார நுகர்வோரில் 80 சதவீதத்திற்கும் அதிகமாகும்.

நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரித்ததற்கு இணையாக, அரசால் வழங்கப்படும் மானியமும் 2015-16- ஆம் ஆண்டில் ரூ. 1,442.76 கோடியிலிருந்து, பிப்ரவரி 2025-26-ஆம் ஆண்டு வரை ரூ.4,037.62 கோடியாக உயர்ந்துள்ளது.

அறிக்கையின்படி, மானியத் தொகைகள் 2016-17-இல் ரூ. 1,577.94 கோடி, 2017-18-இல் ரூ. 1,676.70 கோடி, 2018-19-இல் ரூ. 1,699.29 கோடி, 2019-20-இல் ரூ. 2,405.59 கோடி, 2020-21-இல் ரூ. 2,939.99 கோடி, 2021-22-இல் ரூ. 3,250 கோடி, 2022-23-இல் ரூ. 3,161.22 கோடி, 2023-24-இல் ரூ. 2,426.65 கோடி, 2024-25-இல் ரூ. 3,600.50 கோடி என இருந்தன. 2026-27 நிதியாண்டில் மின்சார மானியம் ரூ. 3,500 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# கேரள தேர்தல் களத்தில் 890 வேட்பாளர்கள்



திருவனந்தபுரம், மார்ச் 28:

கேரள சட்டப் பேரவைத் தேர்தலில் வேட்புமனுவை திரும்பப் பெறும் கால அவகாசம் வியாழக்கிழமையுடன் (மார்ச் 26) நிறைவடைந்த நிலையில், இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில், 890 வேட்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

140 தொகுதிகளைக் கொண்ட கேரளத்தில் ஏப்.9-ஆம் தேதி ஒரே கட்டமாக பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த மாநிலத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான ஆளும் இடதுசாரி ஜனநாயக முன்னணி தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வரும் முனைப்பில் களமிறங்கியுள்ளது.

அதேநேரம், ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி களம் காண்கிறது. பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் மோதுவதால் மும்முனைப் போட்டி நிலவுகிறது.

இத்தேர்தலையொட்டி வேட்புமனு தாக்கல் சில தினங்களுக்கு முன் நிறைவுற்றது. வேட்புமனுக்களை திரும்பப் பெறும் கால அவகாசம் வியாழக்கிழமையுடன் முடிந்த நிலையில், இறுதி வேட்பாளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

மொத்தம் 2,125 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்த நிலையில், மனுக்கள் மீதான பரிசீலனை மற்றும் மனுக்களைத் திரும்பப் பெறும் நடைமுறைக்குப் பிறகு 890 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். கடந்த 2021 தேர்தலில் 957 பேர் களத்தில் இருந்தனர்.

கோழிக்கோடு மாவட்டம், கொடுவள்ளி தொகுதியில் அதிகபட்சமாக 13 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

2.71 கோடி மொத்த வாக்காளர்களில் அதிகபட்சமாக 40-49 வயதுக்குள்பட்டவர்கள் 56.32 லட்சம் பேர் உள்ளனர். மலப்புரம் மாவட்டத்தில் அதிகபட்சமாக 36 லட்சம் வாக்காளர்களும், வயநாடு மாவட்டத்தில் குறைந்தபட்சமாக 6.43 லட்சம் வாக்காளர்களும் உள்ளனர்.

## ஒன்றாம் வகுப்பு சேர்க்கைக்கான வயது வரம்பில் மாற்றம்: கர்நாடக அரசு உத்தரவு

புதுடெல்லி, மார்ச் 28:

வரும் கல்வியாண்டில் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கை பெறுவதற்கு குழந்தைகளின் வயது ஜூன் 1ஆம் தேதி 6 வயது நிறைவடைந்திருக்க வேண்டும் என்ற விதிமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதாவது, சேர்க்கையில் 60 நாள்களை தளர்த்தியுள்ளது.

இதுகுறித்து கர்நாடக சட்டப் பேரவையில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மது பங்காரப்பா வியாழக்கிழமை தாக்கல் செய்த அறிக்கை:

ஒன்றாம் வகுப்பில் சேர ஜூன் 1 ஆம் தேதி 6 வயதை நிறைவு செய்திருக்க வேண்டும் என்ற விதிமுறையை தளர்த்தும்படி நீண்ட நாள்களாக பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துவந்தனர். இதுதொடர்பாக கர்நாடக அரசிடம் கோரிக்கை மனுவும் அளிக்கப்பட்டது. இதை கருத்தில் கொண்டு, சேர்க்கைக்கான வயது வரம்பை 60 நாள்களுக்கு தளர்த்த கர்நாடக அரசு முடிவு செய்துள்ளது.

அதேபோல எல்.கே.ஜி., யூ.கே.ஜி. வகுப்புகளில் மாணவர்களை சேர்ப்பதிலும் சில சிக்கல்கள் உள்ளன. இந்த பிரச்னைக்கு தீர்வுகாண வெகுவிரைவில் புதிய சட்டம் கொண்டு வரப்படும். சேர்க்கைக்கான வயது வரம்பை 60 நாள்களுக்கு தளர்த்தியுள்ளது ஒன்றாம் வகுப்பு மட்டுமல்லாது எல்.கே.ஜி., யூ.கே.ஜி. வகுப்புகளுக்கும் பொருந்தும். சேர்க்கை விதிமுறைகளில் எல்.கே.ஜி. மற்றும் யூ.கே.ஜி. வகுப்புகள் இல்லை. எனவே, அந்த வகுப்புகளையும் சேர்க்கை வரம்புக்குள் கொண்டுவர புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்றார்.

## எல்.பி.ஜி. வாயுவுடன் புதிய மங்களூர் துறைமுகம் வந்த சரக்கு கப்பல்

புதுடெல்லி, மார்ச் 28:

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. இதனை தொடர்ந்து ஈரான் நடத்தி வரும் பதிலடி தாக்குதல்களால் இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் அவற்றின் படை தளங்கள் அமைந்த வளைகுடா நாடுகள் பாதிக்கப்பட்டு உள்ளன.

இதன் ஒரு பகுதியாக, உலக நாடுகளுக்கு சரக்கு கப்பல் செல்ல கூடிய முக்கிய ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. மீறி செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் சூழல் காணப்படுகிறது. இதனால், பல்வேறு நாடுகளிலும் எரிபொருள் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு உள்ளிட்ட சிக்கல்கள் எழுந்துள்ளன. எனினும், பரஸ்பர நட்பு அடிப்படையில் இந்தியா உள்ளிட்ட நேசக்கரம் நீட்டிய நாடுகளுக்கு, கப்பல் போக்குவரத்துக்கான அனுமதியை ஈரான் அளித்து வருகிறது. இந்நிலையில், எல்.பி.ஜி. வாயுவை சுமந்து கொண்டு அப்போலோ ஓசன் என்ற சரக்கு கப்பல் புதிய மங்களூர் துறைமுகத்திற்கு இன்று வந்தடைந்து உள்ளது. இதனால், சமையல் கியாஸ் சிலிண்டருக்கு தேவையான எல்.பி.ஜி. வாயு கிடைப்பதில் உள்ள சிக்கல் தளர்வடைந்து, வினியோகத்திற்கான பாதிப்பு குறைந்துள்ளது. வியட்நாம் கொடியுடன் பயணித்து வந்த அந்த கப்பல், புதிய மங்களூர் துறைமுகத்தில் பாதுகாப்புடன் நிறுத்தப்பட்டு உள்ளது.

ஏற்கனவே 92,712 டன் எல்.பி.ஜி.யுடன் ஷிவாலிக் மற்றும் நந்தாதேவி ஆகிய இரு கப்பல்கள், இந்தியாவின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சமீபத்தில் வந்து சேர்ந்தன. அவற்றுடன் ஜெக வசந்த் மற்றும் பைன் கியாஸ் ஆகிய இரு கப்பல்களும் 92,612.59 டன் எல்.பி.ஜி.யுடன் இந்தியாவை நோக்கி பயணித்து கொண்டிருக்கின்றன.

## மக்கள்தொகை கணக்கெடுப்பு: முறையற்ற கேள்விகளை எழுப்பும் அலுவலருக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை!

புதுடெல்லி, மார்ச் 28:



'2027 மக்கள்தொகை கணக்கெடுப்பின்போது மக்களின் மனதைப் புண்படுத்தக்கூடிய வகையில் முறையற்ற கேள்விகளை எழுப்பும் அலுவலருக்கு அதிகபட்சமாக 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்' என்று இந்திய பதிவுத் துறைத் தலைவர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய பதிவுத் துறைத் தலைவரும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ஆணையருமான மிருத்யுஞ்ஜயகுமார் நாராயண் சார்பில் அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியின்போது உள்நோக்கத்துடன் மக்களின் மனதைப் புண்படுத்தக் கூடிய வகையில் முறையற்ற கேள்விகளை எழுப்பினாலோ அல்லது அறிந்தே ஏதாவது தவறான அறிக்கையை சமர்ப்பித்தாலோ அல்லது கணக்கெடுப்பின்போது பெறப்பட்ட தகவல்களை மத்திய அரசு அல்லது மாநில அரசின் முன் அனுமதி இன்றி வெளியிட்டாலோ மக்கள்தொகை கணக்கெடுப்பு சட்டப் பிரிவு 11-இன் கீழ் ரூ. 1,000 அபராதம் முதல் அதிபட்சமாக 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனை விதிக்கப்படும். மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியில் முறையாக ஈடுபடாமலும் அரசு உத்தரவுகளைப் பின்பற்றாமலும் அல்லது மற்ற அலுவலர்களின் பணிக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயல்படும் அலுவலர்களுக்கும் அதே தண்டனை விதிக்கப்படும்.

மேலும், சேகரிக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு தரவுகளை சேதப்படுத்துகிற வகையில் அல்லது அழிக்கின்ற வகையில் நடந்துகொள்ளும் அல்லது மக்கள்தொகை கணக்கெடுப்பு முடிவுகளைத் திரித்தல் அல்லது சிதைக்கின்ற வகையில் செயல்படும் ஊழியர்களுக்கும் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வரும் 2027-ஆம் ஆண்டு பிப்ரவரியில் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. முதன் முறையாக எண்ம முறையில் நடத்தப்படும் இந்த கணக்கெடுப்பில், மக்களின் ஜாதிவாரி விவரங்களும் சேகரிக்கப்பட உள்ளன. இந்தப் பணிக்காக ரூ. 11,718 கோடி ஒதுக்கியுள்ளது.

## பாஜகவுக்கு ரூ. 6,074 கோடி நன்கொடை! மற்ற கட்சிகளின் கூட்டுத் தொகையைவிட 10 மடங்கு அதிகம்!

புதுடெல்லி, மார்ச் 28:



கடந்த நிதியாண்டில் பாஜக ரூ. 6,074 கோடி நன்கொடை பெற்றிருப்பதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

நிதியாண்டு 2024 - 25இல் அரசியல் கட்சிகளின் நன்கொடை குறித்த விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு வெளியிட்டுள்ளது.

தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் அறிக்கையின்படி, 2024 - 25 நிதியாண்டில் காங்கிரஸ், ஆம் ஆத்மி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய மக்கள் கட்சி (NPP) உள்ளிட்ட மற்ற 4 கட்சிகளின் மொத்த நன்கொடைகளைவிட, பாஜகவின் நன்கொடை சுமார் 10 மடங்கு அதிகமாகும். மேலும், 2023 - 24 நிதியாண்டில் பாஜகவின் ரூ. 2,243 கோடியைவிடவும் சுமார் 171 சதவிகிதம் அதிகம்.

2024 -25 நிதியாண்டில் தேசிய கட்சிகள், 11,343 நன்கொடைகள் மூலம் ரூ. 6,648.563 கோடியை நன்கொடையாகப் பெற்றுள்ளன.

இவற்றில் பாஜகவுக்கு 5,522 நன்கொடைகள் மூலம் மொத்தம் ரூ. 6,074.015 கோடியும், காங்கிரஸுக்கு 2,501 நன்கொடைகள் மூலம் ரூ. 517.394 கோடியும் பெற்றுள்ளன. 2023 -24 நிதியாண்டைவிட, 2024 25 நிதியாண்டில் 161 சதவிகிதம் அதிகரித்து, ரூ. 4,104.285 கோடி உயர்ந்துள்ளதாகவும் அறிக்கை கூறுகிறது.

தேசிய கட்சிகளுக்கு தில்லியிலிருந்து மொத்தம் ரூ. 2,639.481 கோடியும், மகாராஷ்டிரத்திலிருந்து ரூ. 2,438.86 கோடியும், குஜராத்திலிருந்து ரூ. 309.177 கோடியும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

# டெல்லியில் 459 கேஸ் சிலிண்டர்கள் பறிமுதல்

புதுடெல்லி, மார்ச் 28:



மேற்காசிய போர் நிலவரம் காரணமாக கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ள சூழலில், சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவுக்கு கட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு அவசரகால நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

வீட்டு உபயோக சிலிண்டருக்கு முன்னுரிமை அளித்தும், வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டருக்கும் கடுமையான கட்டுப்பாடுகளையும் விதித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. முக்கிய நேரத்தில் அமல்படுத்தப்படும் அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டத்தை (எஸ்மா) மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது.

இந்தநிலையில், டெல்லியின் புறநகர்ப் பகுதியான ரன்ஹோலா பகுதியில் எல்பிஜி சிலிண்டர்களைப் பதுக்கி வைத்து கள்ளச் சந்தையில் விற்றதாகக் கூறப்படும் எரிவாயு முகமை உரிமையாளர் (விநியோகஸ்தர்) மீது டெல்லி காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. நேற்று நடத்தப்பட்ட சோதனையின்போது 459 சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டது. எச்.பி. பாலாஜி கேஸ் ஏஜென்சியின் உரிமையாளரான சுஷில் குமார் சிங்ஹால் என அடையாளம் காணப்பட்ட அந்த நபர், வர்த்தக எல்பிஜி சிலிண்டர்களை சட்டவிரோதமாக சேமித்து வைப்பதிலும் தவறாகப் பயன்படுத்துவதிலும் ஈடுபட்டது கண்டறியப்பட்டதாக காவல்துறை அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எல்பிஜி தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்ற கவலைகளுக்கு மத்தியில், பெரிய அளவிலான பதுக்கல் குறித்த குறிப்பிட்ட உளவுத் தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக காவல்துறை கூறியுள்ளது. "ரன்ஹோலாவில் உள்ள நிலோதி சாலையில் அமைந்துள்ள எரிவாயு ஏஜென்சியில் சோதனை நடத்தப்பட்டது.

அங்கு இன்டேன் மற்றும் பாரத் பெட்ரோலியம் நிறுவனங்களுக்குச் சொந்தமான 459 காலி எல்பிஜி சிலிண்டர்கள் மீட்கப்பட்டன".

கைப்பற்றப்பட்ட சிலிண்டர்களில் 284 இன்டேன் எரிவாயு சிலிண்டர்களும், 175 பாரத் பெட்ரோலியம் சிலிண்டர்களும் அடங்கும் என்று காவல்துறை தெரிவித்துள்ளது. மேலும், உரிய நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு உணவு வழங்கல் அதிகாரி சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டதாகவும் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மீட்கப்பட்ட சிலிண்டர்கள், பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின்படி ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கேஸ் நிறுவனத்தின் பிரதிநிதிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்தனர்.

## 'வந்தே பாரத்' ரெயிலில் விற்கப்பட்ட தயிர் பாக்கெட்டில் நெளிந்த புழு... ஒப்பந்தத்தை ரத்து செய்த ரெயில்வே

புதுடெல்லி, மார்ச் 28:

கடந்த மார்ச் 15-ந்தேதி, 'வந்தே பாரத்' ரெயிலில் பயணித்த ரித்தேஷ் சிங் என்பவருக்கு ரெயிலில் இரவு உணவுடன் சேர்த்து ஒரு தயிர் பாக்கெட் வழங்கப்பட்டுள்ளது. அந்த பாக்கெட்டைத் திறந்தபோது, அதற்குள் உயிருள்ள புழுக்கள் நெளிந்து கொண்டிருப்பதைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்தார்.

இந்நிலையில் ரித்தேஷ் சிங், உடனடியாக தனது 'எக்ஸ்' பக்கத்தில் இது குறித்து வீடியோ பதிவிட்டு, ஐ.ஆர்.சி.டி.சி., ரெயில்வே மந்திரி ஆகியோரை அதில் டேக் செய்திருந்தார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவிய நிலையில், இதில் தொடர்புடையவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலர் கோரிக்கை விடுத்து வந்தனர். இதைத் தொடர்ந்து ஐ.ஆர்.சி.டி.சி. நிர்வாகம், சம்பந்தப்பட்ட உணவு விற்பனை நிறுவனத்திற்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதித்தது. ஆனால் ஐ.ஆர்.சி.டி.சி. நிர்வாகத்தின் நடவடிக்கை திருப்திகரமாக இல்லை என்று கருதிய ரெயில்வே நிர்வாகம், சம்பந்தப்பட்ட உணவு விற்பனை நிறுவனத்திற்கான ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்ய ஐ.ஆர்.சி.டி.சி.க்கு அதிரடியாக உத்தரவிட்டது.

மேலும், அந்த நிறுவனத்திற்கு விதிக்கப்பட்ட அபராதத்தை 25 ஆயிரம் ரூபாயில் இருந்து 50 லட்சம் ரூபாயாக உயர்த்த ரெயில்வே அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. அதோடு, சேவை குறைபாடு காரணமாக ஐ.ஆர்.சி.டி.சி. நிர்வாகத்திற்கு 10 லட்சம் ரூபாய் அபராதம் விதித்து ரெயில்வே அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சோனியா காந்தி உடல்நிலையில் முன்னேற்றம்: டெல்லி மருத்துவமனை தகவல்

புதுடெல்லி, மார்ச் 28:

டெல்லி கங்கா ராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தியின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சோனியா காந்தி (79) காய்ச்சல் காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 10:22 மணியளவில் கங்கா ராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வானிலையில் ஏற்பட்ட மாற்றமே அவரது உடல்நலக்குறைவுக்கு காரணம் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் கங்கா ராம் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் அஜய் ஸ்வரூப் நேற்று கூறுகையில், "கடந்த மார்ச் 24ம் தேதி இரவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சோனியா காந்திக்கு, உடலில் பரவியுள்ள நோய்த் தொற்றை கட்டுப்படுத்த ஆன்ட்டி பயாடிக் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அந்தச் சிகிச்சைக்கு அவர் சிறப்பாக ஒத்துழைத்து வருகிறார். அவரது உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மூத்த மருத்துவர்கள் குழுவின் கண்காணிப்பில் அவர் இருந்து வருகிறார். அக்குழுவினர் அவரது உடல்நிலையை உன்னிப்பாக கவனித்து வருகின்றனர்" என்றார்.

## நாடு முழுவதும் ரூ.408 கோடி பறிமுதல்: தேர்தல் ஆணையம் தகவல்



புதுடெல்லி, மார்ச் 28:

தலைமை தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தல் மற்றும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு 'மின்னணுப் பறிமுதல் மேலாண்மை அமைப்பு' (ESMS) பிப்ரவரி 26-ம் தேதி செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த அமைப்பு செயல்பாட்டுக்கு வந்ததிலிருந்து, ரூ.17.44 கோடி ரொக்கம், ரூ.37.68 கோடி மதுபானங்கள் (16.3 லட்சம் லிட்டர்கள்), ரூ.167.38 கோடி மதிப்புள்ள போதைப்பொருட்கள், ரூ.23 கோடி மதிப்புள்ள விலைமதிப்புமிக்க உலோகங்கள் மற்றும் ரூ.163.30 கோடிக்கு அதிகமான பிற பொருட்கள் என ரூ.408.82 கோடி மதிப்புள்ள சட்டவிரோதப் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பிரதமர் மோடியை அவமதிக்கும் வகையில் ஏஐ வீடியோ: எக்ஸ் சமூக வலைதளம் மீது வழக்கு

திருவனந்தபுரம், மார்ச் 28:

பிரதமர் மோடி, தேர்தல் ஆணையத்தை அவமதிக்கும் வகையில் ஏஐ வீடியோ வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து எக்ஸ் சமூக வலைதளம் மீது கேரள சைபர் பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கேரளாவில் பிரதமர் மோடி, தலைமைத் தேர்தல் ஆணைய செயல்பாடுகளை அவமதிக்கும் விதமாக ஏஐ வீடியோ தயார் செய்யப்பட்டு அது எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வீடியோவானது பொதுமக்களைத் திசைதிருப்பவும், அரசியலமைப்பு அமைப்புகளின் நம்பகத்தன்மையைச் சீர்குலைக்கவும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கு பாதகமாகவும் இருப்பதாக கேரள சைபர் பிரிவு போலீஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து வீடியோ வெளியான எக்ஸ் சமூக வலைதள பயனாளர் லஷ்மி என் ராஜூ, எக்ஸ் வலைதளம் மீது திருவனந்தபுரத்திலுள்ள சைபர் கிரைம் போலீஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஈரானின் வான், கடல் படைகள் தலைமை... அனைத்தும் போய் விட்டன - டிரம்ப்

**வாஷிங்டன், மார்ச் 28:**

அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து, ஈரானை வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. இதற்கு பதிலடியாக அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் தளங்கள் அமைந்த பகுதிகள் மீது ஈரானும் கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே 4 வாரங்களாக போர் நீடித்து வந்த நிலையில், சமீபத்தில், 5 நாட்களுக்கு தாக்குதல் நிறுத்தப்படும் என டிரம்ப் கூறினார். அமெரிக்காவும் ஈரானும் மிக நல்ல மற்றும் ஆக்கப்பூர்வ முறையிலான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. இந்த விரிவான, பயனுள்ள பேச்சுவார்த்தைவாரம் முழுவதும் தொடர கூடும்.




அதனடிப்படையில், ஈரான் அணு உலைகள் மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீது நடத்தப்படும் அனைத்து ராணுவ தாக்குதல்களையும் 5 நாட்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று போர் துறைக்கு நான் உத்தரவிட்டு உள்ளேன் என அவர் தெரிவித்தார். ஆனால் ஈரானோ, அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே எந்த பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை என கூறி வருகிறது. இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் பேசிய விசயங்களை வெள்ளை மாளிகை செய்தியாக வெளியிட்டு உள்ளது. அதில் டிரம்ப் பேசும்போது, 2-ம் உலக போருக்கு பின்னர் வெளிநாட்டு கடற்படை ஒன்று தகர்க்கப்பட்டு உள்ளது. ஈரானின் கடற்படை மூழ்கடிக்கப்பட்டு விட்டது. அவர்களுடைய விமான படையும் போய் விட்டது. அவர்களுடைய விமானங்களை தாக்கி அழிக்கும் சாதனங்கள் மற்றும் தொலைதொடர்பு திறன்கள் முற்றிலும் தகர்க்கப்பட்டு விட்டன.

அவர்களுடைய அனைத்து தலைமையும் முடிந்து விட்டது. முதல் மட்டத்தில் இருந்த எல்லாமும் போய் விட்டன. அவர்கள் புதிய மட்டத்திலான தலைமையை தேர்ந்தெடுக்கும் நிலையில் உள்ளனர். அதற்கான வேலையில் ஈடுபட்டு உள்ளனர். அவர்கள் அனைவரும் போய் விட்டனர். ஏனென்றால், அவர்கள் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி இருக்க வேண்டும். ஆனால், அதனை அவர்கள் செய்யவில்லை.

அவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள். உண்மையில் அவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள்.. பி-2 விமானங்களை கொண்டு நாங்கள் அப்போது அவர்களை தாக்கவில்லை என்றால், அணுசக்தியை அவர்கள் வைத்திருப்பார்கள். எந்தவித கேள்வியே இல்லாமல் அதனை பயன்படுத்தி தாக்கியிருப்பார்கள் என டிரம்ப் கூறினார்.

# அழகி போட்டியில் திடீரென கழன்று வந்த பல்: உண்மையான அழகி நீங்கள்தான் என புகழாரம்



**தாய்லாந்து, மார்ச் 28:**

தாய்லாந்து நாட்டில் மிஸ் கிராண்ட் தாய்லாந்து 2026 என்ற அழகிப்போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் கலந்து கொண்ட போட்டியாளர் கமோல்வான் சனகோ மேடையில் தன்னை அறிமுகப்படுத்த வருகை தந்தார். அப்போது அவரின் செயற்கை பற்கள் திடீரென கழன்றது. நேரலையில் நடந்த இந்த சம்பவத்தை கண்ட நடுவர்களும் பார்வையாளர்களும் அதிர்ச்சியடைந்தனர். இந்த சம்பவத்தின் வீடியோ சமூக ஊடகங்களில் வைரலானது. பலரும் அந்த போட்டியாளரான கமோல்வான் சனகோவை உண்மையான அழகி என்றும் புகழ்ந்தனர்.

காரணம், ஒரு மேடையில் அதுவும் மிகப்பெரிய நிகழ்வில் தான் பேச வந்தபோது நடைபெற்ற இந்த சம்பவத்தைக் கண்டு கமோல்வான் சனகோ கொஞ்சம் கூட பதற்றப்பட்டாமல் அமைதியாக அந்த சூழலை கையாண்டார். பற்கள் கழன்று விழுந்ததும் அவர் மேடையை விட்டு விலகி செல்வார் என பலரும் எதிர்பார்த்த நிலையில் கமோல்வான் சனகோ சில வினாடிகள் பின்னால் திரும்பி தனது பற்களை சரி செய்து பேச தொடங்கினார்.

இந்த சம்பவம் அவருக்கான பாராட்டுகளை பெற்று தந்துள்ளது. மேலும் கம்பீரமாகப் பேசி முடித்த அழகியின் தன்னம்பிக்கைக்கு சமூகவலைதளங்களில் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

# உலகின் மாசுபட்ட நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தான் முதலிடம்; இந்தியா எந்த இடம்?

**ஜெனீவா, மார்ச் 28:**

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஐ.கு. ஏர் நிறுவனம் உலக காற்றுத் தர அறிக் கையை வருடந்தோறும் வெளியிட்டு வருகிறது. 2025-ம் ஆண்டுக்கான பட்டி யலை அது வெளியிட்டது. புதிய அறிக்கையின்படி பாகிஸ்தான் உலகின் மிகவும் மாசுபட்ட நாடாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து வங்காளதேசம் இரண்டாம் இடத்தில் உள்ளது. தஜிகிஸ்தான் நாடு 3-ம் இடத்தை பிடித்துள்ளது.

இந்தப் பட்டியலில் இந்தியா 6-வது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவின் லோனி நகரம் உலகின் மிகவும் மாசுபட்ட நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாகனப் புகை, தொழிற்சாலைக் கழிவுகள், கட்டுமானப் புழுதி மற்றும் பயிர்க் கழிவுகளை எரித்தல் ஆகியவை தெற்காசியாவில் காற்று மாசிற்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன. உலகளவில் 143 நாடுகளில் வெறும் 13 நாடுகள் மட்டுமே உலக சுகாதார நிறுவனத்தின் காற்றுத் தர வழிகாட்டுதல்களைப் பூர்த்தி செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய ஈரான் மக்களுக்கு தடை

**கான்பேரா, மார்ச் 28:**

ஈரான் நாட்டவர் சுற்றுலா விசா மூலம் ஆஸ்திரேலியா வருவதற்கு 6 மாத கால தடையை அந்த நாட்டின் அரசு விதித்துள்ளது. போர் தொடங்கியதில் இருந்து ஈரான் நாட்டவர்கள் 7,200 பேர் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய சுற்றுலா விசாவுக்கு விண்ணபித்திருந்தனர்.

போர்ப் பதற்றம் மற்றும் நிலையற்ற சூழல் காரணமாக சுற்றுலா விசாவில் வருபவர்கள் மீண்டும் தங்கள் நாட்டிற்குத் திரும்பாமல் ஆஸ்திரேலியாவிலேயே தங்கிவிடக்கூடும் என்று அந்த நாட்டின் உளவுத்துறைக்கு துப்பு கிடைத்தது.

இதனை தொடர்ந்து ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய அடுத்த 6 மாதங்களுக்கு ஈரான் நாட்டவர்களுக்கு விசா அளிக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஆஸ்திரேலியாவிற்குள் இருக்கும் ஈரானியர்களுக்கு இந்த தடை பொருந்தாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பள்ளியைத் தாக்கியது போர்க்குற்றம்: ஈரான் வெளியுறவுத்துறை

**தெஹ்ரான், மார்ச் 28:**

மேற்காசிய போரில் ஈரானின் பள்ளிக்கூடம் மீது நடத்திய தாக்குதல் ஒரு போர்க்குற்றம் என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் சையத் அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

ஈரான் - இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையேயான போர் கடந்த மார்ச் 28 ஆம் தேதி தொடங்கப்பட்டது. போர் தொடங்கிய முதல் நாளிலேயே ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார்.

அதே நாளில், அமெரிக்காவின் டோமாஹாக் ஏவுகணை மூலம் ஈரானின் மினாப் நகரத்திலுள்ள பள்ளிக்கூடத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில், ஏராளமான குழந்தைகள் உள்பட 165-க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 49வது கூட்டம் - 61வது அமர்வின் ஒரு பகுதியாக நடைபெறும், குழந்தைகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் பாதுகாப்பு குறித்த அவசர விவாதத்தில் இந்தச் சம்பவம் குறித்து பேசிய ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் சையத் அப்பாஸ் அராக்சி, “இந்த ஆக்கிரமிப்புப் போர் அப்பட்டமாக நியாயமற்றது. அமெரிக்காவும் இஸ்ரேலும் பிப்ரவரி 28 அன்று இந்த ஆக்கிரமிப்பைத் தொடங்கின.

ஈரானின் மினாப் நகரத்திலுள்ள பள்ளிக்கூடத்தின் தொடக்கப் பள்ளியைக் குறிவைத்தது ஒரு போர்க்குற்றம். அது அனைவராலும் நிபந்தனையற்ற கண்டனத்திற்குரியது. அது ஒரு சாதாரண நிகழ்வோ அல்லது தவறான கணிப்போ அல்ல” எனத் தெரிவித்தார்.

# ஈரான் மீது 10 நாட்களுக்கு தாக்குதல் நடத்தப்படாது: டிரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், மார்ச் 28:**

வளைகுடா பிராந்தியத்தில் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் நடத்தி வரும் போர் உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. எனவே இதை உடனடியாக முடிவுக்கு கொண்டு வருமாறு சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. இந்த போரை முடிவுக்கு கொண்டுவர பாகிஸ்தான் மற்றும் எகிப்து நாடுக ளின் மத்தியஸ்தத்தின் பேரில் அமைதி பேச்சுவார்த்தை நடந்து வருவ தாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அறிவித்து உள்ளார்.



இதற்காக 15 அம்ச திட்டத்தை அமெரிக்கா வகுத்தது. ஈரானுக்கு எதிரான பொருளாதார தடை நீக்கம், ஈரானின் அணுசக்தித் திட்டத்தை கைவிடு தல், ஏவுகணைகள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் ஹார்முஸ் நீரிணையை மீண்டும் திறத்தல், ஆயுதக்குழுக்களுக்கு ஈரான் வழங்கி வரும் ஆதரவை நிறுத்துதல் போன்றவை முக்கியமாக இடம்பெற்று உள்ளன. ஆனால் அமைதி பேச்சுவார்த்தை நடைபெறவில்லை என நிராகரித்த ஈரான், அமெரிக்காவின் இந்த 15 அம்ச திட்டத்தையும் நிராகரித்தது. ஆனால் ஈரான் மறைமுக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக டிரம்ப் கூறி வருகிறார். இந்த நிலையில், தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள டிரம்ப், வரும் ஏப்ரல் 06 ஆம் தேதி வரை ஈரான் மீது தாக்குதல் நடத்தப்படாது என்று கூறியுள்ளார். ஈரான் கோரிக்கையை ஏற்று இந்த போர் நிறுத்தம் செய்யப்பட்டு உள்ளதாகவும், பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும், டிரம்ப் கூறியுள்ளார்.

# அபுதாபியில் குறையாத போர் பதற்றம்.. மேலும் ஒரு இந்தியர் பலி

**அபுதாபி, மார்ச் 28:**

அபுதாபியில் ஏவுகணை வெடித்து பாகங்கள் சிதறியதில் இந்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும், பாகிஸ்தானை சேர்ந்த ஒருவரும் உயிரிழந்துள்ளார். அபுதாபியின் ஸ்வைஹான் தெருவில் இன்று வான் பாதுகாப்பு படையினரால் ஏவுகணை இடைமறிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது விழுந்த ஏவுகணை சிதறல்களால், இந்தியர் உள்பட இருவர் உயிரிழந்ததுடன், மூவர் காயமடைந்தனர். மேலும் அந்தப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல கார்கள் சேதமடைந்திருக்கின்றன. காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஏவுகணை எந்த இடத்திலிருந்து ஏவப்பட்டது, அதன் பின்னணி குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்கா: இனிமேல் டாலர் கரன்சியில் டிரம்ப் கையெழுத்து!



அமெரிக்க நாட்டின் கரன்சியில் அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் கையெழுத்து இடம்பெறவிருப்பதாக அறிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் 1861-ல்தான் டாலர் கரன்சி அறிமுகம் செய்யப்பட்டது. அன்றுமுதல் இன்றுவரையில், டாலர் கரன்சியில் அந்நாட்டு கருவூலச் செயலாளர் மற்றும் கருவூலப் பொருளாளரின் கையெழுத்து மட்டுமே இடம்பெற்றிருக்கும்.

இந்த நிலையில், அமெரிக்கா சுதந்திரமடைந்து 250 ஆண்டுகள் ஆனதைக் கொண்டாடும்விதமாக, இனி வரும் அமெரிக்க டாலர் கரன்சியில் அதிபர் டிரம்ப்பின் கையெழுத்து இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, 100 டாலர் கரன்சியில் மட்டும் டிரம்ப் கையெழுத்து இடம்பெறும் நிலையில், தொடர்ந்து படிப்படியாக மற்ற கரன்சிகளிலும் டிரம்ப் கையெழுத்து இடம்பெறுகிறது. சமீபத்தில், டிரம்ப்பின் உருவம் பொறிக்கப்பட்ட ஒரு நினைவு தங்க நாணயம் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஈரானின் கடற்படை தளபதி கொலை! இஸ்ரேல் அறிவிப்பு!

**தெஹ்ரான், மார்ச் 28:**

இஸ்ரேலின் தாக்குதலில், ஈரானின் புரட்சிகர காவல் படையின் கடற்படைத் தளபதி அலிரேசா டங்சிரி கொல்லப்பட்டதாக, இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் படைகள் இணைந்து நடத்திய கூட்டுத் தாக்குதல்களில், ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். இதையடுத்து, வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் உள்ளிட்ட கட்டமைப்புகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனைத் தொடர்ந்து, கச்சா எண்ணெய் உள்ளிட்ட எரிபொருள் விநியோகத்திற்கு முக்கிய வழிப்பாதையான ஹோர்முஸ் நீரிணையை ஈரானின் கடற்படையினர் முடக்கினர். இதனால், சர்வதேச அளவில் எரிபொருள் தட்டுப்பாடு உருவாகியுள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில், ஹோர்முஸ் நீரிணை முடக்கப்படுவதற்கு முக்கிய காரணமான ஈரானிய புரட்சிகர காவல்படையின் கடற்படைத் தளபதி அலிரேசா டங்சிரி கொல்லப்பட்டதாக, இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் வியாழக்கிழமை (மார்ச் 26) தெரிவித்துள்ளார்.

இதுபற்றி, அவர் கூறுகையில், நேற்று இரவு இஸ்ரேல் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஈரானின் புரட்சிகர காவல்படையின் தளபதி அலிரேசா டங்சிரி உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் கொல்லப்பட்டனர் எனக் கூறியுள்ளார்.

# வங்காளம் உட்பட 11 மொழி பேசும் மனித ரோபோ - முதல் பெண்மணிகள் மாநாட்டில் அறிமுகம் செய்தார் மெலனியா ட்ரம்ப்

**வாஷிங்டன், மார்ச் 28:**

அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற முதல் பெண் மணிகள் மாநாட்டில், வங்காள மொழி உட்பட 11 மொழிகள் பேசும் மனித ரோபோ அறிமுகம் செய்யப்பட்டது. உலகளாவிய கூட்டணியை ஏற்படுத்த 45 நாடுகளின் முதல் பெண்மணிகள் பங்கேற்கும் மாநாடு அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் நேற்று நடைபெற்றது.

இதில் ஃபிகர் என்ற அமெரிக்க ரோபோட்டிக்ஸ் நிறுவனம் உருவாக்கிய மனித ரோபோ, வெள்ளை மாளிகையின் முதல் ரோபோ விருந்தாளியாக அறிமுகம் செய்யப்பட்டது. இந்த ரோபோ, மாநாட்டுக்கு தலைமை தாங்கிய மெலனியா ட்ரம்ப்புடன் இணைந்து வந்தது.



‘ஃபிகர் 3’ என்று பெயரிடப்பட்ட இந்த மனித ரோபோ, கூட்டத்தில் பங்கேற்ற வெளிநாடுகளைச் சேர்ந்த முதல் பெண் மணிகளை ஆங்கிலம், ஸ்பேனிஷ், பிரெஞ்சு, போர்ச்சுகீஸ், அராபிக், ஜாப்பனீஸ், ஹீப்ரூ, ஸ்லோவேனி, உக்ரேனியன், ஜார்ஜியன் உட்பட 11 மொழிகளில் வரவேற்றது.

அது வங்காள மொழியில் ‘ஸ்வாகதம்’ என கூறியது. இந்த மனித ரோபோ வீட்டு வேலைகளை செய்வதற்காக உருவாக்கப்பட்ட இயந்திரம். இதில் கேமிராக்கள் மற்றும் உணர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில் அமெரிக்கா அதிபர் ட்ரம்ப்பின் மனைவி மெலனியா பேசியதாவது: என்னுடன் இணைந்ததற்காக ‘ஃபிகர் 3’-க்கு நன்றி. நீதான் வெள்ளை மாளிகைக்கு வந்த அமெரிக்காவில் தயாரான முதல் மனித ரோபோ விருந்தாளி. கற்றலுக்கான செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு, மனித ரோபோ ஆசிரியர்கள், அமெரிக்க பொருளாதாரத்தை ஊக்குவிப்பதில் தொழில்நுட்பம் மற்றும் கல்வியின் பங்கு ஆகியவைதான் அடுத்த தலைமுறையை உருவாக்கும் 3 முக்கிய தூண்கள். செயற்கை நுண்ணறிவின் எதிர்காலம் மனித உருவம் கொண்டது.

அது மனித வடிவிலேயே அமையும். மிக விரைவில், செயற்கை நுண்ணறிவு நமது செல்போன்களிலிருந்து வெளியேறி, மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடிய மனித ரோபோக்களாக மாறும். இவ்வாறு அவர் கூறினார்.



# அதிமுக இரண்டாம் கட்ட வேட்பாளர் பட்டியல் வெளியீடு!

# அயோத்தி ராமர் சிலை நெற்றியில் சூரிய திலகம்





# சோனியா காந்தியின் உடல்நிலையில் முன்னேற்றம்

# ‘செயற்கை எரிபொருள்’ - எரிசக்தி துறையில் ஒரு புதிய சகாப்தம்!

# 800 கி.மீ தூரத்தை தாக்கும் ஏவுகணைகள்: இந்தியா புதிய திட்டம்

## பாஜகவுக்கு ரூ. 6,074 கோடி நன்கொடை! மற்ற கட்சிகளின் கூட்டுத் தொகையைவிட 10 மடங்கு அதிகம்!


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை | 28.03.2026 சனிக்கிழமை | இலவச இ-பேப்பர்